விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 06 வியாழக்கிழமை (19.04.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 121

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## மீண்டும் யுத்தம் ஏற்படாத வகையில் சகல இனங்களுக்குமிடையில்
# நல்லிணக்கத்தை ஏற்படுத்தியுள்ளோம்
## லண்டனில் ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

*(லண்டன்)*

*மீண்டும் யுத்தம் ஏற்படாத வகையில் சகல இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி வன்முறைகளற்ற சமூகத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்துள்ளோம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன லண்டனில் வைத்து தெரிவித்துள்ளார்.*

*(23ஆம் பக்கம் பார்க்க)*



### தீக்காயத்துக்குள்ளான
## 7 பிள்ளைகளின் தாயார் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தீக் காயத்துக்குள்ளான ஏழு பிள்ளைகளின் தாயொருவர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவத்தில் அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த ஏழு பிள்ளைகளின் 23

## ஈரான் சபாநாயகர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

ஈரான் நாடாளுமன்றின் சபாநாயகர் மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார்.

நேற்று இரவு 7.10 மணியளவில் அவர் கட்டுநாயக்க விமான நிலையம் வந்தடைந்தார். 23

## அரசை உடனடியாக கவிழ்க்க வேண்டும்
### வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

அடுத்த பொதுத் தேர்தல் நடத்தப்படும் வரை காத்திருக்காது உடனடியாக அரசாங்கத்தை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் பொதுச் செயலாளரான நாடாளுமன்ற 23

## அரசாங்க அதிபர்; முதல்வர் ஆனோல்ட் நாளை சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர அபிவிருத்தி தொடர்பில் நாளை வெள்ளிக்கிழமை யாழ்.மாநகர சபை முதல்வர், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள், அதிகாரிகள் இடையே சந்திப்பொன்று 24

## மன்னார் விடத்தல் தீவு பகுதியில் மழையுடன் மினி சூறாவளி



### வீடுகள் சேதம், தொலைபேசி கம்பங்களும் முறிந்து விழுந்தன

(மல்லாவி)

மன்னார் விடத்தல்தீவு பகுதியில் திடீரென ஏற்பட்ட மழையுடன் கூடிய மினி சூறாவளியால் கிராம அலுவலரின் அலுவலகம் மற்றும் கிராம மக்களின் சிலரது வீடுகளினது வீட்டுக் கூரைகள் தூக்கி வீசப் 24

### அண்மையில் விடுவிக்கப்பட்ட
## வலிகாமம் வடக்கு பகுதியில் மோட்டார் குண்டுகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து அண்மையில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட கட்டுவன் சந்திக்கு அருகில் உள்ள வீட்டு கிணற்றடியில் இருந்து நேற்று மோட் 24



## இறக்குமதியாகும் தங்கத்திற்கு 15 வீத வரி அறவீடு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படுகின்ற தங்கம் மீது அதன் பெறுமதியில் இருந்து 15 வீத இறக்குமதி வரி அற விடப்படுவதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது. 24

### தமிழ்த் தேசிய பேரெழுச்சியாக
## முள்ளிவாய்க்கால் பேரவலத்தினை ஒற்றுமையாக நினைவு கூருவோம்
### யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு நாளை ஒன்றாக ஓரிடத்தில் தமிழ்த் தேசிய மக்கள் பேரெழுச்சியாக நினைவுகூர வேண்டும். அவ்வாறு முன்னெடுப்பதற்கு தமிழர்களின் விடுதலை நோக்கிய பயணத்தில் தம்மை ஈடுபடுத்தியிருக்கும் அனைத்து அரசியல் மற்றும் பொது 24

## நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படாத தொண்டராசிரியர்கள் நீதி கோரி
### கல்வி அமைச்சின் அலுவலகத்தில்

(கொழும்பு)

வடக்கில் பல வருடங்களாக தொண்டராசிரியர்களாக கடமையாற்றி தற்போது இடம்பெறவுள்ள நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படாது விடுபட்ட தொண்டராசிரியர்கள் பத்தரமுல்ல கல்வி அமைச்சின் அலுவலகத்தில் நீதி கோரி சென்றுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் சுமார் பத்து வருடங்களுக்கு மேல் தொண்டராசிரியர்களாக கடமையாற்றிய நூற்றுக் கணக்கான ஆசிரியர்களுக்கு அடுத்த வாரம் 24

### பண்டிகை காலத்தில் நாடளாவிய ரீதியில்
## ஒரு கோடி ரூபாய்க்கு அதிகமான போதைப்பொருள் பறிமுதல்
### 3 ஆயிரத்து 213 பேர் கைது

(கொழும்பு)

பண்டிகை காலத்தில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமான பெறுமதியுடைய மதுபானம், போதைப் 24

## இலங்கைக்கு சலுகைகளை அதிகரித்து முதலீடுகளை மேற்கொள்ள பிரித்தானியா தயார்
### பிரித்தானிய இராஜாங்க செயலாளர் லியாம் பொக்ஸ் தெரிவிப்பு

(லண்டன்)

இலங்கைக்கு வழங்கப்படும் சலுகைகளை மேலும் அதிகரித்து இலங்கையில் பல நேரடி முதலீடுகளை மேற்கொள்ள பிரித்தானிய அரசாங்கம் தயாராகவுள்ளதெனவும் அதற்கான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள் 23



## அபிவிருத்திக்கு பொது நலவாய நாடுகள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்
### அரச தலைவர் மாநாட்டில் ஜனாதிபதி உரை

(லண்டன்)

சமூக நீதி, சுபீட்சம் மற்றும் பேண்தகு தன்மையுடைய சமூகங்களைக் கொண்ட உலகினை உருவாக்குவதற்கான 2030 ஆம் ஆண்டின் பேண்தகு அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை பின்பற்றி பொதுவான பாதையில் பயணிக்க உலக நாடுகள் இணக்கம் தெரி 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## றூம் வாடகைக்குண்டு

யாழ் நகர் குமாரசாமி வீதியில் A/L படிக்கும் மாணவர்களுக்கு இரு அறைகள் வாடகைக்குண்டு.

தொடர்பு:-0772850753 (3677)

## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் திறக்க இருக்கும் யூஸ் கடைக்கு வேலையாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு:0768703506 (3674)

## சேல்ஸ்மான் தேவை

யாழ் நகரில் இயங்கும் எமது புடவைக் கடைக்கு O/L,A/L படித்த ஆண்கள் தேவை. அனுபவம் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம். பழக ஆர்வம் உள்ளவர்களும் விரும்பத்தக்கது.

சென்னை பெசன் வேல்ட்

63,பெரிய கடை வீதி,யாழ்ப்பாணம். (3677)

## பெண் வேலையாட்கள் தேவை

கே.ஆர்.எஸ் உணவு உற்பத்தி நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை

கே.ஆர்.எஸ் உணவு உற்பத்தி நிலையம்

கே.கே.எஸ் றோட், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்

T.P-021 492 1886 (3668)


# கேள்வி அறிவித்தல்: யாழ்ப்பாணம் மாநகர சபை

## சபை நிதி-2018

01. யாழ்ப்பாணம் மாநகர சபையின் உள்ளூராட்சிமன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் தற்போதுதகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.
02. கேள்வியானது தேசிய போட்டிவிலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
03. ஒப்பந்தமானது நிர்மாணகைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) வீதிநிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொதுநிதி சுற்றறிக்கை, இல.04/2016 (i) ற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வட மாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காதபட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.
04. தேவையானதகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவுஅட்டவணை (Schedule) கேள்விஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் முதல்வர், மாநகர சபை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல-021 2216468, 021 2222019) என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் வேலை நாட்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 2.00 மணிவரை 19.04.2018-03.05.2018 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ளகேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் பூரணப்படுத்தி முதல்வர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலிருந்து 19.04.2018ஆம் திகதியில் இருந்து 03.05.2018 வரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 மற்றும் வரிகளைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து முதல்வர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 04.05.2018 ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று) நாட்களுக்கு (06.07.2018 வரை) செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணைவைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. கேள்வி தொடர்பான முன் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 26.04.2018 அன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.
11. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாதுகாப்புப் பிணை தொகை | செல்லுபடியாகும் காலம் |
| 1 | JMC/WD/01/CF.Rd/2018/20 | கலட்டி அம்மன் வீதி மற்றும் உள்ளக வீதி புனரமைப்பு | 3.231 | 03 மாதங்கள் | C8 வீதி | 32,500.00 | 03.08.2018 |
| 2 | JMC/WD/01/CF.Rd/2018/21 | கெலண் தோட்டம் 2ம் குறுக்குத் தெரு புனரமைப்பு | 5.255 | 03 மாதங்கள் | C7 வீதி | 53,000.00 | 03.08.2018 |
| 3 | JMC/WD/01/CF.Rd/2018/22 | மத்தியுஸ் வீதி உப ஒழுங்கைகள் மற்றும் ஓடக்கரை ஒழுங்கை, குருநகர் புனரமைப்பு | 2.931 | 03 மாதங்கள் | C8 வீதி | 29,500.00 | 03.08.2018 |
| 4 | JMC/WD/01/CF.Rd/2018/23 | அரசடிவீதி புகையிரதக் கடவை மேற்கு ஒழுங்கை, கந்தர்மடம் மற்றும் யாழ் வீதி,சிறாம்பியடி புனரமைப்பு | 2.984 | 03 மாதங்கள் | C8 வீதி | 30,000.00 | 03.08.2018 |
| 5 | JMC/WD/01/CF.Rd/2018/24 | வைமன் வீதி உப ஒழுங்கை மற்றும் கடுக்காய் ஒழுங்கை, நாயன்மார்கட்டு புனரமைப்பு | 3.462 | 03 மாதங்கள் | C8 வீதி | 35,000.00 | 03.08.2018 |
| 6 | JMC/WD/01/CF.Rd/2018/25 | சுவாட்ஸ் ஒழுங்கை, சுண்டிக்குளி மற்றும் சீனியர் ஒழுங்கைகள் புனரமைப்பு | 3.737 | 03 மாதங்கள் | C8 வீதி | 37,500.00 | 03.08.2018 |
| 7 | JMC/WD/01/CF.Rd/2018/26 | புவனேஸ்வரி அம்பாள் வீதி, அரியாலை புனரமைப்பு | 3.103 | 03 மாதங்கள் | C8 வீதி | 31,500.00 | 03.08.2018 |
| 8 | JMC/WD/01/CF.Rd/2018/27 | நீர்த்தாங்கிவீதி, நல்லூர்,ஈச்சமோட்டை வீதி மற்றும் கண்ணார் வீதி, நல்லூர் புனரமைப்பு | 2.956 | 03 மாதங்கள் | C8 வீதி | 30,000.00 | 03.08.2018 |
| 9 | JMC/WD/01/CF.Rd/2018/28 | நல்லூர் அரசு வீதிபுனரமைப்பு மற்றும் காங்கேசதீவு, பழம் வீதி இணைப்புவீதிஅமைப்பு வேலைத்திட்டம் | 2.380 | 03 மாதங்கள் | C8 வீதி | 24,000.00 | 03.08.2018 |
| 10 | JMC/WD/01/CF.Rd/2018/29 | முதலியார் ஒழுங்கைமற்றும் மூத்தவிநாயகர் உப ஒழுங்கைகள் புனரமைப்பு | 2.281 | 03 மாதங்கள் | C8 வீதி | 23,000.00 | 03.08.2018 |
| 11 | JMC/WD/01/CF.Rd/2018/30 | பூமகள் ஒழுங்கை மற்றும் உப ஒழுங்கைகள் புனரமைப்பு | 2.305 | 03 மாதங்கள் | C8 வீதி | 23,000.00 | 03.08.2018 |
| 12 | JMC/WD/01/CF.Rd/2018/31 | புதுக்குடியிருப்பு ஒழுங்கைகள் புனரமைப்பு (2 - 6) | 2.259 | 03 மாதங்கள் | C8 வீதி | 23,000.00 | 03.08.2018 |
| 13 | JMC/WD/01/CF.Rd/2018/32 | முள்ளி ஒழுங்கை மற்றும் கதிர வேற்பிள்ளை ஒழுங்கை புனரமைப்பு | 2.147 | 03 மாதங்கள் | C8 வீதி | 21,500.00 | 03.08.2018 |
| 14 | JMC/WD/01/CF.Rd/2018/33 | பாசையூர் புதுக்குடியிருப்பு ஒழுங்கைகள் கொங்கிறீற் வீதியாக்குதல் | 1.980 | 03 மாதங்கள் | C9 &C8 வீதி | 20,000.00 | 03.08.2018 |

முதல்வர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைகள் குழு,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

(#2316) 18.04.2018


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

## வீடு வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி கின்னர் லேனில் திருமணம் மற்றும் சுபகாரியங்கள் தங்கி நின்று செய்வதற்கு சகல வசதிகளுடன் கூடிய வீடு நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்குண்டு.

0772850753 (3677)

## ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

2 வார ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.

0770295211 (3675)


## வல்வை சனசமூக சேவா நிலையம்

### வல்வெட்டித்துறை

## வருடாந்த பொதுக்கூட்டம்

காலம்:09.05.2018-புதன்கிழமை பி.ப 4.00 மணி

தலைமை:திரு.மு.தங்கவேல் (உபதலைவர்)

இடம்:நிலைய மண்டபம்

நிகழ்ச்சி நிரல்

01. இறை வணக்கம்
02. ஆண்டறிக்கை சமர்ப்பிப்பு
    அறிக்கைகள் சமர்ப்பிப்பு
03. கணக்கறிக்கை சமர்ப்பிப்பு
04. புதிய நிர்வாகிகள் தெரிவு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரேரணைகள் 27.04.2018க்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பொ.சிவஞானசுந்தரம்
-செயலாளர்

15.04.2018 (3676)

## யா/புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி

### பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

இடம்:-கல்லூரி மண்டபம்

காலம்:-22.04.2018

நேரம்:-காலை 9.00 மணி தொடக்கம்.

கல்லூரியின் அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்

Dr.சி.கே.சிவபாலசிங்கம் (3657)


## மனோதத்துவ வைத்தியம்

மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)

Dr.P.ஆறுமுகம்

T.P :- 0777 569 205

19.04.2018-28.04.2018 வரை

10 நாட்கள் மட்டுமே இருப்பார்

பதிவுக் கட்டணம் ரூபா 300/=



மீண்டும் யாழில்

ஆண்களுக்கு, ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தை கிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.

தாம்பத்திய பாதிப்புகள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தவிதமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.

ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு இயற்கை மூலிகை மருந்துகள் மூலம் சிகிச்சை.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற

தொடர்பு கொண்டு வரவை உறுதிப்படுத்துங்கள்

இவை அனைத்துக்கும் மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

இப்போது நாம் புதிய முகவரியில்

விதுனா லொட்ச்

ஜும்மா பள்ளிவாசல் பின் பக்கம் யாழ்ப்பாணம்.


(அருமை உணவகத்துக்கு அருகில்) தொ.பே: 021 722 3409

# நல்லாட்சி அரசால் கிடைத்த சுதந்திரம் பற்றி சரியான புரிந்துணர்வுடன் செயற்படவில்லை

## சகல தரப்பினர் மீதும் லண்டனில் வைத்து ஜனாதிபதி விசனம்

(லண்டன்)

நாட்டில் சகல துறை சார்ந்தவர்களும் நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் தாம் பெற்றுக் கொண்டுள்ள சுதந்திரம் பற்றிய சரியான புரிந்துணர்வுடன் செயற்படவில்லை எனவும் உண்மையை மறைத்து பொய்யான விடயங்களை மேலோங்கச் செய்ய மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தாய்நாட்டின் முன்னோக்கிய பயணத்திற்கு தடையாக உள்ளதெனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன லண்டனில் வசிக்கும் இலங்கையர்களிடம் தெரிவித்தார்.



தாய்நாட்டின் உண்மையான நிலைமைகள் பற்றிய சரியான புரிந்துணர்வுடன் நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஜனாதிபதி, அழைப்பு விடுத்தார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக லண்டனுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதிக்கும் லண்டனில் வசிக்கும் இலங்கையர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்விமான்கள், வர்த்தகர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பலர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டதுடன், ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பு அளித்தனர்.

இதன்போது உரையாற்றிய ஜனாதிபதி, நாட்டில் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் ஸ்தாபித்து, நாட்டை அபிவிருத்தியை நோக்கி முன்னெடுத்துச் செல்லும் அரசாங்கத்தின் செயற்றிட்டங்கள் பற்றிய சரியான தகவல்கள் நாட்டு மக்களை சென்றடைவதில்லை என தெரிவித்தார்.

சில ஊடகங்களும் சமூக வலைத்தளங்களும் குறுகிய அரசியல் மற்றும் வர்த்தக நோக்கங்களுடன் உண்மையை மறைத்து பொய்யான விடயங்களை மேலோங்கச் செய்வதற்கு முயற்சிப்பதே இதற்கான முக்கிய காரணமாகும் எனத் தெரிவித்த ஜனாதிபதி, நாட்டில் சகல துறை சார்ந்தவர்களும் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் தாம் பெற்றுக் கொண்டுள்ள சுதந்திரம் பற்றிய சரியான புரிந்துணர்வுடன் செயற்படவில்லை எனவும் தெரிவித்தார்.

கடந்த மூன்று வருடங்களுக்குள் நாட்டின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளக் கூடிய சகல பொறுப்புக்களையும் உயரிய மட்டத்தில் நிறைவேற்றுவதற்காக அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளதென வலியுறுத்திய ஜனாதிபதி, நாட்டில் சகவாழ்வையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தி, நாட்டில் நிலவும் அமைதியான சூழலை நிரந்தரமாகப் பேணுவதற்கு முன்னுரிமையளித்து தமது அரசாங்கம் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

மேலும், நாட்டை அபிவிருத்தியை நோக்கி கொண்டு செல்வதோடு மக்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக மேற்கொள்ளப்பட்ட பொருளாதார திட்டங்களினால் தற்போது சிறந்த பெறுபேறுகள் கிடைத்துள்ளதுடன், நாட்டுக்கெதிராக காணப்பட்ட சர்வதேசத்தை மீண்டும் நாட்டை நோக்கி கொண்டுவர முடிந்துள்ளமையானது கடந்த மூன்று வருடங்களுக்குள் பெற்றுக் கொண்டுள்ள முக்கிய வெற்றியாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (இ-7)

# அமைச்சுப் பதவியை நிராகரித்த விஜயதாஸ

(கொழும்பு)

உத்தேச அமைச்சரவை மாற்றத்தின் போது, ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மீண்டும் அமைச்சராகப் பதவி ஏற்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையை முன்னாள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நிராகரித்துள்ளதாக தெரியவருகிறது.

வெளிவிவகார அமைச்சராக பதவியேற்குமாறு முன்வைக்கப்பட்ட யோசனையை அவர் நிராகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது வெளிவிவகார அமைச்சராக பதவி வகிக்கும் திலக் மாரப்பன, அந்தப் பதவியில் இருந்து விலக இணக்கம் தெரிவிக்கவில்லை.

அவ்வாறான பின்னணியில், வெளிவிவகார அமைச்சராக பதவியேற்பதன் மூலம் கட்சிக்குள் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதாக கூறியே விஜயதாஸ ராஜபக்ஷ குறித்த யோசனையை நிராகரித்துள்ளார்.

அத்துடன் மீண்டும் நீதியமைச்சராக பதவியேற்க விரும்பவில்லை எனவும், அமைச்சுப் பதவியைவிட 2015 ஆம் ஆண்டு ஜனவரி மக்கள் வழங்கிய ஆணைக்கு அமைய செயற்பட்டு 64 இலட்சம் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற ஆதரவளிப்பதாக விஜயதாஸ ராஜபக்ஷ கட்சியின் தலைமைக்கு அறிவித்துள்ளார்.

அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டும், கட்சியால் கைவிடப்பட்ட நிலையில் இருந்த போதிலும் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாகவும் அரசியல் பதவிகள் மற்றும் சிறப்புரிமைகளை விட கொள்கைகளை மதிப்பதே இதற்குக் காரணம் எனவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்காலத்திலும் நல்லாட்சி மூலதர்மங்களை பாதுகாத்து, கட்சி மற்றும் மக்களுக்காக சேவையாற்ற சந்தர்ப்பம் கிடைத்தால், அந்த மூலதர்மங்களின் அடிப்படையிலேயே செயற்படப்போவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# உலகின் மிகப்பெரிய சரக்கு விமானம் மத்தளயில் நேற்றுத் தரையிறக்கம்





(கொழும்பு)

உலகின் மிகப்பெரிய சரக்கு விமானமான Antonov An-225 Mriya ரக விமானம் நேற்றுக் காலை 6.35 மணியளவில் மத்தள விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது.

ரஷ்யாவுக்குச் சொந்தமான குறித்த விமானம் மலேசியாவிலிருந்து இலங்கைக்கு வந்துள்ளதுடன் இது மீண்டும் கராச்சி நோக்கிச் செல்லவுள்ளது.

24 பேரைக் கொண்ட நிர்வாகக் குழுவினருடன் குறித்த விமானத்துக்கு தேவையான எரிபொருளை நிரப்புவதற்கும், அதிலுள்ள அதிகாரிகளின் ஓய்வுக்காகவும் மத்தள விமான நிலையத்தில் குறித்த சரக்கு விமானம் தரையிறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# நிதிக்குற்றங்களை தடுக்க அரசாங்கம் தீவிர முயற்சி

## அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு

(லண்டன்)

இலங்கை அரசாங்கம் நிதிக்குற்றங்களைத் தடுப்பதற்கான தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

லண்டனில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நிதியமைப்பு முறை வளர்ச்சியடைந்து வருகின்ற நிலையில் நிதிக்குற்றங்களைத் தடுப்பதற்கான சட்டங்களையும் விதிமுறைகளையும் தரமுயர்த்தவேண்டியுள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கை இந்த யதார்த்தத்தை நன்கு உணர்ந்து கொண்டுள்ளது. இதன் காரணமாக இந்த விடயம் தொடர்பில் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கின்றது எனவும் தெரிவித்தார். நிதிக்குற்றங்களைத் தடுப்பதற்காக இலங்கை அரசாங்கம் நிதி நடவடிக்கைகள் தொடர்பான செயலணியுடன் இணைந்து செயலாற்றுகின்றது. இது தொடர்பான சட்டங்களைப் பலப்படுத்துகின்றது.

நிதி நடவடிக்கைகள் தொடர்பான செயலணியின் பரிந்துரையின் அடிப்படையில் சட்டதிருத்தங்களை மேற்கொள்வது உட்பட பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம் எனவும் நிதியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கூட்டு எதிரணிக்கு ஆள்சேர்க்கும் டிலான்

## சு.கவில் பொதுச்செயலர் இல்லை கோள் மூட்டுபவர்களே உள்ளனர்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பொதுச் செயலாளர் எவரும் கிடையாது என முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் ஊடக சந்திப்பு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியனவற்றில் பொதுச் செயலாளர்கள் எவரும் கிடையாது.

பொதுவாக கோள் சொல்பவர்கள் இரண்டு பேர் இருக்கின்றார்கள். அவர்களே பிரதமரிடம் சென்று, கட்சி தொடர்பான விடயங்களை சொல்லுகின்றார்கள். பிரதமரிடம் கோள் சொல்வது இந்த இரண்டு நபர்களே ஆவார்கள்.

நாம் எதிர்க்கட்சியில் அமர்ந்து கொள்வோம். ஒன்று அல்ல நூறு வழக்குத் தொடர்ந்தாலும் அஞ்சப் போவதில்லை.

நீதிமன்றம் நேர்மையாக செயற்படுவது மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. கூட்டு எதிர்க்கட்சி என்று ஒர் கட்சி கிடையாது. அனைத்து கட்சிகளும் கூட்டு எதிரணியில் இணைந்து கொள்ள முடியும். தடையில்லை என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஜெய்ப்பூர் வெற்றிகளுக்கு முற்றுப்புள்ளி
# கொல்கத்தா கலக்கல் வெற்றி

ராஜஸ்தான் அணிக்கு எதிரான ஐ.பி.எல்., லீக் போட்டியில் கொல்கத்தா அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியாவில், 11ஆவது ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது. இதில் ஜெய்ப்பூரில் நேற்று நடந்த 15ஆவது லீக் போட்டியில் ராஜஸ்தான் - கொல்கதா அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணியின் தலைவர் தினேஷ் கார்த்திக், முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**ஷோர்ட் ஆறுதல்**


முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய ராஜஸ்தான் அணிக்கு அணித் தலைவர் ரகானே - ஷோர்ட் இணைநிதான ஆரம்பம் வழங்கியது. சுனில் நரைன் வீசிய 4ஆவது ஓவரில் தொடர்ச்சியாக 4 பவுண்டரிகள் அடித்த ரகானே, ஷிவம் மாவி பந்தில் ஒரு சிக்சர் பறக்கவிட்டார். முதல் விக்கெட்டுக்காக 54 ஓட்., சேர்த்திருந்த போது, ரகானே (36) 'ஸ்ரம்பிங்' ஆனார். சஞ்சு சாம்சன் (7), ஏமாற்றினார். பொறுப்பாக ஆடிய ஷோர்ட் (44) ஆறுதல் அளித்தார். ராகுல் திரிபாதி (15), பென்ஸ்ரோக்ஸ (14), கௌதம் (12), ஸ்ரேயாஸ் கோபால் (0) நிலைக்கவில்லை.

20 ஓவர்களில் ராஜஸ்தான் 8 விக்கெட்டுக்களை இழந்து, 160 ஓட்டங்களை எடுத்தது. பட்லர் (24) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் கொல்கத்தா அணி சார்பில் நிதிஷ் ராணா, குர்ரன் தலா 2 விக்கெட் கைப்பற்றினர்.

**உத்தப்பா நம்பிக்கை**

சுலப இலக்கை விரட்டிய கொல்கத்தாவுக்கு கிறிஸ்லின் (0) ஏமாற்றினார். குல்கர்னி வீசிய 4ஆவது ஓவரில், 'ஹட்ரிக்' பவுண்டரி விளாசிய சுனில் நரைன், லாக்லின் பந்தில் ஒரு சிக்சர் அடித்தார். இவருக்கு ஒத்துழைப்பு கொடுத்த ரொபின் உத்தப்பா, உனத்கட் வீசிய 5ஆவது ஓவரில் 3 பவுண்டரி விளாசினார். இரண்டாவது விக்கெட்டுக்கு 69 ஓட்., சேர்த்திருந்த போது நரைன் (35), 'ரன்-அவுட்' ஆனார். அபாரமாக ஆடிய உத்தப்பா, 48 ஓட்டங்களில் அரைச்சத வாய்ப்பை இழந்து வெளியேறினார்.'



பின் இணைந்த அணித் தலைவர் தினேஷ் கார்த்திக், நிதிஷ் ராணா ஜோடி பொறுப்பாக ஆடியது. லாக்லின் பந்தை சிக்சருக்கு அனுப்பிய கார்த்திக், வெற்றியை உறுதி செய்தார். 18.5 ஓவர்களில் கொல்கத்தா 3. விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (163) 7 விக்கெட்டுக்களால் அடைந்தது.

கார்த்திக் (42), ராணா (35) ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்துவீச்சில் ராஜஸ்தான் சார்பில் கௌதம் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**முற்றுப்புள்ளி**

ஜெய்ப்பூரில் உள்ள சவாய் மன்சிங் மைதானத்தில் ராஜஸ்தான் அணி, தொடர்ச்சியாக 9 போட்டிகளில் (2013ல் 8 + 2018ல் ஒரு போட்டி) வெற்றி பெற்றிருந்தது. நேற்று, இந்த வெற்றி நடைக்கு கொல்கத்தா அணி முற்றுப்புள்ளி வைத்தது. கடைசியாக, கடந்த 2012 இல் (மே 20) இங்கு நடந்த போட்டியில் ராஜஸ்தான் அணி தோல்வியடைந்திருந்தது.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்

### பரீட்சைகளின் திகதிகள்

பீடத்தின் பிற்போடப்பட்ட பரீட்சைகளின் திகதிகள் பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

- 3ம் வருட 2ம் அரையாண்டு (முகாமைத்துவ கற்கைகள்) - **23.04.2018**
- 3ம் வருட 2ம் அரையாண்டு (வணிக கற்கை) - **23.04.2018 - 01.05.2018**
- 3ம் வருட 1ம் அரையாண்டு (வணிகம் மற்றும் முகாமைத்துவ கற்கை) பழைய பாடத்திட்டம் - **23.04.2018 - 02.05.2018**
- 1ம் வருட 2ம் அரையாண்டு (வணிகம் மற்றும் முகாமைத்துவ கற்கை) - **01.05.2018 - 08.05.2018**
- 1ம் வருட 1ம் அரையாண்டு (வணிகம் மற்றும் முகாமைத்துவ கற்கை) பழைய பாடத்திட்டம் - **03.05.2018 - 11.05.2018**

பரீட்சைக்கான நேர அட்டவணையை அலுவலக அறிவித்தல் பலகையிலும் பீடத்தின் இணையத்தளத்திலும் (http://www.maco.jfn.ac.lk/) பார்வையிட முடியும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
18.04.2018 (C-2315)


# ஏழாலை அத்தியடி முருகமூர்த்தி ஆலய கொடியேற்றம் நாளை

ஏழாலை அத்தியடி முருகமூர்த்தி திருக்கோவிலின் மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெற உள்ளதோடு எதிர்வரும் 28.04.2018 சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 29.04.2018 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளது. (ம)

# ரொனால்டோ போல ஹோலி
## பிராவோ புகழாரம்



"கால்பந்து அரங்கில் ரொனால்டோ அசத்துவதுபோல, கிரிக்கெட்டில் விராட் ஹோலி ஜொலிக்கிறார்." என மேற்கிந்தியத் தீவுகளின் டுவைன் பிராவோ தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் 11ஆவது பருவகாலத்துக்கான ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது. இதில் பெங்களூர் அணியை இந்திய அணியின் தலைவர் விராட் ஹோலி வழிநடத்துகிறார்.

சென்னை அணியில் மே.தீவுகளின் சகலதுறை வீரர் டுவைன் பிராவோ இடம் பெற்றுள்ளார். எதிர்வரும் 25ஆம் திகதி பெங்களூர் - சென்னை அணிகள் பெங்களூருவில் மோத உள்ளன. இதற்கிடையே, தனியார் நிகழ்ச்சியில் பங்கேற்ற பிராவோ, ஹோலிக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

**சிறந்த மனிதர்**

டுவைன் பிராவோ கூறியதாவது, விராட் ஹோலியும் எனது சகோதரர் டரன் பிராவோவும் 19 வயதுக்குட்பட்டோருக்கான போட்டிகளில் இணைந்து விளையாடி உள்ளனர். அப்போதே, ஹோலி 'மிகச்சிறந்த மனிதர்' என இவரிடம் பாராட்டி உள்ளேன். தற்போது, கால்பந்து அரங்கில் போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானா ரொனால்டோ அசத்துகிறார். இவரைப்போல, கிரிக்கெட்டில் ஹோலி ஜொலிக்கிறார். இந்தியா அல்லது பெங்களூர் என எந்த அணிக்காக களமிறங்கினாலும் கிரிக்கெட் மீதான காதல் வெளிப்படுகிறது. இதற்காக, மனதார பாராட்டுகிறேன். அத்தனை சாதனைகளுக்கும் ஹோலி தகுதியானவர். இவ்வாறு பிராவோ கூறினார்.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்

### புதிய கல்வியாண்டு 2016/2017 ஆரம்பம்

பீடத்தின் புகுமுக மாணவர்களுக்கான (2016/2017) திசைமுகப்படுத்தல் நிகழ்வு (Orientation Programme) **01.05.2018** தொடக்கம் **05.05.2018** வரை நடைபெறும்.

பீடத்தின் அனைத்து வருட மாணவர்களுக்குமான விரிவுரைகள் **09.05.2018** அன்று ஆரம்பமாகும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
18.04.2018 (C-2314)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## அறிவித்தல்
## கலைப்பீடம்

1. இராமநாதன் நுண்கலைத்துறை மாணவர்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் 23.04.2018ம் திகதி மீள ஆரம்பமாகவுள்ளது.
2. 4ம் வருட மாணவர்களுக்கான கலைமாணிப் பரீட்சைகள் 25.04.2018ம் திகதி ஆரம்பமாகவுள்ளது மற்றும் 1ம் வருட மாணவர்களுக்கான பரீட்சைகள் 02.05.2018ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.
3. புகுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு (Orientation Programme) 30.05.2018ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

பதிவாளர் (C-2319)



## UNIVERSITY OF JAFFNA
## NOTICE
## FACULTY OF SCIENCE

1. The examinations of Faculty of Science will commence on 23.04.2018.
2. All the academic activities of Faculty of Science will commence on 11.06.2018.
3. The orientation programme for the Fresher's will commence on 04.06.2018.

Registrar (C-2317)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

## வெளிவாரிப் பரீட்சைகள்
## வணிகத்தில் முதற் தேர்வு - 2014
## இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை

மேற்படி பரீட்சையினை 12.05.2018 (சனிக்கிழமை) தொடக்கம் 26.05.2018 (சனிக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணையினை LMS மற்றும் www.facebook.com/uoj.codl என்ற முகப்புத்தக முகவரியிலும் பார்வையிடலாம்.

பரீட்சைக்கான அனுமதி அட்டையினை 08.05.2018 (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் 11.05.2018 (வெள்ளிக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
18.04.2018 (C-2318)




# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## மகாதேவன் சதீஸ்குமார்



பிறப்பு: 16.09.1981 இறப்பு: 19.04.2013

உனக்காகத் துடிக்கும் எம் இதயம்
உன்னை நினைக்காது துடித்ததில்லை
நீ தொலைதூரம் சென்றுவிட்டாய் உன்
வருகைக்காய் வழிமேல் விழிவைத்துக்
காத்திருக்கிறோம்

வல்லை வீதி,
தொண்டைமானாறு.

மகாதேவன்
குடும்பத்தினர்


## நீதிமன்றத்தில் ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள்கள், உழவு இயந்திரப் பெட்டி, துவிச்சக்கரவண்டிகள், உடுப்புகள், தொலைபேசி, மடிக்கணனி, கணனி உதிரிப் பாகங்கள், அம், மப்ளர், கூலிங் சீற் மற்றும் இதர பொருட்கள் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளது. யாழ். நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட உரிமை கோரப்படாததும் பறிமுதல் செய்யப்பட்டதுமான இப் பொருட்கள் நாளை மறுதினம் 21.04.2018 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் நீதிமன்ற வளாகத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

குறித்த பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஏலத்தில் விற்கப்படும் பொருட்களைக் கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்கவும். அத்துடன் ஏலவிற்பனையில் பெற்றுக் கொள்ளும் பொருட்களை அன்றைய தினம் உடனடியாகவே வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (இ)


## வாடகைக்கு

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி சந்தைக்கு அண்மையில் கடைகள் வாடகைக்கு உண்டு.

(3667)

தொடர்பு: 021 222 8875


# கமநல அபிவிருத்தித் திணைக்களம், வவுனியா

# கேள்வி அறிவித்தல்

தலைவர் மாவட்ட பெறுகைக்குழு/மாவட்ட உதவி ஆணையாளர், கமநல அபிவிருத்தித் திணைக்களம், வவுனியா சார்பாக வவுனியா மாவட்டத்தின் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு கீழ் உள்ள குளங்கள், வாய்க்கால்கள், அணைக்கட்டுக்கள் புனரமைப்பு வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

**பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்ததாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவர்.**

நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் உள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

■ இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.

■ நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (i) இலக்க 30.09.2016 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

■ ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக்கூடாது.

**1.** விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

**2.** தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளக்கப்பட்டுள்ளது.

**3.** ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் **கமநல அபிவிருத்தித் திணைக்களம், வவுனியா** எனும் முகவரியில் **19.04.2018** தொடக்கம் **முற்பகல் 9.00 மணியிலிருந்து மாலை 2.30 வரை** விலைக்கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம் என்பதுடன் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.

**4.** ஆங்கிலமொழி மூலமான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியினை வவுனியா கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து **19.04.2018 முதல் 09.05.2018 வரை வேலைநாட்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.30** மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான **1000.00** கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**5.** மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர், மாவட்ட பெறுகைக்குழு, கமநல அபிவிருத்தித் திணைக்களம், வவுனியா என்ற முகவரிக்கு 09.05.2018 ஆம் திகதியன்று பி.ப 02.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும் கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தினை தபால் உறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேற்குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகை தரவிரும்பும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் 09.05.2018 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் **மூலப்பிரதி** (Original) தனியாகவும் நகல் (copy) **தனியாகவும் இரு உறைகளில்** சமர்ப்பித்தல் வேண்டும்.

**6.** கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

**7.** கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கேள்வியானது (Bid) கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியில் இருந்து 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப்பிணை பொறுப்பு (Bid Security) 07.08.2018 ஆம் திகதி வரை செல்லுபடியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**8.** VAT பதிவு பத்திரம் உள்ளவர்கள் Bid உடன் செயற்படுநிலையில் உள்ள சான்றிதழை (Active Registration Certificate) இணைக்கவும். இணைக்காத பட்சத்தில் VAT கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது.

**9.** கீழ் குறிப்பிடும் வேலைகளுக்கான உங்களுடைய வாகன தகவல், வங்கி கணக்கு அறிக்கை, கடந்த கால வேலை விபரங்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தரின் முழுவிபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

**10.** குறித்த வேலைகளுக்கான முதற் கூட்டம் (Pre bid meeting) 02.05.2018 ஆம்திகதி முற்பகல் 10.00 க்கு கமநல அபிவிருத்தித் திணைக்களம், வவுனியாவில் நடைபெறும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்வரி நீங்கலாக) | கேள்விப் பிணைத் தொகை செல்லுபடி காலம் | வேண்டப்படும் ICTAD தரம்/ பதிவு | கேள்விப் பிணைத் தொகை | கமநல சேவை நிலையம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | VAV/DAD/36/6/ ONUR/01/2018 | பள்ளபூவரசன்குளம் Stage I | 5 Mn | 16/08/2018 | C8 அல்லது அதற்கு மேல் | 50,000.00 | ஓமந்தை |
| 02 | VAV/DAD/36/6/ ONUR/02/2018 | பள்ளபூவரசன்குளம் Stage II | 4.31 Mn | 16/08/2018 | C8 அல்லது அதற்கு மேல் | 44,000.00 | ஓமந்தை |
| 03 | VAV/DAD/36/6/ ONUR/03/2018 | பாலமோட்டைகுளம் Stage I | 4.7 Mn | 16/08/2018 | C8 அல்லது அதற்கு மேல் | 48,000.00 | ஓமந்தை |
| 04 | VAV/DAD/36/6/ ONUR/04/2018 | பாலமோட்டைகுளம் Stage II | 2.83 Mn | 16/08/2018 | C8 அல்லது அதற்கு மேல் | 29,000.00 | ஓமந்தை |

தலைவர்,
மாவட்ட பெறுகைக்குழு,
கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
வவுனியா.

# இராசி பலன்

**மீனம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பயணங்களால் பலனுண்டு.

**மேடம்:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**இடபம்:** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்:** புதிய நட்பால் பொருள் விரயங்கள் ஏற்படலாம், தொழிலில் கூடுதல் பொறுப்புக்கள் வந்து சேரலாம், குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**கும்பம்:** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், மனதில் தோன்றுவதை செய்வீர்கள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**கடகம்:** விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடங்குவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், பிறர் உதவியுண்டு.

**சிம்மம்:** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.

கிரகநிலை

புத | சூரி.சந் சுக் | ராகு | கேது | சனி. செவ் | குரு

சந்திராஷ்டமம்
சுவாதி , விசாகம்

**19.04.2018**

சித்திரை 06, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 1.42 மணிவரை
ரோகிணி பின்னிரவு 1.10 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
சதுர்த்தி விரதம்

வளவன்

**தனுசு:** கடன்கள் குறைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுப்பீர்கள், இனத்தார் பகைமாற எடுத்த முயற்சிகள் கைகூடும், தொழிலை விருத்தி செய்ய எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்:** பாடுபட்டதிற்கேற்ப பலன் கிடைக்கும், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**துலாம்:** விட்டுக்கொடுத்துச் செல்வதால் முன்னேற்றம் காண்பீர்கள், மனதில் கவலைகள் தோன்றி மறையும், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**கன்னி:** நண்பர்களுக்குள் நிலவிய குழப்பங்கள் தீரும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

# தமிழ் அரசியல் கைதி ஆனந்த சுதாகரனை விடுவிக்காவிட்டால் போராட்ட வடிவம் மாறும்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

குறுகிய காலத்துக்குள் அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனை ஜனாதிபதி விடுதலை செய்யாவிட்டால் தமது போராட்ட வடிவம் மாறும் என எச்சரித்துள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா புவனேஸ்வரன், அவ்வாறு விடுவிக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் எமக்கு எது முக்கியம் என்பதைப் புரிய வைப்போம் எனவும் தெரிவித்தார்.

அரசியல் கைதியாக தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆனந்த சுதாகரனின் மனைவி அண்மையில் உயிரிழந்ததை தொடர்ந்து பாடசாலை செல்லும் அவரது இரு பிள்ளைகளும் ஆதரவற்ற நிலையில் உள்ளார்கள். ஆகையால் இரு பிள்ளைகளினதும் எதிர்கால கல்வியை கருத்திற்கொண்டு ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யுமாறு கோரி வடக்கு மாகாண பாடசாலைகளில் 3 இலட்சம் கையெழுத்துகள் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தால் திரட்டப்பட்டன.

இந்த கையெழுத்துக்களையும் ஜனாதிபதிக்கான மகஜரையும் வடக்கு மாகாண பதில் முதலமைச்சரும் கல்வி அமைச்சருமான கலாநிதி க.சர்வேஸ்வரனிடம் கையளிக்கும் நிகழ்வு நல்லூரில் அமைந்துள்ள வலய கல்வி பணிமனையில் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.




போரால் உறவுகளை இழந்த மாணவர்களின் வலிகளை எங்கள் வடக்கு மாகாண ஆசிரியர்கள் நன்கு அறிந்தவர்கள், அவர்களின் வலிகளை தாங்கியவர்கள். இந்த யுத்தம் இலட்சக்கணக்கான உறவுகளைக் கொன்றுள்ளது, பல்லாயிரக்கணக்கான உறவுகளை காணாமல் ஆக்கியுள்ளது. ஆகவே இந்த இரு பிள்ளைகளின் தந்தையாரான ஆனந்த சுதாகரன் விடுதலை செய்யப்படவில்லை என்றால், கல்விப் புலம் சார்ந்தவர்கள் வேறு வழியின்றி எமக்கு கல்வியை விட இழந்த உறவுகள், இவ்வாறான பிள்ளைகளின் எதிர்காலம் முக்கியம் என்பதை நிரூபிக்க காத்திருக்கின்றோம். அந்த வகையில் இந்த மூன்று இலட்சம் கையொப்பங்களும் உலக தலைவர்களுக்கும் ஜனாதிபதிக்கும் கொண்டு போய்ச்சேர்க்க வேண்டும்.

இந்த ஆண்டு ஆனந்த சுதாகரனை விடுதலை செய்வதோடு உறவுகளை இழந்து தவிக்கின்ற பல ஆயிரக்கணக்கான குழந்தைகளின் உறவுகள் விடுவிக்கப்பட வேண்டும் அல்லது கண்டறியப்பட வேண்டும். அவர்களும் சுதந்திரமாகவும், மகிழ்ச்சியாகவும் கல்வி கற்பதற்கும் வாழ்வதற்கும் வழியேற்படுத்திக் கொடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)


## நினைவஞ்சலி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் அவுஸ்திரேலியாவில் காலமான வடபுலத்து இடதுசாரி இயக்கத்தின் முன்னாள் தோழரும் சென்.ஜோண்ஸ் கல்லூரியின் முன்னாள் ஆசிரியருமான பானுதேவனின் நினைவஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணியளவில் யாழ்.நூலக சிற்றுண்டி மண்டபத்தில் வணபிதா ஜெயசீலன் அடிகளார் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் உரை நிகழ்த்துபவர்களாக இலங்கை ஆசிரியர் சங்க வட பிரதேச முன்னாள் தலைவர் மு.தியாகராசா, வட பிரதேச தொழிற் சங்க கூட்டுக்குழு முன்னாள் செயலாளர் சா.தியாகலிங்கம், ஓய்வுநிலை வங்கி ஊழியர் சொ.சிவபாலன் ஆகியோர் உரை நிகழ்த்துவர். (இ)

## பெயர்ப் பலகை சேதம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை வயோதிபர் மடம் அருகில் அமைந்துள்ள சுவாமியார் வீதியில் இனம் தெரியாதவர்களால் பெயர்ப் பலகை சேதமாக்கப்பட்டுள்ளது. (இ-107)

## புதிய கட்டடத்திறப்பு விழாவும் கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

47/2 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கில் அமைந்துள்ள வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவும் கண்காட்சியும் விற்பனையும் கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற இருந்தது.

தவிர்க்க முடியாத காரணத்தால் இந்நிகழ்வு பிற்போடப்பட்டு தற்போது எதிர்வரும் 06.05.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (இ)

## நிறுக்கும் கருவிகள் முத்திரையிடல்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சகல வர்த்தகர்களினதும் நிறுவைகள், அளவைகள், நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடல் நடவடிக்கை எதிர்வரும் 26.27 ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் நடைபெறும் எனவும் பொருத்தமான வர்த்தகர்கள் நிறுவைகள், அளவைகள், நிறுக்கும் கருவிகளுடன் குறித்த தினத்தில் சமுகமளிக்குமாறும் பிரதேசசபை விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)


## மாணவிக்கு காசோலை வழங்கல்



ஊரெழு முதியோர் சங்கத்தினரால் நடத்தப்பட்ட 2017 ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் ஊரெழு கிராமத்தில் 9ஏ சித்திபெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதன்போது மாணவி ஒருவருக்கு விசுவமடு மகா வித்தியாலய ஆசிரியர் அ.இமயகரன் 5000 ரூபா பெறுமதியான காசோலையை வழங்கினார். (இ-78)

## திண்மக் கழிவுகள் மீள்சுழற்சி குறித்து த.தே.ம.மு.உறுப்பினர்கள் ஆராய்வு





(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் கல்லுண்டாய் வெளியிலுள்ள திண்மக் கழிவுகள் தரம்பிரிக்கும் இடம் மற்றும் காக்கைதீவிலுள்ள திண்மக் கழிவுகள் மீள்சுழற்சி நடைபெறும் இடங்களைப் பார்வையிட்டுள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் யாழ்.மாநகர உறுப்பினருமான வி.மணிவண்ணன் தலைமையிலான இக் குழுவினர் அங்கு நிலைமைகளைப் பார்வையிட்டதோடு அங்கு பணியாற்றும் பணியாளர்களுடன் கலந்துரையாடி அங்குள்ள குறை நிறைகள் பற்றிக் கேட்டறிந்தனர்.

இதன்போது யாழ்.மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன் உள்ளிட்ட யாழ்.மாநகர அதிகாரிகள் சிலரும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர். (இ-7)







ஊரெழு முதியோர் சங்கம் நடத்திய சிரேஷ்ட பிரஜைகளின் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் ஊரெழு முதியோர் சங்கத் தலைவர் பா.இராசேந்திரம் தலைமையில் ஊரெழு என்.கே.மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட களனி பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி பா.குமரேந்திரன் மங்கல விளக்கேற்றுவதனையும் கோப்பாய் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன்- சிரேஷ்ட பிரஜை ஒருவரை கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

ஓம்
சிவமயம்

யாழ்ப்பாணம்

அல்லைப்பிட்டி இனிச்சபுளியடி முருகப்பெருமான் தேவஸ்தானம்

# விளம்பி வருஷ மஹோற்சவப் பெருவிழா சிறப்பிதழ்-2018

முருகன் அடியார்களே!

ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்த அல்லையம்பதியில் வேண்டுவார்க்கு வேண்டும் வரங்களை சொரியும் திருவருள் இனிச்ச புளியடி முருகப் பெருமானுக்கு விளம்பி வருஷம் சித்திரைத் திங்கள் 7ஆம் நாள் (20.04.2018)வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணிக்கு துவாஜரோகணம் (கொடியேற்றம்) ஆரம்பமாகி சித்திரா பௌர்ணமியன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெற முருகப்பெருமான் திருவருள் கைகூடியுள்ளது. எனவே மெய்யடியார்களே உற்சவகாலங்களில் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகை தந்து எம் பெருமானின் திருவருளைப் பெற்றுய்வீர்களாக.

## கிரியாகால நிகழ்வுகள்

**19.04.2018** சித்திரைத் திங்கள் 06ஆம் நாள் வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு விநாயகர் வழிபாட்டு கர்மாரம்பம் அனுஞ்ஞை கிராமசாந்தி அஷ்டபலி, வாஸ்துசாந்தி, விபூதி பிரசாதம் வழங்கல்.

**20.04.2018** வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கும்பபூஜை, 9.30 மணிக்கு மூலவர் அபிஷேகம், 10.45 மணிக்கு வசந்த மண்டபபூஜை கொடிப்படி இருவீதிப் பிரதட்சணம், விநாயகர் பூஜை, தம்பபிரதிஷ்டை, கொடிப்பட அபிஷேகம், சமஷ்ததேவதாவபகன மூஷிக தாளம், மயூரதாளம் தானசீகர் 12.02 மணிக்கு தெய்வேந்திர சுபமுகூர்த்த வேளையில் துவாரோகணம் (கொடியேற்றம்) மகா ஆசீர்வாதம் நவசாந்தி ஆவாகணம் மாலை 4.00 மணிக்கு யாகாரம்பம்.

**25.04.2018** அன்று எம்பெருமானின் அழகிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் பிற்பகல் 4.00 மணிக்கு இடம்பெறும்.

**26.04.2018** வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு (மிருக உற்சவம்) வேட்டைத் திருவிழா நடைபெறும்.

**27.04.2018** வெள்ளிக்கிழமை மாலை சப்பறத்திருவிழா நடைபெறும்.

**28.04.2018** சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு தேர்த் திருவிழா நடைபெறும்.

**29.04.2018** ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு கும்பபூஜை 8.30 மணிக்கு வசந்தமண்டபப் பூஜையும் 10.00 மணிக்கு தீர்த்த உற்சவமும் 11.30 மணிக்கு யாககும்பாபிஷேகம் விசேட பூஜை, விபூதி பிரசாதம் வழங்கல்.

**30.04.2018** திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு திருக்கல்யாணம், எம்பெருமான் திருவூஞ்சல் பூந்தண்டிகையில் எம்பெருமாள் திருவீதி உலா, விபூதி பிரசாதம் வழங்கல்.

**01.05.2018** செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு பிராஜசித்த அபிஷேகம் 7 மணிக்கு வைரவர் சுவாமிக்கு விசேட பூஜை, விபூதி பிரசாதம் வழங்கல்.



**அடியார்கள் அனைவரும் ஆசார சீலர்களாக வருகைதந்து எம்பெருமானின் பேரருளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.**

மஹோற்சவ பிரதமகுரு, கும்பாபிஷேக கிரியாமணி
சிவஸ்ரீ இ.பாலகிருஸ்ண குருக்கள்
பிரதமகுரு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம்,
திருக்கோவில் கொம்மாந்தறை.

ஆலய தர்மகர்த்தா செ.நடேசபிள்ளை
அல்லைப்பிட்டி இனிச்சபுளியடி
முருகன் தேவஸ்தானம்.

(சி/2248)



## வேலையாட்கள் தேவை

கொழும்பில் இயங்கி வரும் டிஸ் அன்ரனா மற்றும் கேபிள் TV உதிரிப் பாக விற்பனை நிலையத்திற்கு கீழ்க் காணும் வெற்றிடங்கள் உள்ளது. உடன் தொடர்பு கொள்ளவும்.

Manager-40,000/- வரை
Bill Clark-25,000- வரை
Store Keeper-25,000/- வரை
Accountant-30,000/- வரை
உதவியாளர்கள்-20,000/- வரை
உதவி Technicians-25,000/- வரை

தங்குமிடம் உணவு வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் 077 771 0785

Satstech Engineers
Pvt (Ltd)
Colombo-13


## யஸ்மின் சூகா அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்வார்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னாள் அதிகாரி யஸ்மின் சூகா அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அரசாங்கம் விடுத்த அழைப்பிற்கு அமைய அவர் இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் அமைப்பின் தருஸ்மன் அறிக்கை தயாரிக்கும் பிரதிநிதிகளில் ஒருவராகவும் சூகா கடமையாற்றியுள்ளார்.

போரின் போது 40,000 தமிழர்கள் கொல்லப்பட்டதாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தின் நடவடிக்கைகள்; குற்றச் செயல்களுக்குப் பொறுப்புகூறாத நிலைமை நீடித்தல் என்பன தொடர்பில் சர்வதேச அரங்கில் தொடர்ச்சியாக சூகா குரல் கொடுத்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


## காயத்திரி திருமாங்கல்ய சேவை

திருமணம் பொருத்தம் பார்த்தல், திருமணங்கள் நிச்சயித்தல், ஜாதகம் எழுதுதல் (ருது),காண்டம் பார்த்தல், வெளிநாட்டு குறிப்புகளும் பொருத்தப்படும் போன்ற சேவைகள் திருப்திகரமாக செய்து கொடுக்கப்படும்.

உரிமையாளர் க.சுகந்தன் ஞானவைரவர் கோவிலடி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
(தலைமைக் காரியாலயம் சுவிஸில் உள்ளது)
T.P.021 223 2222, 076 835 1932

(3665)



## மேலாளர் / எக்கவுண்டன் தேவை

யாழில் இயங்கிவரும் டிஸ் அன்ரனா மற்றும் கேபிள் TV உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு பொறுப்பாக செயற்படக் கூடிய கணனி அறிவுள்ள பெண் அல்லது ஓய்வு பெற்ற ஆண் ஒருவர் தேவை. பொறுப்பாக செயற்படக் கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். திறமைக்கு ஏற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

தொடர்பு: 077 771 0785



# ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க மகிந்த அணி நிபந்தனையுடன் ஆதரவு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் சட்டத் திருத்தத்துக்கு ஆதரவளிப்பதற்கு, மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான கூட்டு எதிரணி நிபந்தனை விதித்துள்ளது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கும் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப் போவதாக ஜே.வி.பி. அறிவித்திருந்தது.

இன்று நடக்கவிருந்த நாடாளுமன்ற அமர்வில் இந்த திருத்தச் சட்ட வரைவை சமர்ப்பிக்க ஜே.வி.பி. திட்டமிட்டிருந்தது.

எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தை மே 8 ஆம் திகதி வரை ஒத்தி வைத்திருப்பதால், அடுத்த கூட்டத்தொடரில் இந்த சட்ட வரைவு சமர்ப்பிக்கப்படும். இந்த நிலையில்



கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கும் திருத்தச் சட்ட வரைவை தமது தரப்பு ஆதரிக்கத் தயார் என்று கூறியுள்ளார்.

ஆனால், அரசியலமைப்பு திருத்தத்துக்கு அங்கீகாரம் அளிக்கப்படும் அதே நாளில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் நிபந்தனை விதித்துள்ளார்.

சட்டங்களின் படி ஜனாதிபதி பதவிக்கு மகிந்த ராஜபக்ஷ மீண்டும் போட்டியிட முடியாத நிலை உள்ளதால், கூட்டு எதிரணி அந்தப் பதவியை ஒழிக்கும் சட்டவரைவுக்கு நிபந்தனையுடன் ஆதரவளிக்க முன்வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதம் ரத்து

(கொழும்பு)

மேல்மாகாண சபை ஊடாக நிர்வகிக்கப்படும் கொழும்பு கல்வி வலய பாடசாலைகளில் நடைபெறும் நிகழ்வுகள், விழாக்களுக்கு மாகாண சபை உறுப்பினர்களை அழைக்குமாறு மேல் மாகாண வலய கல்விப் பணிப்பாளர் அதிபர்களுக்கு அனுப்பிய கடிதம் திடீரென இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கல்வி அதிகாரிகள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் காரணமாக மேல்மாகாண கல்வி பணிப்பாளர் ஸ்ரீனால் நோனீஸ் விடுத்த உத்தரவுக் கமைய குறித்த கடிதம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# மாந்தை கிழக்கு பிரதேசசபையில் ஐ.தே.க.ஆட்சியை கைப்பற்றியது

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச சபையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அதிகாரத்தைக் கைப் பற்றியுள்ளது.

நடைபெற்று முடிந்த உள்ளூ ராட்சித் தேர்தலையடுத்து தேர்ந் தெடுக்கப்பட்ட பதின்மூன்று உறுப் பினர்களில் மாந்தை கிழக்குப் பிரதேச சபைக்கான தவிசாளர் மற்றும் உப தவிசாளர்கள் நேற்று நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆறு உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு மாந்தை கிழக்குப் பிரதேச சபையின் ஆட்சியை அமைக்க வுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினால் தெரிவிக்கப்பட்டு இச்சபைக்கான தவிசாளரின் பெயர்.விபரம் ஏற்கனவே வெளி யிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்றைய தினம் மாந்தைகிழக்கு பிரதேச சபைக் கான தவிசாளர் மற்றும் உப தவி சாளர் தெரிவு உள்ளூராட்சி அமை ச்சின் செயலாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் நேற்று நடைபெற் றுள்ளது.

இதில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஈழமக்கள் ஜனநாயக சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் உதவியுடன் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

தவிசாளராக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மகாலிங்கம் தயானந்தன் தெரிவு செய்யப்பட்ட துடன் உப தவிசாளராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ராஜ் குமார் சிந்துஜன் நியமிக் கப்பட் டுள்ளார்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஆட்சியமைக்கும் என்றும் எதிர் பார்த்த போதும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைப்பத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (2-315)

# 37 கிலோ கேரளக் கஞ்சா பொதிகளுடன் மூவர் கைது

## பூநகரி பொலிஸார் அதிகாலை வேளை அதிரடி



(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பொலி ஸாரால் 37 கிலோ கிராம் கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டதுடன், மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து புத் தளம் நோக்கி எடுத்துச்செல்லப்பட்ட குறித்த கஞ்சாப் பொதிகளே இவ் வாறு பொலிஸாரால் சோதனை யிடப்பட்டு பூநகரி-மன்னார் வீதி யில் வைத்து நேற்று அதிகாலை ஒருமணியளவில் பொலிஸாரால் கைப்பெற்றப்பட்டுள்ளது. பூநகரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து மேற்கொள் ளப்பட்ட சோதனையின் போது குறித்த கஞ்சா பொதியுடன் சென்ற வாகனமும் சந்தேகத்தின் பேரில் மூவரும் கைது செய்யப்பட்டுள் ளனர். பூநகரி பொலிஸ் பொறுப்ப திகாரி கே.எம் கபில பண்டார தலைமையிலான 12 பேர் கொண்ட பொலிஸ் குழுவினர் குறித்த நட வடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

பொலிஸ் விசாரணைகள் இடம் பெற்று வரும் நிலையில் மீட்கப்பட்ட கஞ்சா பொதிகள் மற்றும் வாகனம் என்பனவற்றுடன் கைது செய்யப் பட்ட மூவரும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.(2-15-312-315)

# துணுக்காய் பிரதேச சபையின் ஆட்சி அதிகாரம் கூட்டமைப்பு வசம்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்திற் குட்பட்ட துணுக்காய் பிரதேச சபை யின் ஆட்சி அதிகாரத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றி யுள்ள நிலையில், . தவிசாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழரசு கட்சி சார்பில் போட்டி யிட்டு வெற்றிபெற்ற அம்பலவாணர் அமிர்தலிங்கமும் உதவித் தவிசா ளராக தமிழ்த் தேசிய கூட்டமை ப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற புளொட் அமைப்பின் தங்க வேல் சிவகுமாரும் தெரிவாகி யுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவது,

13 பேரை உறுப்பினர்களாகக் கொண்ட துணுக்காய் பிரதேச சபைக்கான தவிசாளர் மற்றும் உதவித் தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு நேற்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு துணுக்காய் பிரதேச சபையின் ஒன்றுகூடல் மண்ட பத்தில் வடக்கு மாகாண உள்ளூ ராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் நடை பெற்றுள்ளது.

இதன் போது நடைபெற்று முடிந்த வாக்கெடுப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவு டன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி பீட் ஏறியது.

துணுக்காய் பிரதேச சபைக் கான தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழரசு கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற அம்பலவாணர் அமிர்தலிங்கத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 6 வாக்குகளும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரு வாக்குமாக மொத்தம் 7 வாக் குகள் பெற்று தவிசாளராக தெரி வாகியுள்ளார்.

இவரை எதிர்த்து தவிசாளர் பதவிக்கு போட்டியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பெருமாள் நடேசனுக்கு ஐக்கிய தேசிய கட்சி யின் 3 வாக்குகளும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் 2 வாக்குகளும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஒரு வாக்குமாக மொத்தம் 6 வாக்குகள் கிடைத்துள்ளன.

இதேவேளை, உதவித் தவிசா ளரைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டி யிட்டு வெற்றி பெற்ற தங்கவேல் சிவகுமாருக்கு 7 வாக்குகளும் இவ ருடன் போட்டியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உலகநாதன் பார்த்தீபனுக்கு 6 வாக்குகளும் கிடைத்த நிலையில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் சார்பில் போட்டி யிட்ட புளொட் அமைப்பின் தங்க வேல் சிவகுமார் உதவி தவிசாள ராக தெரிவு செய்யப்பட்டுள் ளார். (2-15)




# வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு மன்னார் மாவட்ட செயலகத்தில் நாளை வரை நேர்முகத் தேர்வு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள வேலையில்லாப் பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்ளும் வகையில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை முதல் மன்னார் மாவட்டச் செயலகத்தில் மூன்று பிரிவுகளில் நேர்முகத் தேர் வுகள் இடம்பெற்று வருகின்றன.

மன்னார் மாவட்டத்தில் சுமார் 700 இற்கும் மேற்பட்ட வேலை யில்லாப் பட்டதாரிகள் காணப் படுகின்ற போதும் அவர்களில் சுமார் 515 பேர் பதிவுகளை மேற் கொண்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை தொடக்கம் நாளை 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை முதல் மன்னார் மாவட்டச் செயலகத்தில் மூன்று கட்டங்களாக நேர்முகத் தேர்வுகள் இடம் பெற்று வருகின்றன.

பதிவுகளை மேற்கொள்ளாத பட்டதாரிகள் நாளை 20 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்டச்செயல கத்தில் பதிவுகளை மேற்கொள்ளு மாறும் விடுபட்ட குறித்த பட்டதாரி களுக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 25 ஆம் திகதி புதன்கிழமை மாலை வரை நேர்முகத்தேர்வுகள் இடம் பெறும் என மன்னார் மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது.(2-4-281)

## 'கலாபூஷணம்', 'முதலமைச்சர்'

# விருதுகளுக்கு கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(மல்லாவி)

இலங்கையில் இலக்கியத் துறை யில் அளப்பரிய சேவைகள் ஆற்றி வரும் கலைஞர்கள் மற்றும் இலக் கியவாதிகள், விற்பன்னர்களுக்கு அகில இலங்கை ரீதியாக அரசின் உயர் விருதான "கலாபூஷணம்" விருது மற்றும் "முதலமைச்சர் விருது" என்பன வழங்கி கௌர விக்கப்பட்டு வரும் நிலையில், நடப்பாண்டுக்குரிய "கலாபூஷணம் விருது" மற்றும் "முதலமைச்சர் விருது" ஆகியவற்றை வழங்கு வதற்காக மாவட்ட மட்டத்தில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள தற்கு அமைவாக மன்னார் மாவட் டத்தைச் சேர்ந்த துறை சார்ந்த கலைஞர்களிடம் இருந்து விண் ணப்பங்களை கலாசார அலுவல் கள் திணைக்களத்தின் மன்னார் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கோரியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மத்திய கலாசார அலுவல்கள் அமைச்சிற்குட்பட்ட கலாசார அலு வல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் இந்த விருதுக்கு தமிழ், முஸ்லிம், சிங்களம் ஆகிய இனங் களைச் சேர்ந்த 60 வயதிற்கு மேற் பட்ட கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியும்.

தமிழ் கலைஞர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு இந்து கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் ஊடாக முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

எனவே, மன்னார் மாவட்டத் தில் சிற்பம், ஓவியம், நாடகம், நட னம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ் வரம், சினிமா, நாட்டுப் புறவியல், ஊடகத்துறை போன்ற பல்வேறு துறைகளில் மிகச் சிறப்பாக சேவை யாற்றிய மற்றும் சேவையாற்றி வரும் கலைஞர்கள் இவ் விருதுக் காக விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான, விண்ணப்பங் களை தங்கள் பகுதியில் உள்ள பிரதேச செயலகங்களில் கடமை யாற்றி வரும் கலாசார உத்தியோ கத்தர்களிடம் அல்லது மன்னார் மாவட்ட செயலகத்தில் இயங்கி வரும் கலாசார உத்தியோகத்தர் அலுவலகத்தில் பெற்று பூரணப் படுத்தி பூரணப்படுத்தப்பட்ட விண் ணப்பங்களுடன் உரிய தகுதி நிலைப்படுத்தும் ஆவணங்களை யும் இணைத்து எதிர் வரும் மே மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்குமாறு அவர் அறிவித் துள்ளார்.

இது தொடர்பாக மேலதிக விப ரங்கள் தேவைப்படுவோர் உங்கள் பகுதியில் உள்ள பிரதேச செயல கங்களில் கடமையில் வரும் கலா சார உத்தியோகத்தர்களிடம் அல் லது மன்னார் மாவட்ட கலாசார உத்தியோகத்தரை தொடர்புகொள் வதன் ஊடாக தகவல்களை பெற் றுக் கொள்ள முடியும் எனவும் இது தொடர்பில் மேலும் தெரிவித்து ள்ளார். (2-15)

# தேவைகளை பூர்த்தி செய்து தருமாறு பிரதேச செயலகத்திற்கு கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு புத்துவெட்டு வான் கிராமத்தில்பல்வேறு தேவை களை இவ்வாண்டு நிவர்த்தி செய்து தருமாறு பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரி விற்குட்பட்ட மிகவும் பின் தங்கிய கிராமங்களில் ஒன்றாகக் காண ப்படுகின்ற புத்துவெட்டுவான் கிரா மத்தில் பல்வேறு தேவைகள் காணப்படுகின்றன.

குறித்த கிராமத்தின் தேவை களை முன்னுரிமை அடிப்ப டையில் செய்து தருமாறு பிரதேச மக்கள், பொதுஅமைப்புக்கள் ஆகியோர் கோரியுள்ளனர்.

குறித்த கோரிக்கைகள், பிரதேச செயலகத்திற்கு முன்வைக்கப் பட்டுள்ளதாகவும் மேற்படி மக்கள் தெரிவித்துள்ளனர். அதாவது, கொக்காவில் புத்துவெட்டுவான் பிர தான வீதியைப்புனரமைத்து அதன் ஊடாக போக்குவரத்து சேவையை ஏற்படுத்துமாறும் மூன்று கிலோ மீற்றர் வரையான உள்ளக வீதிகள் காணப்படுகின் றன.

இந்த வீதிகளைப் புனரமைத் துத்தருமாறும் இந்தப் பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப் பட்ட வாணி மோட்டைக்குளம் புனரமைக்கப்பட்டபோது அதற் குட்பட்ட காணிகளை மேட்டுநிலப் பயிர்ச்செய்கைகளுக்கு வழங்கு மாறும் அதேவேளை விளையாட்டு மைதானம் புனரமைத்தல், சனச முக நிலையம்,மற்றும் அறநெறி பாடசாலைகளுக்கான கட்டடங்கள், கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள், நெல் உலரவிடும் தளத்திற்கான சுற்றுவேலி என்ப வற்றை அமைத்தல் போன்ற பல் வேறு தேவைகள் காணப்படுவதா கவும் இத்தேவைகளை நிவர்த்தி செய்து தருமாறு பிரதேச மக்கள் கோரியுள்ளனர். (2-315)

# நடப்பாண்டில் மூன்று குளங்களின் கீழ் 265 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை

## வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத் தகவல்படி

(மல்லாவி)

வவுனிக்குள நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் வவுனிக்குளம் உட்பட 12 பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசன குளங்கள் உள்ள நிலையில் மொத்தம் 11 ஆயிரத்து 283 ஏக்கரில் நெல் பயிரிட்டப்படும் நிலையில் நடப்பாண்டுக்குரிய சிறுபோக நெற் செய்கையை 3 குளங்களின் கீழ் 265 ஏக்கரில் மட்டுமே நெல் பயிரிட்டு வருவதாக வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

கடந்தாண்டு தொடக்கம் நடப்பாண்டு முற்பகுதி வரையிலான காலப் பகுதியில், கால நிலையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக போதிய மழை வீழ்ச்சியின்மையால் வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத் தின் கீழ் உள்ள நீர்ப்பாசனக் குளங்களிற்கு போதியளவு நீர் வரத்து கிடைக்கப் பெறவில்லை.

இதனால், கடந்த கால போகத்தின் இறுதிக்கட்டத்தில் குளங்களின் நீர் மட்டம் குறைவடைந்தமையால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ள நிலையில், நடப்பாண்டுக்குரிய சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கு விவசாயிகள் தயாராக இருந்த போதும் போதிய மழை வீழ்ச்சியின்மையால் குளங்களின் நீர் வற்றிப் போயுள்ளதால் சிறுபோக நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த குளங்களை நம்பி வாழுகின்ற சுமார்ஆயிரத்து200இற்கு மேற்பட்ட மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 952, ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும், ஐயங்கன் குளத்தின் கீழ் நடப்பாண்டுக்குரிய சிறுபோக நெற்செய்கையாக 83 ஏக்கரிலும் 450 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் புத்து வெட்டுவான் மருதங்குளத்தின் கீழ் 97 ஏக்கரிலும் 405 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் கோட்டை கட்டிய குளத்தின் கீழ் 85 ஏக்கரிலுமாக மொத்தம் 265 ஏக்கரில் மட்டுமே இம்முறை சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த சிறுபோக நெற் செய்கையினை மேற்கொள்கின்ற விவசாயிகளுக்கான இறுதி விதைப்பு திகதி இன்றுடன் முடிவடைவதுடன் கால்நடைகள் கட்டுப்பாடு கடந்த 7 ஆம் திகதி முதல் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# கிளிநொச்சியில் 14 ஆயிரத்து 415 குடும்பங்களுக்கு வீடுகள் தேவை

## மாவட்ட செயலகத் தகவல் படி

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறிய பொது மக்களில் 14ஆயிரத்து 415 குடும்பங்களுக்கு வீடுகள் தேவைப்படுகிறது என கிளிநொச்சி மாவட்டச் செயலக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

மீள்குடியேறிய போது புதிய வீடுகள் மற்றும் திருத்தம் செய்யப்பட வேண்டிய வீடுகள் 41ஆயிரத்து 846 வீடுகள் தேவையாக காணப்பட்டன.

இதில் 35ஆயிரத்து 667 புதிய வீடுகளும், திருத்தம் செய்யப்பட வேண்டிய வீடுகள் 6 ஆயிரத்து 179 வீடுகளும் காணப்பட்டன.

இதில் இன்றுவரை 26 ஆயிரத்து 564 வீடுகள் அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. அத்தோடு 867 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

எனவே இன்றும் 14 ஆயிரத்து415 வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளது என மாவட்டச் செயலகத்தின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இவ்வருடம் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சின் மூலம் 7ஆயிரம் வீடுகளும், மீள்குடியேற்ற அமைச்சின் மூலம் 50 வீடுகளும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் 171 வீடுகளும் கிடைக்கப் பெறவுள்ளது எனவும் அப் புள்ளிவிபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-312)




# வைத்தியத்துறை வெற்றிடங்கள் நிரப்புவதில் தொடர்ந்தும் இழுபறிநிலை

## சிறிதரன் எம்.பி.சுட்டிக்காட்டு



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் வைத்தியத்துறை வெற்றிடங்கள் நிரப்புவதில் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகின்ற வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் ஆளணி வெற்றிடங்கள் காணப்படுவதனால் மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் தமது மருத்துவத்தேவையை நிறைவு செய்வதில் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கருத்துத் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகின்ற வைத்தியத்துறை வெற்றிடங்களை நிரப்புவதற்கு அதிகாரிகள் தயாராக இல்லை.

கிளிநொச்சி மாவட்டத்தில் புதிதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளபோதும், அவருக்கான நியமனக்கடிதம் வழங்கப்படவில்லை.

ஏற்கனவே இருந்த பிராந்திய சுகாதாரப்பணிப்பாளர் மேல்படிப்பிற்காக சென்றுள்ள நிலையில் இந்த வெற்றிடம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் மருத்துவத் துறையில் இருக்கின்ற குறைபாடுகளை வெளிக்காட்டுவதில்லை. பல தடவைகள் கதைத்தாலும் மாவட்டம் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது.

குறித்த விடயம் தொடர்பில் இம்மாத முற்பகுதியில் கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தில்நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின் போதும், குறித்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (2-315)

## கிளிநொச்சி மாவட்ட விவசாய திணைக்களத்தினால்

# 56 மில்லியன் ரூபா செலவில் பல்வேறு அபிவிருத்தி வேலைகள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட விவசாய திணைக்களத்தினால் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் 56.78 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாய துறையை விருத்தி செய்யும் வகையில் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில்மாகாண குறித்தொதுக்கப்பட்டநிதியின் கீழ் 22 திட்டங்கள் 29.60 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சினூடாக நான்கு வேலைத்திட்டங்கள் 26.98 மில்லியன்ரூபாவிலும்மாகாண சபை உறுப்பினர்களின் ஒதுக்கீட்டின் கீழ் ஒரு வேலைத் திட்டம் 0.20 மில்லியன் ரூபா விலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை உலக உணவு ஸ்தாபனம் மற்றும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி ஆகியவற்றினூடாக காளான் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மேற்படி விவசாய திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டதுடன், தற்போது மாவட்டத்தின் உப உணவுச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

குறிப்பாக, நிலக்கடலை, பயறு என்பவற்றை வழங்கி இப்பயிர்ச்செய்கை மேற் கொள்வதற்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-315)

# பண்பாட்டு விழாவும்; பொருட்களின் கண்காட்சியும்

(பரந்தன்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் நிதிப்பங்களிப்புடன் கிளிநொச்சி மாவட்ட செயலகமும் மாவட்ட பண்பாட்டு பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள மாவட்ட பண்பாட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.மணிக்கு A9 வீதியில் டிப்போ சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள மாவட்ட செயலக பயிற்சி நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வை முன்னிட்டு பாரம்பரிய பொருட்கள், பாரம்பரிய உணவுகள், கைவினைப் பொருட்கள் மற்றும் மாவட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களின் நூல்கள் என்பவற்றின் கண்காட்சியும் விற்பனையும் இன்று காலை 9.30 மணி முதல் குறித்த பயிற்சி நிலையத்தில் இடம் பெறும் எனவும் மாவட்ட பண்பாட்டு பேரவை அறிவித்துள்ளது.

மாவட்ட பண்பாட்டுப் பேரவைத் தலைவரும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருமான சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரச அதிபர் உருவை எஸ்.தில்லை நடராசா, சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அபிராமி பாலமுரளி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக கிளிநொச்சி முதுபெருங் கலைஞர் சதாசிவம் தில்லை நடராசா கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் இளங் கலைஞர்-2017, கலைக் கிளி-2017 ஆகிய விருதுகள் வழங்கி வைக்கப்படவுள்ளன. (2-312-315)

# கமக்கார அமைப்புக்களை புனரமைக்க திகதிகள் அறிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கமநலசேவை நிலையங்களிற்குட்பட்ட கமக்கார அமைப்புக்களை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கமநல சேவை நிலையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கமக்கார அமைப்புக்களை புனரமைக் குமாறு விவசாயிகள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

வருட ஆரம்பத்தில் கமக்கார அமைப்புக்களை புனரமைக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலினால் குறித்த தெரிவுகள் பிற்போடப்பட்டிருந்தது.

கிளிநொச்சி கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட24 கமக்கார அமைப்புக்களில் 10 வரையான அமைப்புக்கள் புனரமைப்புக்கள் செய்யப்படவுள்ளன.

நாளை 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை புது ஐயன் கன்குளம் கமக்கார அமைப்பு புனரமைப்புச்செய்யப்படவுள்ளதுடன், எதிர்வரும் மே மாதம் மூன்றாம் திகதி ஊரியான் மற்றும் முரசுமோட்டை ஆகிய கமக்கார அமைப்புக்கள் புனரமைப்பதற்கு திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளதாக கமநல சேவை நிலையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# மஹா கும்பாபிஷேகம்

(குருமன்காடு)

வவுனியா - தோணிக்கல் அருள்மிகு ஸ்ரீசர்வசித்தி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.03 மணிமுதல் 7.26 மணிக்குள் வரும் சுப முகூர்த்த வேளையில் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

தொடர்ந்து 11 நாட்கள் மண்டலாபிஷேகமும் 12ஆம் நாள் சங்காபிஷேகமும் நடைபெறும். (2-250)

# விளம்பி வருட இராசி பலன்கள்

## 14.04.2018-13.04.2019



விளம்பி வருடத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு, அஷ்டமத்தில் வக்ரம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசியிலேயே 4, 7 இற்கு அதிபதியான புதனும், பஞ்சம ஸ்தானத்திற்கு அதிபதியான சந்திரனும் சஞ்சரிக்கப் போகின்றனர். உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்தில் 6 இற்கு அதிபதியான சூரியனும், 3, 8 இற்கு அதிபதியான சுக்ரனும் இணைந்திருக்க, அவர்களின் மீது குருவின் பார்வை பதிகின்றது. 10 இல் செவ்வாய் மற்றும் சனி சேர்க்கை பெற்றிருக்கிறது. 5 ஆம் இடத்தில் ராகுவும் 11 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள்.

இந்த விளம்பி வருட கிரக நிலைகளுடன், உங்களது சுய ஜாதக கிரக நிலைகளையும் ஒப்பிட்டுப் பார்த்து, அதன் பலன்களை அறிந்து அதற்கான பரிகாரங்களைச் செய்வது நன்மைகளை வழங்கும்.

இந்த விளம்பி வருடத் தொடக்கம் சனிக்கிழமையாக இருக்கிறது. சனி உங்கள் இராசிக்கு இலாபாதிபதியாகவும் விரயாதிபதியாகவும் விளங்குவர். எனவே இலாபத்தைக் கொடுத்து அதற்கேற்ப விரயத்தையும் கொடுத்து சரிசமமாகப் பலன் தருவார். இருப்பினும் நீங்கள் பொருளாதாரத்திற்காக கவலைப்பட வேண்டியதில்லை. தேவைக்கேற்ற பணம் வந்து கொண்டே இருக்கும். அலைச்சலின் காரணமாக ஆரோக்கியத் தொல்லை அவ்வப்போது ஏற்படலாம். பஞ்சம ராகு, இலாப கேது, அஷ்டம குரு ஆகியவற்றிற்குரிய வழிபாடுகளையும் பரிகாரங்களையும் மேற்கொண்டால் ஆண்டு முழுவதும் நற்பலன்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.

### குரு பார்வை பலன்!

ஆண்டின் தொடக்கத்தில் குருபகவான் அஷ்டமத்தில் சஞ்சரித்து 2, 4, 12 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். தன ஸ்தானத்தைப் பார்க்கும் குருவாலும், சுக ஸ்தானம் மற்றும் பயண ஸ்தானத்தில் பதியும் குருவின் பார்வையாலும் நல்ல மாற்றங்கள் உங்களுக்கு வந்துசேரப் போகின்றது. சிவாலயங்களுக்குச் சென்று வியாழக்கிழமை தோறும் குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவதன் மூலம் நல்ல பலன்களை வரவழைத்துக் கொள்ளலாம்.

இரண்டாம் இடத்தை குரு பார்ப்பதால், திரண்ட செல்வம் உங்களுக்கு வரப்போகிறது. வறண்ட நிலை மாறி வளர்ச்சி கூடும். கொடுத்த பணம் குறிப்பிட்டபடி வந்து சேரும். கொள்கைப் பிடிப்போடு செயல்படுவீர்கள். குடும்பத்தில் இருந்த சச்சரவுகள் மாறி சமாதானம் உருவாகும். மூன்றாம் நபரால் ஏற்பட்ட பிரச்சினைகள் முற்றிலும் விலகும்.

குருவின் பார்வை 4 ஆம் இடத்தில் பதிவதால் பெரியவர்களின் ஆசி எப்போதும் உண்டு. சுகங்களும், சந்தோஷங்களும் ஏற்படும். கல்யாண வாய்ப்புகள் கைகூடும். அரசியலில் உள்ளவர்களுக்குப் புதிய பொறுப்புகள் கிடைக்கும். கல்வி வளர்ச்சி நினைத்தது போல நிறைவேறும். குறிப்பாக நீங்கள் மேற்படிப்பு படிக்க விரும்பினாலும், உங்களைச் சார்ந்தவர்கள் படிக்க விரும்பினாலும் அந்த முயற்சி கைகூடும். பிறருக்கு பொறுப்புகள் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை தானாக வந்து சேரும்.

12 ஆம் இடத்தில் பதியும் குருவின் பார்வையால், பயணங்கள் அதிகரிக்கும். வெளிநாட்டு யோகம் விரும்பியபடியே அமையும். வீடு மாற்றங்களைச் சற்று பொறுத்திருந்து செய்வது நல்லது.

ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்தி ஆரோக்கியத்தை சீராக வைத்துக் கொள்ளுங்கள். உத்தியோகத்தில் மாறுதல் கேட்டு நீண்ட நாட்களாக எதிர்பார்த்தவர்களுக்கு, குருவின் பார்வையால் அந்த மாற்றம் நிகழும். குருவைப் பலப்படுத்த ஒவ்வொரு வியாழக்கிழமையும் விரதம் இருந்து குரு வழிபாட்டையும், 63 நாயன்மார்கள் வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

## திட்டங்கள் வெற்றி பெறும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

### செவ்வாய்-சனி சேர்க்கையும் பார்வையும்!

14.4.2018 முதல் 29.4.2018 வரை தனுசு இராசியில் செவ்வாய்-சனியின் சேர்க்கை உள்ளது. அதன் பிறகு 20.3. 2019 முதல் 13.4.2019 வரை செவ்வாய், சனியைப் பார்க்கும் அமைப்பு உள்ளது. இந்த முரண்பாடான கிரகங்களின் சேர்க்கையும், பார்வையும் தொழில் ஸ்தானம் சம்பந்தப்பட்ட வகையில் இருப்பதால் செய்யும் தொழிலில் திடீரென பங்குதாரர்களின் ஒத்துழைப்பு குறையலாம். போதிய முதலீடு இல்லாமல் தத்தளிக்க நேரலாம். ஆரோக்கியத் தொல்லைகளும் அதிகரிக்கும். 2.9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாயோடு சனி சம்பந்தப்படுவதால் ஒருதொகை செலவழிந்த பின்னரே, அடுத்த தொகை உங்கள் கைக்கு வரும். தந்தை வழி உறவில் விரிசல் ஏற்படலாம். இக்காலத்தில் அங்காரகனுக்குரிய சிறப்பு வழிபாடுகளைச் செய்வதோடு, விஸ்வரூப ஆஞ்சநேயரையும் வழிபடுங்கள்.

### விருச்சிகத்தில் குரு!

விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 18 ஆம் திகதி (4.10.2018) வியாழக்கிழமை அன்று, விருச்சிக இராசிக்கு குரு பகவான் பெயர்ச்சியாகிறார். இந்தக் குருப் பெயர்ச்சியின் விளைவாக அதன்பார்வை உங்கள் இராசியில் பதியப் போகிறது. சகோதர ஸ்தானமான 3 ஆம் இடத்தையும், 5 ஆம் இடத்தையும் குரு பார்க்கப் போகிறார். பார்க்கும் குரு உங்கள் இராசிநாதனாகவே இருப்பதால் பலன்கள் அதிகமாகவே கிடைக்கும்.

9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழிவகுத்துக் கொடுக்கும். அவர் ஜென்ம இராசியில் பதிவதால் உடல்நலம் சீராகும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். எந்தக் காரியத்தையும் எடுத்தோம், முடித்தோம் என்று செய்ய இயலும். வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்து மகிழ்வீர்கள். வருமானம் திருப்திகரமாக இருக்கும். தேங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். திறமைக்குப் பரிசுகளும், பாராட்டுக்களும் கிடைக்கும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும் நேரமிது.

குருவின் பார்வை 3 ஆம் இடத்தில் பதிவதால் துணிந்து முடிவெடுத்து துயரங்களை வெளியேற்றிக் கொள்ள சந்தர்ப்பங்கள் கைகூடிவரும். உங்களுக்குரிய அங்கீகாரம் சமூகத்தில் கிடைக்கும். அரசியல் துறையைச் சார்ந்தவர்களுக்கு திடீரெனப் பொறுப்புகள் வரலாம். வழக்குகள் சாதகமாக முடியும்.

5 ஆம் இடத்தில் பதியும் குரு பார்வையால், உறவினர்களின் உதவி கிடைக்கும். உயர்கல்விக்காக வெளிநாடு செல்லும் யோகம் கிட்டும். பிரிந்திருந்த பெற்றோர் மீண்டும்வந்து இணைவர். ஒரு சிலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இன்னும் சிலருக்கு நிரந்தர பணி அமையும். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும்.




### ராகு-கேது பெயர்ச்சி!

13.2.2019 இல் மிதுன இராசியில் ராகுவும், தனுசு இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப்போகிறார்கள். உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் ராகுவும், 10 ஆம் இடத்தில் கேதுவும் வருகிறார்கள். கேந்திரத்தில் ராகு நிற்பதால், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். கீர்த்தியும், புகழும் கூடும். வாங்கிய வீட்டை விரிவு செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வங்கிச் சேமிப்பு உயரும். கேது பலத்தால் எதிர்பார்த்த பதவிகள் கிடைக்கலாம். பிரச்சினைகள் தீர்ந்து பிரகாசிக்கும் வாய்ப்பு கைகூடும். எந்தத் தொழில் செய்தாலும் அதில் எதிர்பார்த்த இலாபம் வரும். சொந்தத் தொழில் செய்ய நினைப்பவர்கள் சுய ஜாதகத்தையும் புரட்டிப் பாருங்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வு வந்து சேரும். ஓய்வு பெற்ற பின்னும் கூட ஒரு சிலருக்கு வேலை நீடிக்கும். இக்காலத்தில் நாகசாந்திப் பரிகாரங்களை செய்தால் தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். தொகை வரவும் திருப்தி தரும்.

### வளர்ச்சிக்குரிய வழிபாடு!

வியாழன் தோறும் தென்முகக் கடவுளை வழிபட்டு வருவதோடு, சூரிய பகவானுக்குரிய சுலோகங்களை உச்சரித்து வாருங்கள். சிறப்பு வழிபாடாக சிவகங்கை மாவட்டம் வைரவன் பட்டியிலுள்ள பைரவர், வளரொளிநாதர், வடிவுடையம்மன் ஆகியோரை வழிபாடு செய்தால் வளர்ச்சி கூடும். வாய்ப்புகள் அதிகம் வரும்.

### குரு மற்றும் சனி வக்ர காலங்கள்!

குருவின் வக்ர காலத்தில் வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உடன்பிறந்தவர்களால் ஏற்பட்ட பகை மாறும். தொழில் வளர்ச்சியில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் இலாபம் கிடைக்கும். புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொடுப்பர். கடை திறப்பு விழா, கட்டடத் திறப்புவிழா நடைபெறும் நேரம் இது.

சனியின் வக்ர காலத்தில் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். ஜீரணத் தொல்லைகளும், இரத்த அழுத்த நோய்களும், மூட்டு வலிகளும் வரலாம். பிறருக்கு பணப்பொறுப்புகள் சொல்வதால் சிக்கல்கள் ஏற்படும். விரயங்கள் கூடுதலாக இருக்கும். தொழில் கூட்டாளிகளை நம்பிச் செய்யும் காரியங்களில், உங்களது நேரடி கவனம் தேவை. இக்காலத்தில் சனி மற்றும் அங்காரகன் வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது.

### மீன இராசியில் பிறந்த பெண்களுக்கு!


விளம்பி வருடம் தொடக்கத்தில் வருமானப் பற்றாக்குறை ஏற்பட்டாலும், குருப் பெயர்ச்சிக்குப் பிறகு கூடுதல் வருமானம் வந்து சேரும். குடும்பத்தில் சுபகாரியங்கள் அடுத்தடுத்து நடைபெறும். சொத்து சேர்க்கை, வாகன யோகம் வாய்க்கும் ஆண்டு இது. கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். புகுந்த வீட்டில் உங்கள் புகழ் கூடும். பொறுப்புகள் அனைத்தையும் உங்களிடம் ஒப்படைப்பார்கள். தாய்வழி ஆதரவு திருப்தி தரும். தம்பி, தங்கைகளின் திருமண முயற்சிகளுக்கு கைகொடுத்து உதவுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகளும், கேட்ட சம்பளமும் கிடைக்கும். உடன் பணிபுரிபவர்களோடு இருந்த பகை மாறும். ராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக ஆரோக்கியத் தொல்லை அகலும். நிலையான தொழிலும், வருமானமும் கிடைக்க சுயஜாதகப்படி நடைபெறும் தெசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை தேர்ந்தெடுத்து, உங்களுக்கு அனுகூலம் தரும் நாளில் பரிகாரங்களைச் செய்து வழிபட்டு வாருங்கள். குருவின் பார்வையால் மங்கல ஓசை மனையில் கேட்டு மகிழும் வாய்ப்பு உண்டு.

(முற்றும்)

# கலைத்தரிசனம்



# 250 வருடங்கள் பழைமை வாய்ந்த மேள வாத்தியத்தை வாசிக்கும் பாரம்பரிய மேள வாத்தியக் கலைஞர் வ.ஜெயக்கொடி அவர்களுடனான சந்திப்பு



“ தமிழர்களின் பாரம்பரியக் கலைவடிவங்களில் ஒன்றான பறை வாத்தியத்தை 1993ஆம் ஆண்டு பயின்று 25 வருடங்களாகச் சிறந்து விளங்கும் இவர் முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளையில் 1962ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை ஆழியவளை றோ.க.த.க.பாடசாலையிலும் இடைநிலை கல்வியை முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியிலும் கல்வி பயின்றார். முப்பது கோவில்களில் பறை வாத்தியத்தை வாசித்து வருகின்றார். தெய்வீகக் கலையால் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி தன் வாசிப்புத் திறத்தால் இலங்கையின் பலபாகங்களிலும் அறிமுகமானார். 250 வருடங்கள் பழைமை வாய்ந்த பறைவாத்தி யத்தை பேணிப்பாதுகாத்து அப்பறையினை வாசித்து வருகின்றார். காலி முகத்திடலில் இலங்கைக் கலாசாரத் திணைக்களத்தினால் கௌரவிக்கப்பட்டதோடு நாட்டார் கலைக்கழகத்தினாலும் பாராட்டைப் பெற்றார். 2006 ஆம் ஆண்டு பறைவாத்தியக் கலைஞர் சங்கத்தை உருவாக்கினார். தற்போது பாரம்பரியக் கலை கள் அழியவிடாது காக்க வேண்டும் என்பதில் உயிர்த்துடிப் புடன் செயற்பட்டு வருபவர். அத்தகைய பாரம்பரியக் கலைஞ ரான வடிவேலு ஜெயக்கொடி அவர்கள் தன்னைப் பற்றியும் தன் கலைப் பணி பற்றியும் கூறியவை வலம்புரியில் பிரசுரமாகின்றது. ”

**❖ பாரம்பரியக் கலை வடிவங்களில் ஒன்றான பறை வாத்தியத்தை எப்படி வாசிக்கக் கற்றுக்கொண்டீர்கள்?**

எனது தந்தையார், தந்தையாரின் தந்தையார்கள் பறை வாசிப்பதைப் பரம்பரைத் தொழிலாகச் செய்து வந்தார்கள். இவர்கள் சிறந்த பறைவாத்தியக் கலைஞர்களாகத் திகழ்ந்தார்கள். 1992ஆம் ஆண்டு எனது தந்தையார் காலமாகிவிட்டார். வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு பரம்பரை பரம்பரையாக வாசித்து வந்த பறை எனது தந்தையாரின் இறப்பிற்குப் பின்னர் முடிந்து விடுமோ என்று கவலைப் பட்டுக்கொண்டிருந்தேன். அப்பா விட்டுச் சென்ற இந்தப் பணியைத் தொட்டுச் செல்ல முடியவில்லையே என்று கலங்கினேன். அப்போது திங்கட்கிழமை ஓர் இரவு எனது தந்தையார் கனவில் தோன்றி “தம்பி கண்ணகி அம்மன் கோவிலுக்குப் போங்கோ” என்றார். சிறிது நாட்களாக அப்பா கூறிய இவ்விடயத்தைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். ஏனெனில் எனக்குப் பறை வாசிக்கத் தெரியாது. சித்திரை மாதம் பௌர்ணமி திங்கட்கிழமை இரவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் கனவில் தோன்றி தனது கோலத்துடன் வந்து “நான் இருக்கிறேன் நீ பயப்படாதே” என்று திடமூட்டினார். காலையில் எழுந்து பறைவாத்தியக் கலைஞரும் எனது மாமனாருடன் வன்னி மிணாசித்த ம்பி மாமாவிடம் இரவு கண்ட கனவை எடுத்துக் கூறினேன். அவரும் அதை செவிமடுத்து தன்னிடம் பயில வருமாறு கூறினார். நானும் சம்மதித்து ஏழு வருடங்கள் அவருடன் நின்று முற்றுமுழுதாகப் பயின்றேன். அந்தப் பயிற்சியின் உருவாக்கத்தில் இன்று என்னுடன் ஐந்து பறை வாத்தியக் கலைஞர் களை வைத்து பறையடித்து வருகின்றேன். இவ்வாறு தான் எனது கலைப்பிரவேசம் நிகழ்ந்தது.

**❖ தாங்கள் வைத்திருக்கின்ற பறை 250 வருடங்கள் பழைமை வாய்ந்தது என அறிகின்றோம். அது பற்றி?**

எனது பறையைக் கண்ணகி காலத்துப் பறை என்று தான் சொல்லுவார்கள். எனது தந்தை வழிச் சந்தியில் நான்கு தலை முறைகள் இந்தப் பறையைப் பயன்படுத்தி இருக்கின்றார்கள். நான் வைத்திருக்கும் பறை 250 வருடங்களுக்கு மேற்பட்ட பழைமையான பறை. இதனுடைய சுற்றளவு 18 இஞ்சி, நீளம் 24இஞ்சி, 28கி.கி. எடையைக் கொண்டது. பறையின் ஒரு பக்கத்தில் அ.ப. என எழுதப்பட்டிருக்கிறது. கண்ணகி அம்மன் வற்றாப்பளையில் தோன்றிய பின்னர் முதன்முதலாக பூசை வைத்த ஐயர் அனந்த பரமசாமி ஐயர் அவர்களின் நினைவாக அப்பறையில் அ.ப. எனப் பொறித்தார்கள். போர்க்காலத்திலும் கண்ணகி அம்மன் ஆலயத்தில் வைத்து விட்டுத்தான் இடம் பெயர்ந்து போனேன். மீள்குடியேற்றம் நடந்த போது கண்ணகி அம்மன் ஆலய மேள மடத்தில் வந்து பார்த்த போது அதே திறனோடு எனது பறை இருந்தது. அவ்வளவு பழைமை வாய்ந்த பறையை வேறு வாகனத்தில் ஏற்றவோ, யாருக்கும் கைமாறாகக் கொடுப்பதோ இல்லை. இது எனது முன்னோர்களினால் கட்டிப்பாதுகாக்கப்பட்டபாரிய சொத்து. எந்த ஆலயத்திற்குப் பறை வாசிக்கச் சென்றாலும் மீண்டும் கண்ணகி அம்மன் ஆலயத்து மேளமடத்தில் கொண்டு வந்துதான் வைப்பேன்.

**❖ தற்போது நீங்கள் எந்தெந்த ஆலயங்களுக்குப் பறை வாத்தியத்தை வாசித்து வருகின்றீர்கள்?**

முல்லைத்தீவு மாவட்டத்தில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம், ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம், வட்டுவாகல் சப்த கன்னிமார் ஆலயம், நொச்சியடி ஐயனார் ஆலயம், புதுக்குடியிருப்பு துர்க்கை அம்மன் ஆலயம், மாத்தளன் பிள்ளையார் கோவில், பொக்கணை நாகதம்பிரான் கோவில் என கிட்டத்தட்ட முப்பது கோவில்களில் வாசிக்கின்றேன். தெய்வீகமான இந்தக் கலையை தெய்வீக உணர்வோடு வாசிக்க வேண்டும். புகைத்தல், மதுபானம், மாமிசம் என்பவற்றை முற்றுமுழுதாக நான் பயன்படுத்துவதில்லை.

**❖ மரபு வழி வாத்தியமான பறை வாத்தியத்தின் முக்கியத்துவம் பற்றிக் கூறுங்கள்?**

ஆதிமனித சமூகத்தினர் பறையடித்தல், மணியோசை எழுப்புதல், பறவைகள், விலங்குகளின் ஓசைகள், இலை குழைகள் அம்பு வீசுதல் ,தீயம்பு, தீ மூட்டுதல், புகை உண்டாக்குதல், ஊதுகுழல், கொடியேற்றல் எக்காளம் போன்ற குறியீட்டு முறையிலான கருத்துப் பரிமாற்றங்களுக்கும் பயன்படுத்தினார்கள். தொடர்பாடலுக்குக் குறிப்பிட்ட குழுவிற்கோ அல்லது நபருக்கோ தெரிவிக்கப் பயன்பட்ட ஓர் ஊடகமாகும். அரசன் சொல்லுகின்ற செய்தியை மக்களுக்குத் தெரிவிப்பது பறைமூலமாகும். அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரை அரச கருமத்தை தெரிவிக்கப் பறை பயன்படுகிறது. கிராமியப் பேச்சு வழக்கில் என்ன பறையுற எங்க இவ்வளவு நேரமும் பறைஞ் ட்டு வாறாய் என்று பேச்சு வழக்குகளும் முன்னைய காலத்தில் குடிமை முறைமை இருந்தது. ஆனால் இன்று குடிமை முறைமை அற்றுவிட்டது. இன்றுள்ள நிலைமையால் பறைவாத்தியத்தை வாசிக்கின்ற பல கலைஞர்கள் ஒதுங்கி விட்டார்கள். உணர்ந்தவர்களே ஒதுங்கி விட்டால் எப்படி புதிதாக இளம் சமூகம் பறைவாத்தியத்தோடு இணைந்து கொள்வார்கள். அந்தக் காலத்தில் ஒரு வீட்டில் நன்மையோ தீமையோ நடந்தால் எங்களுக்கு அறிவிப்பார்கள். எங்களுக்கு அறிவிக்காமல் காரியம் நடக்காது. எங்கள் தொழிலை மதித்தார்கள். பறை வாசித்தால் தரக்குறைவாகப் பார்க்கின்ற இந்தச் சமூகத்தில் மேலைநாட்டு வாத்தியத்தை வாசிக்கின்ற ஒருவரைப் பெரிதாகப் பார்க்கின்றது. பறையின் முக்கியத்துவம் பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை கற்பிக்க வேண்டும்.

**❖ பறை வாத்தியத்தில் பாவிக்கப்படும் மாத்திரைகள் பற்றிக் கூறுங்கள்?**

பிள்ளையார் மாத்திரை, அம்மன் மாத்திரை, பாரியள மாத்திரை, பூதவுடல் பாடையில் வைத்த தன் பின் மாரடிப்பு மாத்திரை, நடைபாவனை மாத்திரைபோன்ற மாத்திரைகளைக் குறிப்பிடலாம்.

உதாரணமாக:-பிள்ளையார் மாத்திரை

டாங் டாங் டாங் டாங்க
டாம் கக டாங்கக டாங் டாங்
டாங்க டாங்க
டாங் டகடக டாம் கட்டக
தடக டாங்க தக்தக தக்தக தத்தாங்க
டாங் டாங் டக டாங்கு டக
டச்சாக டங்கு டக தத்தாங்க தத்தாங்க
டாங்கு டக டட்டாக டக
டாட்டக டாங்கு டக டாங்கு டக டட்டாங்கு
டாங்கு டக தத்தக தக்தக
டாங்கு டக டட்டாங்க டக
டகுக்கு டக

சங்கீதம் கடலிலும் பெரியது என்கிறோம். எவ்வளவு பெரிய சங்கீதமானாலும் “ஸரிகமபதநி” என்னும் ஏழு எழுத்துக்களுள் மட்டுமே அடங்கியுள்ளது. ஒரு மொழியின் தொன்மை, அதன் பாரம்பரியம் என்பவற்றை அவை பற்றி விளக்கும் பழைமையான இலக்கியங்களைக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. தொல்காப்பியம், சிலப்பதிகாரம் ஆகிய இரு நூல்களிலிருந்தும் நாம் காணும் இசைக் குறிப்புகளைக் கொண்டு பண்டைய தமிழ் மிகுந்த நாகரிகம் உடையவர்களாகவும் இசைக் கலையால் சிறந்து விளங்கியுள்ளார்கள் என்பதும் தெளிவாகிறது.

**❖ நீங்கள் பறைவாத்தியக் கலைஞர் சங்கம் ஒன்றை ஆரம்பித்தீர்கள்?**

சலவைத் தொழிலாளி சங்கம், அழககச் சங்கம், ஆட்டோ தொழிலாளி சங்கம், வர்த்தகச் சங்கம், நடிகர் சங்கம் என்று பல சங்கங்கள் இருப்பது போல நானும் 2006ஆம் ஆண்டு “பறைவாத்தியக் கலைஞர் சங்கம்” ஒன்றை ஆரம்பித்து இருந்தேன். பல கலைஞர்கள் ஒத்துழைப்பு வழங்கினார்கள். பறை இசைப்பது புனிதமான தொழில். அதன் மெய்மை உணரும் பட்சத்தில் முதலில் அதை வாசிப்பவர்களின் நடத்தை மாற்றத்திற்கு உதவுவர். தொழில் வாய்ப்பை உருவாக்குவதும் இதன் நோக்கமாக இருந்தது. பறை வாத்தியக்கலைஞர்கள் புகையிலை, மதுபானம், மாமிசம் ஆகியவற்றைத் தவிர்த்து சுத்தமாக ஆலயங்களுக்கு வாசிக்கச் செல்ல வேண்டும். வேறு இடங்களுக்கு வாசிக்கச் செல்வதாக இருந்தால் சங்கத்திடம் அறிவிக்க வேண்டும். இந்த அறிவிப்பு ஏனைய பறை வாத்தியக் கலைஞர்களுக்கும் சுழற்சி முறையில் தொழில்வாய்ப்பினைப்பெற்றுக் கொடுக்க முடியும் என்ற நோக்கில் ஆலோசனையாகக் கூறினேன். சில கலைஞர்கள் இதற்கு உடன்பட வில்லை. ஆனாலும் போர் உக்கிரம் அடைவதற்கு முன்னர் ஓரளவிற்கு இயங்கியது. பின்னர் அதற்கான முயற்சிகள் எடுக்கவில்லை. தற்போது அதற்கான முயற்சிகளை எடுத்து வருகின்றேன். சக கலைஞர்கள் ஒத்துழைப்பு வழங்கினால் மிகச் சிறப்பாக எமக்கென்று ஒரு சங்கத்தை நடத்த முடியும். புதிதாக இணைகின்ற இளம் கலைஞர்களையும் சேர்த்துக் கொண்டு எமது பாரம்பரிய பறைவாத்தியத்தை அதன் அழிவிலிருந்து காப்பாற்ற முடியும்.


**❖ 25 வருடக்கலையுலகவாழ்வில் இறுதியாக நீங்கள் மனந்திறந்து கூறுவது?**

கடவுளின் அற்புதம் இயற்கை. இயற்கையின் அற்புதம் மனிதன். மனிதனின் அற்புதம் இசை. உயிரும் உடலும் ஒலிக்கடலில் மிதக்கின்றன. காற்று, தீ, நீர்,மண், பயிர், உயிர் எல்லாமே எழுந்து உலகாக விரிந்தன. தாளங்கள், வாய்ப்பாட்டு, வாய்த்தாளம், கைத்தாளம் என்று ஆரம்பித்தோம். பின்பு நூற்றுக்கணக்கான கருவிகள் எழுந்து இசைக்கு இன்பமளித்தன. பறைவாத்தியத்தில் கால அளவுகள் மிக முக்கியமானவை. தாளம் என்பது காலத்தை பகுத்து இயக்குவது தாளம் என்பது காலத்தையுடையுது. காலம் என்பது இசைக்கும் போது தாளத்திலும் அத்தாளத்திற்கு அமைக்கப்பெறும் வடிவங்களிலும் காணப்பெறும் அளவுகளையே குறிக்கும். இந்த அளவுகள் தான் இசையை ஒழுங்காக வழி நடத்துவதற்கான மூலகாரணம். எப்படி உலக இயக்கத்திற்குரிய காலம் விநாடி, நிமிடம், மணி, நாள், வாரம், மாதம், வருடம், யுகம் எனக் கணிக்கப் பெறுகின்றதோ அதே போன்று இசைக்குரிய இயக்கமும் காலம் என்பதில் ஆரம்பித்துக் கணிக்கப்படுகின்றது. இசைக்கருவிகள் பொதுவாகத் தோற்கருவிகள், நரம்புக்கருவிகள், துளைக் கருவிகள், கஞ்சக் கருவிகள் என நான்கு வகையாகப் பிரிக்கப்படும். கருவிகள் எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றனவோ அதைக்கொண்டு கச்சேரி அல்லது இசையரங்குக் கருவிகள், கோவில் கருவிகள், யுத்தக் கருவிகள், கிராமிய மக்களின் கருவிகள் என நான்கு வகைகளாகப் பிரிக்கப்படும். வீணை, குழல், மிருதங்கம், கோட்டு வாத்தியம் போன்றவை கச்சேரிக் கருவிகள். கொம்பு, தாரை, திருச்சின்னம், பூரி, உடல் போன்றவை கோவில் கருவிகள். பேரி, துந்துபி முதலியனவை யுத்தக் கருவிகள். நெடுங்குழல், முரசு, பறை, தாளம் ஆகியவை கிராமிய மக்களின் கருவிகளாகும். பறைவாத்தியத்தை அதன் அழிவிலிருந்து காக்க முன்வரவேண்டும். அதற்காக சார்ந்த பழைய கலைஞர்கள், ஆர்வமுள்ள இளைஞர் ஒன்று சேர வேண்டும். இந்தப் பறை வாத்திய இயங்கு நிலைக் கலைஞர்களையும் புதிய கலைஞர்களையும் வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், பிரதேச செயலகக் கலாசாரத் திணைக்களம் ஊக்குவிப்புக் கொடுத்து எமது பாரம்பரிய கலை வளர்க்க முன்வரவேண்டும்.

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**




# சிறுமி பாலியல் வன்முறை விவகாரம்
# பா.ஜ.க. அமைச்சர்கள் 9 பேர் இராஜினாமா



(ஜம்மு)

காஷ்மீரில் சிறுமி பாலியல் பலாத்காரம் செய்து கொல்லப்பட்ட விவகாரத்தில் பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த 9 அமைச்சர்கள் தங்கள் பதவியை இராஜினாமா செய்தனர்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் கத்துவா பகுதியில் 8 வயது சிறுமி கடந்த ஜனவரி மாதம் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொடூரமான முறையில் கொல்லப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பான தடயங்களை மறைத்தும், அழித்தும் திசை திருப்பியதாக மூன்று பொலிஸார் உட்பட எட்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து நடைபெற்ற பேரணியில் மெஹ்பூபா முப்தி தலைமையிலான கூட்டணி அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள பா.ஜ.க. வை சேர்ந்த இரு அமைச்சர்கள் கலந்துகொண்டனர்.

சிறுமியை வன்முறைக் குட்படுத்திக் கொன்ற குற்றவாளிகளுக்கு ஆதரவான பேரணியில் ஆளும் கூட்டணியில் இடம்பெற்றுள்ள அமைச்சர்கள் பங்கேற்ற சம்பவம் பா.ஜ.க.வினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில் அந்த பேரணியில் கலந்துகொண்ட பா.ஜ.க. அமைச்சர்களான சந்திரபிரகாஷ் கங்கா, லால் சிங் ஆகியோர் தங்களது பதவியை இராஜினாமா செய்தனர்.

இந்நிலையில், ஜம்மு - காஷ்மீர் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அனைத்து பா.ஜ.க. அமைச்சர்களையும் உடனடியாக இராஜினாமா செய்யுமாறு பா.ஜ.க. மேலிடம் உத்தரவிட்டது. கட்சி அறிவுறுத்தலின் பேரில், 9 அமைச்சர்கள் நேற்று முன்தினம் இராஜினாமா செய்தனர். அவர்கள் மாநில பாரதிய ஜனதா தலைவர் சத் சர்மாவிடம் தங்கள் பதவி விலகல் கடிதங்களை கொடுத்தனர். (7)

## நிருபரின் கன்னத்தைத் தட்டிய ஆளுநர் மன்னிப்புக் கோரினார்



(சென்னை)

பெண் நிருபரின் கன்னத்தை தட்டியது சர்ச்சையை ஏற்படுத்தியதையடுத்து ஆளுநர் பன்வாரிலால் மன்னிப்புக் கோரியுள்ளார்.

தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித், நேற்று ஆளுநர் மாளிகையில் செய்தியாளர்களைச் சந்தித்தார். செய்தியாளர் சந்திப்பு முடிந்த பிறகு, அவர் அருகே ஒரு வார பத்திரிகையின் மூத்த நிருபர் உட்பட சில பெண் நிருபர்கள் அவரிடம் சில கேள்விகளை கேட்க முயன்றனர். அப்போது, ஆளுநர் அந்த கேள்விகளுக்கு பதிலளிக்காமல், அங்கு நின்றிருந்த பெண் நிருபரின் கன்னத்தை சிரித்தபடி, கையால் தட்டி விட்டுச் சென்றார்.

இதை கண்டிக்கும் வகையில் அந்த பெண் நிருபர் சமூக வலைத்தளத்தில் கருத்து வெளியிட்டார். அதில், "ஆளுநர் தன்னை ... தாத் தாவாக நினைத்... என் கன்னத்தைத் தட்... இருக் கலாம். ஆனா... நான் ... இ... ஏற்கவில்லை. ... முகத்தை நான் ப... முறை கழுவினால் கூ... இந்த தாக்கத்தி... இருந்து என்னால் மீ... முடியவில்லை. அவ... செய்தது தவறு" என்... குறிப்பிட்டு இருந்தா...

இதுதொடர்பாக ஆ... நருக்கும் ஈமெயில்... மூலம் தனது வருத்... த்தை பதிவு செய்து... ளார்.

மு.க.ஸ்டாலின், க... மொழி உள்ளிட்ட சில... ஆளுநரின் செயலுக்... கண்டனம் தெரிவித்... னர். இதையடுத்து இ... விவ காரம் சர்ச்சை... ஏற்படு த்தியது.

இந் நிலையில் ... பெண் நிருபரின் க... னத்தில் தட்டியதற்கா...

## அமெ.மத்திய புலனாய்வு அமைப்பின் தலைவர் வடகொரிய ஜனாதிபதியுடன் இரகசிய சந்திப்பு



(பியாங் யாங்)

மத்திய புலனாய்வு அமைப்பின் தலைவர் மைக் பொம்பியோ பியாங் யாங்கிற்கு விஜயம் செய்து, வடகொரிய ஜனாதிபதி கிம் யாங் உன்-னுடன் இரகசிய சந்திப்பொன்றை மேற்கொண்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கும் கிம் யாங் உன்-இற்கும் இடையே நடைபெறவுள்ள நேரடி பேச்சுவார்த்தைக்கு தயாராகும் வகையிலேயே புலனாய்வு அமைப்பின் தலைவரின் இவ்விஜயம் அமைந்ததாக பெயர் குறிப்பிடப்படாத அதிகாரிகள் தெரிவித்ததாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஜப்பான் பிரதமரை சந்தித்து கலந்துரையாடியபோது கருத்து தெரிவித்த ட்ரம்ப், "நாம் வடகொரியாவுடன் நேரடி பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளோம். மிக உயர்ந்த மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன.

அவர்கள் எம்மை மதிக்கின்ற அதேவேளை, நாமும் அவர்களை மதிக்கின்றோம். எனவே என்ன நடைபெறப் போகின்றது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம், பேச்சுவார்த்தைக்கான உரிய தருணம் எழுந்துள்ளது என கருதுகின்றேன். அதேவேளை, பிரச்சினைகளை தீர்ப்பதற்கான சரியான நேரமும் உருவாகியுள்ளது" என மேலும் தெரிவித்தார். (7)

## காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காவிடின் மக்களின் போராட்டம் தொடரும்-தினகரன் அறிவிப்பு



(டில்லி)

தமிழக அரசு மௌன அரசாங்கமாக இருப்பதனால் தான் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக, ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் டி.டி.வி.தினகரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஊடகவியலாளர்களை சந்தித்த போதே தினகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர்,

"தற்போதைய தமிழக அரசு அண்மையில் சென்னை வந்த பிரதமர் மோடியிடம் காவிரி தொடர்பில் எந்த பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை.

தமிழ் நாட்டை வஞ்சிக்கும் பிரதமருக்கெதிராக கறுப்புக் கொடி போராட்டம் நடத்துவதில் எந்தத் தவறுமில்லை.

காவிரி மேலாண்மை வாரியம் விரைவாக அமைக்கப்பட வேண்டும். ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட வேண்டும். இல்லையேல் மக்களின் போராட்டம் தொடரும்" என தினகரன் மேலும் தெரிவித்துள்ளார். (7)

## சுவீடன்-இந்திய பிரதமர்கள் சுவீடனில் சந்தித்துப் பேச்சு

### இராணுவத்துறையில் இரு தரப்பு ஒத்துழைப்பு வழங்க முடிவு

(ஸ்டாக்ஹோம்)

சுவீடன் பிரதமருடன் பிரதமர் மோடி பேச்சு வார்த்தை நடத்தினார். அப்போது இராணுவ துறையில் இரு தரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்த முடிவு செய்யப்பட்டது.



பிரதமர் நரேந்திர மோடி தனது 5 நாள் வெளிநாட்டு சுற்றுப்பயணத்தின் முதல் கட்டமாக நேற்று முன்தினம் சுவீடன் தலைநகர் ஸ்டாக்ஹோம் சென்றடைந்தார்.

அவரை அந்த நாட்டின் பிரதமர் ஸ்டீபன் லோப் வென், விமான நிலையத்துக்கு சென்று நேரில் வரவேற்றார்.

இந்த நிலையில் பிரதமர் நரேந்திர மோடி, சுவீடன் நாட்டின் மன்னர் 16 ஆம் காரல் கஸ்டாபை நேற்று முன்தினம் சந்தித்து பேசினார். பல்வேறு துறைகளில் இரு தரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அவர்கள் விவாதித்தனர்.

அதைத் தொடர்ந்து பிரதமர் நரேந்திர மோடியும், சுவீடன் பிரதமர் ஸ்டீபன் லோப் வெனும் இரு தரப்பு பேச்சுவார்த்தை நடத்தினர். இரு தலைவர்களும் கூட்டாக நிருபர்களை சந்தித்தனர்.

அப்போது பிரதமர் மோடி கூறுகையில், "சுவீடன் பிரதமருடன் இரு தரப்பு பேச்சுவார்த்தை நடத்தினேன். இந்தப் பேச்சுவார்த்தையின் போது, இந்தியாவின் வளர்ச்சிப்பயணத்தில் சுவீடன் எப்படியெல்லாம் உதவ முடியும் என்பது குறித்து விவாதித்தோம்" என்று தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், "இரு தரப்பு புதிய கண்டுபிடிப்புகளில் கூட்டாளித்துவத்துக்கும், கூட்டு செயற்திட்டம் வகுக்கவும் ஒப்புக்கொண்டு உள்ளோம். இராணுவம், இணைய பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை பலப்படுத்துவது என்று முடிவு செய்து உள்ளோம்" என்றும் தெரிவித்தார்.

சுவீடன் பிரதமர் ஸ்டீபன் லோப்வென் நிருபர்களிடம் பேசும் போது இந்தியா உலகளாவிய சக்தியாக உருவெடுத்து இருப்பதாக கூறி பாராட்டுத் தெரிவித்தார். இரு நாடுகளும் மிகச் சரியான ஜோடி என்றும் அவர் வர்ணித்தார்.

மேலும், "பசுமை தொழில்நுட்பம், ஸ்மார்ட் நகரங்கள் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை தீவிரப்படுத்த நாங்கள் முடிவு செய்து உள்ளோம்" என தெரிவித்தார்.

இராணுவ உடன்பாடு ஏற்படுத்தவும் பணியாற்றுவது என ஒப்புக்கொண்டு உள்ளோம் என மேலும் அவர் தெரிவித்தார். (7)

## இரட்டை இலைச்சின்ன மேன்முறையீட்டு வழக்கு 20ம் திகதிக்கு ஒத்திவைப்பு

(டில்லி)


இரட்டை இலை சின்னம் தொடர்பாக டில்லி உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள மேன்முறையீட்டு வழக்கின் விசாரணை ஏப்ரல் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இரட்டை இலை சின்னம் மற்றும் அ.தி.மு.க. கட்சியை எடப்பாடி பழனிச்சாமி, ஓ.பன்னீர்செல்வம் அணிக்கு தேர்தல் ஆணையம் ஒதுக்கியது. இதனை எதிர்த்து டிடிவி. தினகரன் டில்லி உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளார்.



இவ்வழக்கை டில்லி உயர் நீதிமன்றத்தின் 2 நீதிபதிகள் கொண்ட அமர்வு ஏப்ரல் மாதத்திற்குள் முடிக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், டில்லி உயர்நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணை நேற்று முன்தினம் தொடங்கியது. கே.சி.பழனிச்சாமி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி, அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பதவிக்கு தேர்தல் நடத்த வேண்டும் என்றும் பொதுச் செயலாளர் விவகாரத்தை மீண்டும் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்ப வேண்டும் என்றும் வாதாடினார். வாதம் நிறைவடைந்ததையடுத்து விசாரணை 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (7)

# வெளிநாடு



## ஆப்கானில் வெடிகுண்டுத் தாக்குதலில் பொலிஸ் உயர் அதிகாரி உட்பட 5 பேர் பலி

(காந்தகார்)

ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகள் நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் பொலிஸ் உயர் அதிகாரி உட்பட 5 பேர் பலியாகினர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காந்தகாரில் பொலிஸ் உயர் அதிகாரியாக இருந்த வர்ஜனான் மமா. இவர் நேற்றுக் காலை தனது பாதுகாவலர்



களுடன் சென்று கொண்டிருந்தார்.

அப்போது அவரது வாகனத்தில் வைக்கப்பட்டு இருந்த வெடிகுண்டு வெடித்தது. இந்த தாக்குதலில் ஜனான் மமா, அவரது பாதுகாவலர்கள் 3 பேர் மற்றும் பொதுமக்களில் ஒருவர் என மொத்தம் ஐந்து பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகினர்.

இந்த தாக்குதலுக்கு தலிபான் பயங்கரவாத அமைப்பினர் பொறுப்பேற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

ஆளுநர் பன்வாரிலால் புரோகித் மன்னிப்புக் கேட்டுள்ளார்.

இதுதொடர்பாக ஆளுநர் வெளியிட்டுள்ள அறிக்கையில், '40 ஆண்டுகளாக நான் பத்திரிகைத் துறையில் இருந் துள்ளேன். செய்தியாளர் சந்திப்பில் நல்ல கேள்வி கேட்ட தற்காகப் பாராட்டி பெண் நிரு பரின் கன்னத்தைத் தட்டி னேன். என் பேர்த்தி போல் நினைத்து அவரது கன்னத் தில் தட்டினேன். அதன் மூலம் அவரது மனம் புண்பட்டிருந் தால் அதற்காக மன் னிப்பு கேட்டுக்கொள்கிறேன்' என குறிப்பிட்டுள்ளார். (7)

## ம.பியில் மினி லொறி கவிழ்ந்தது; 21 பேர் பரிதாபகரமாக உயிரிழப்பு

(போபால்)

மத்திய பிரதேச மாநிலம் சித்தி மாவட்டத்தில் உள்ள சோனே ஆற்றில் வாகனம் கவிழ்ந்த விபத்தில் திருமணத்துக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த 21 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மத்திய பிரதேச மாநிலம் சித்தி மாவட்டத்தில் உள்ள சோனே ஆற்றில் வாகனம் கவிழ்ந்த விபத்தில் திருமணத்துக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த 21 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மத்திய பிரதேச மாநிலம் சித்தி மாவட்டத்தில் ஒரு குழுவினர் திருமணத்துக்கு சென்று திரும்பிக் கொண்டிருந்தனர். அந்த குழுவினர் சென்ற பேருந்து சோனே ஆற்றுப்பகுதியில் சென்று கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக சாரதியின் கட்டுப பாட்டை இழந்து ஆற்றுக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதையடுத்து தீயணைப்பு துறையினர் மற்றும் பொலிஸார் அப்பகுதிக்கு விரைந்து மீட்புப்பணிகளில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் 21 பேர் பரிதாபமாக உயிரிழந்ததாகவும், 14 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (7)

## அமெ. - ஜப்பான் இடையே புதிய வரி அமைப்புத் திட்டம்



(வோஷிங்டன்)

ஜப்பானும், அமெரிக்காவும் இணைந்து புதிய வரி அமைப்பை உருவாக்க நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேயின் அமெரிக்காவிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தின்போதே இதற்கான நடவடிக்கை குறித்து ஆராயப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

அதன்படி முக்கிய அமெரிக்க நட்பு நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள உருக்கு மற்றும் அலுமினிய இறக்குமதிகளுக்கான புதிய அமெரிக்க வரி விதிப்பிற்கு விலக்களிப்பது தொடர்பாக அழுத்தம் கொடுக்க அபே எதிர்பார்த்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் இது குறித்து டோக்கியோ பல்கலைக் கழக பேராசிரியர் குறிப்பிடுகையில், "உருக்கு மற்றும் அலுமினியத்திற்கான வரியை தளர்த்த வேண்டும் என அமெரிக்காவை ஜப்பான் கோரினால், அதற்கு மாறாக அமெரிக்கா நீண்டகாலமாக விரும்பியிருந்த மோட்டார் வாகன மற்றும் விவசாய பொருட்களின் சந்தையை திறக்க அமெரிக்கா, ஜப்பானை கோரும் என்ற அச்சம் தோன்றுகின்றது. ஆனால் அதனை ஜப்பான் நிறைவேற்றுவது என்பது சாத்தியமற்றது.

எனவே பேச்சுவார்த்தையின் மூலம் புதிய வரி அமைப்பை உருவாக்க வாய்ப்புள்ளது. இருப்பினும் அதனை உடனடியாக செய்ய முடியாது. புதிய வரி அமைப்பை கட்டமைப்பது தொடர்பான முன்மொழிவுகளை மேற்கொண்டு விவாதங்களை நடத்துவதற்கு குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் வரை காலம் தேவைப்படலாம்" என மேலும் தெரிவித்தார். (7)

## நடுவானில் இயந்திரம் வெடித்து சிதறி காயமடைந்த பெண் பயணி உயிரிழப்பு

(நியூயோர்க்)

அமெரிக்காவில் விமானத்தின் என்ஜின் வெடித்து சிதறி ஜன்னல் உடைந்ததால் வெளியே தள்ளப்பட்டு பலத்த காயமடைந்த பெண் பயணி உயிரிழந்தார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இருந்து நேற்று முன்தினம் சவுத்வெஸ்ட் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் பயணிகள் விமானம் டலஸ் நோக்கி சென்றுகொண்டிருந்தது. விமானம் 32 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தபோது விமானத்தின் ஒரு என்ஜின் திடீரென வெடித்துச் சிதறியது. அதிவேகமாக பாய்ந்து வந்த அதன் பாகங்கள் விமானத்தின் ஒரு ஜன்னல் கண்ணாடியில் பட்டு கண்ணாடி உடைந்து நொறுங்கியது.

ஜன்னல் ஓர இருக்கை



யில் அமர்ந்திருந்த ஜெனிபர் ரியோர்டாம் என்ற பெண்ணின் தலை, அதிக அழுத்தம் காரணமாக ஜன்னலுக்கு வெளியே இழுக்கப்பட்டது. அதன்பின்னர் அவரது உடலும் கொஞ்சம் கொஞ்சமாக வெளியே தள்ளப்பட்டது. பறந்து வந்த உலோகத் துண்டு அவரை தாக்கியது. உடனே சக பயணிகள் கடுமையாக முயற்சி செய்து அந்த பெண்ணை உள்ளே இழுத்து, ஜன்னல் ஓட்டையை அடைத்தனர்.

உயிரைப் பணயம் வைத்து ஜெனிபர் ரியோர்டானை காப்பாற்றினர். எனினும் உலோகத் துண்டு தாக்கியதில் பலத்த காயமடைந்த அவர் சிறிது நேரத்தில் உயிரிழந்தார்.

மேலும் 7 பேருக்கு இலேசான காயங்கள் ஏற்பட்டன. இதேபோல் விமானத்தில் இருந்த மற்ற பயணிகளுக்கும் மூச்சுத்திணறல் ஏற்பட்டதால் ஒட்சிசன் மாஸ்க் பொருத்தப்பட்டது.

இதற்கிடையே, என்ஜின் செயலிழந்ததால் பிலடெல்பியா விமான நிலையத்தில் விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது. பயணிகள் அனைவரும் பத்திரமாக கீழே இறக்கப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்த விபத்தில் உயிரிழந்த ஜெனிபர், வெல்ஸ் பார்கோ வங்கியின் மக்கள் தொடர்பு துறையின் துணை தலைவராக பணியாற்றியது குறிப்பிடத்தக்கது. (7)

## அமெ.முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்சின் மனைவி பார்பரா புஷ் மரணம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் எச்.டபிள்யூ. புஷ் சின் மனைவியும் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்சின் தாயாருமான பார்பரா புஷ் தனது 92 ஆவது வயதில் மரணமடைந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் 41 ஆவது ஜனாதிபதியாக பதவி வகித்தவர் ஜோர்ஜ் ஹெர்பர்ட் வாக்கர் புஷ். இவரது மனைவி பார்பரா புஷ் (வயது-92). இவர்களது மகன் ஜோர்ஜ் வாக்கர் புஷ் (வயது-71), 43 ஆவது ஜனாதிபதியாக பதவி வகித்தவர்.

பார்பரா புஷ் உடல் நலம் பாதிப்பு அடைந்துள்ளதாக ஹூஸ்டனில் உள்ள முன்னாள் ஜனாதிபதி அலுவலகம் அறிக்கை வெளியிட்டது. மேலும் அந்த அறிக்கையில், உடல்நலம் பாதிப்பு அடைந்துள்ள பார்பரா புஷ் விரைவில் நலம்பெற வேண்டும் என பலர் பிரார்த்தனை செய்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், பார்பரா புஷ் தனது 92 ஆவது வயதில் நேற்றையதினம் மரணமடைந்ததாக முன்னாள் ஜனாதிபதி குடும்பத்தின் செய்தித் தொடர்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (7)

## வெனிசுவெலா நகர் மருத்துவ மையத்தில் மருந்து பற்றாக்குறை; நோயாளிகள் போராட்டம்

(கரகஸ்)

வெனிசுவேலாவில் தொடர்ந்து வரும் மருந்து பற்றாக் குறைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், ஊதிய உயர்வை வலியுறுத்தியும் சுகாதார பணியாளர்களும் நோயாளிகளும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வெனிசுவெலா தலைநகர் கரகஸில் உள்ள மருத்துவ மையமொன்றின் முன்னால் குழந்தைகள் உள்ளிட்ட பலர் ஒன்றுகூடி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

சுகாதாரத்துறையில் பணியாற்றுபவர்களைவிட கோப்பி விற்பனையாளர்கள் அதிக வருமானம் ஈட்டுவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த சுகாதாரப் பணியாளர் ஒருவர் குறிப்பிட்டார்.




மேலும் தெரிவித்த சுகாதாரப் பணியாளர்கள், "சுகாதாரப் பணியாளர்களுக்கான இரு வாரங்களுக்கான கொடுப்பனவு 190 முதல் 220 ஆயிரம் பொலிவர்களாகும். இது ஏறத்தாழ ஒரு அமெரிக்க டொலருக்கே நிகரானதாகும்" எனத் தெரிவித்தனர்.

இதேவேளை, இறக்குமதியைப் பாதித்துள்ள கடுமையான நாணய கட்டுப்பாடுகள் காரணமாக மருந்து பற்றாக்குறை மோசமாகி வருவதுடன், அடிப்படை உணவின் தேவையும் அதிகரித்து வருகின்றது.

அத்துடன், எந்த நேரத்தில் மதிப்பீடு செய்யப்படினும் சுமார் 85 சதவீத மருந்து பற்றாக்குறை காணப்படுவதாக உள்ளூர் மருத்துவ சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (7)

# சம்பந்தன் ஏமாற்றப்பட்டார்

# தமிழ் பேசும் மக்களுக்கு அரசியல் தீர்வு

# மகிந்தவால் மட்டுமே சாத்தியமாகும்

## கெஹலிய எம்.பி. கூறுகிறார்



(கொழும்பு)

தமிழ் பேசும் மக்களுக்கான ஒரு அரசியல் தீர்வை வழங்கக்கூடிய ஒரே தலைவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அத்துடன், மிகவும் கௌரவமான அரசியல்வாதியான எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் அரசியல் தீர்வு வாக்குறுதி தொடர்பில் ஏமாற்றப்பட்டுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

தேசிய அரசாங்கத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நாடு தற்போது பாரிய பின்னடைவை சந்தித்து வருகின்றது. முதலீடுகள் இல்லை. ரூபாவின் பெறுமதி பாரிய வீழ்ச்சியடைந்து வருகின்றது.

நாட்டின் அனைத்து துறைகளும் செயலிழந்து போயுள்ளன. அரச பல்கலைக்கழகங்கள் அனைத்தும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இந்நிலையில், நல்லாட்சி அரசாங்கத்தினால் புதிய அரசியல் யாப்பினை கொண்டு வரமுடியாத நிலை காணப்படுகின்றது. புதிய அரசியலமைப்பு அல்ல, அரசியலமைப்பில் ஒரு திருத்தத்தைக் கூட செய்ய முடியாத நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது.

மிகவும் கௌரவமான அரசியல்வாதியான எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் அரசியல் தீர்வு வாக்குறுதி தொடர்பில் ஏமாற்றப்பட்டுள்ளார். சம்பந்தன் போன்ற ஒரு கௌரவமான தலைவருக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்களுக்கான ஒரு அரசியல் தீர்வை வழங்கக்கூடிய ஒரே தலைவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே, அவர் வழங்கும் தீர்வையே தென்னிலங்கை மக்கள் சந்தேகமின்றி ஏற்றுக்கொள்வார்கள்" என கெஹலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்தார். (இ-7)

## சு.கவின் நிலைப்பாட்டில் திடீர் மாற்றங்கள்

# அரசு மீதான நம்பிக்கை சீர்குலைந்து விட்டது!



## முன்னாள் அமைச்சர் சுதர்ஷனி கவலை

(கொழும்பு)

பிரதமருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஏகமனதாக தீர்மானித்திருந்தது.

இந்நிலையில், கட்சியின் தீர்மானத்திற்கு அமையவே 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் செயற்பட்டதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளேயை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


"நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது கட்சியின் தீர்மானத்திற்கு மாறாக செயற்பட்டவர்களுக்கு தற்போது மேலதிக அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியை சந்தித்த போது பிரதமர் பதவி விலக வேண்டும் என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது.

கடந்த 4 ஆம் திகதி அமைச்சர் மகிந்த அமரவீரவின் இல்லத்தில், கட்சியின் உப தவிசாளர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் கூடிய நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பிரதமர் பதவி விலக வேண்டும் என்ற தீர்மானம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், நல்லாட்சி அரசாங்கம் மீதான நம்பிக்கை மீளக் கட்டியெழுப்ப முடியாத அளவிற்கு சீர்குலைந்துள்ளதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளதாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இலங்கைக் கடலில் அதிசய ஆமைக்குட்டி!



(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பில் அபூர்வமான உயிரினம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒட்டிப் பிறந்த கடலாமை குட்டிகள் இரண்டு மாத்தறை மிரிஸ்ஸ கடற்கரையில் கடல் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு கடலாமை குட்டிகளும் நேற்று முன்தினம் கண்டுபிடிக்க முடிந்துள்ளது.

இதுவரை இவ்வாறு ஒட்டிப் பிறந்த ஆமைகள் கண்டுபிடிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கண்டுபிடிக்கப்பட்ட கடலாமைகள் மிரிஸ்ஸ கடல் பாதுகாப்பு திணைக்களத்தினால் முன்னெடுக்கும் கடலாமைகள் பாதுகாப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இரண்டு கடலாமைகளும் சிறப்பான உடல் நிலையில் உள்ளதாக மிரிஸ்ஸ வனவிலங்கு அதிகாரிகளால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை தெற்கு கடல் எல்லையில் அதிகளவில் கடலாமைகள் வாழ்வதாக கண்டறியப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### அறிமுகங்களின் பலன்!

ஆமை தன் தலையை உள்ளுக்குள் இழுத்துக் கொள்வது போல் அடிக்கடி உள்ளுக்குள் தங்களை இழுத்துக்கொள்கிற மனிதர்கள் உண்டு.

இது அறியாமையின் காரணமாகவும் இருக்கலாம்; திமிர் கூடக் காரணமாக இருக்கலாம்.

"வாங்க! அவங்களையெல்லாம் அறிமுகப்படுத்தி வைக்கிறேன்'' என்று எவராவது சொன்னால், ஐயையோ வேண்டாம் என்று கையை உருவிக்கொண்டு பின்வாங்குகிறவர்கள் முதல் ரகத்தினர்.

இவங்களைத் தெரிஞ்சுக்கிட்டா என்னங்க ஆகப் போகுது? அவுங்க கெடக்காங்க விடுங்க என்பவர்கள் இரண்டாவது ரகத்தினர். இப்படி விலகி விலகிப் போய்க் குறிப்பிட்ட வட்டத்துக்குள்ளேயே கிடப்பேன், கூண்டுக்குள் அடைந்து கொண்டுதான் இருப்பேன் என்பவர்கள் வளரவே முடியாது–ஏன் முழு வாழ்க்கை வாழ முடியாது. நான் ஏன் போய்ப் பார்க்கனும்? அவுங்களை நான் ஏன் தெரிஞ்சுக்கனும் என்கிற கேள்விகள் நம் தவறான வாழ்க்கைப்பார்வைகள். எங்கே போனாலும் இப்போது அறிமுகம் வேண்டியிருக்கிறது.

தெரிந்த கண்டக்டர் என்றால் வீட்டு வாசலில்கூட இறக்கிவிடுகிறார். அவரையே வேண்டாதவராக்கிக் கொண்டால் உரிய ஸ்டாப்பில் கூட இவர் அவர் நிறுத்துவாரா என்பது சந்தேகம்தான்.

அறிமுகமான சர்வர் பறந்து பறந்து நம்மைக் கவனிக்கிறார். இந்தப் போட்டி மிகுந்த உலகில் அறிமுகம் இல்லாமல் எந்த வேலையும் சரிவர நடப்பதில்லை.

ஓர் அரசு அலுவலகத்திற்குள் நுழைகிறோம். நமக்கு ஓர் காரியம் ஆக வேண்டும். ஆனால் நடைமுறைகளும் வழிமுறைகளும் நமக்குத் தெரியாது. ஏகப்பட்ட கூட்டம். நம்மை யாரும் ஏன் என்று கூடக் கேட்கவில்லை. இப்படிப்பட்ட நிலையில்,

"வாங்க வாங்க வாங்க! எங்கே எங்க ஆபீஸ் பக்கம்?''! என்று ஒருவர் கேட்டால் எப்படி இருக்கும் என்று சற்று எண்ணிப் பாருங்கள். அந்த வாக்கியம் தேனாய் நம் காதில் பாயாதா?

ஒரு வீடு கட்ட வேண்டும். அனுமதி பெற அரசு அலுவலகத்தில் ஆளைத் தெரியாது. கொத்தனாரைத் தெரியாது. இன்ஜினியரைத் தெரியாது.

அமெரிக்கா போக வேண்டும். இதற்கு வழிகாட்ட எவரையும் தெரியாது. அமெரிக்காவில் எவரையும் தெரியாது.

எப்படி ஆகும் வேலை!

எல்லோரையும் எல்லோரும் தெரிந்து கொண்டா பிறக்கிறோம்? ஆனால் வாய்ப்பு ஏற்பட்ட போதெல்லாம் "நான் மாட்டேன் போ" என்று சிறுபிள்ளைத்தனமாய்ப் பிடிவாதம் பிடித்து விலகி விலகி வாழ்ந்து கண்ட பலன்தான் என்ன?

மற்றவர்களுடன் கலந்து பழக வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் அதைச் சரிவரப் பயன்படுத்திக்கொண்டு வாழ்வதை விட்டுவிட்டு எஸ்கிமோக்கள் மாதிரிப் பனிப் பிரதேசத்தில் சிறு வட்ட வீட்டிற்குள் அடைந்து கிடப்பேன், என்னை யாரும் மாற்ற முடியாது, நான் இப்படித்தான் இருப்பேன் என்றால் அப்படியே இருக்க வேண்டியது தான்!

**லேனா தமிழ்வாணன்**



ஊரெழு மேற்கு நாவலம்பதி ஸ்ரீஞான வைரவர் ஆலய அலங்கார உற்சவம் அண்மையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# யாழ்.மாநகரத்தை தூய்மைப்படுத்துவதற்கு இராணுவத்தையும் பணிகளில் ஈடுபடுத்தலாம்

## ஆனோல்டிற்கு ஆளுநர் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரத்தை தூய்மையாக்குவதற்குத் தேவையான உதவிகள் அனைத்தையும் தான் வழங்க தயாராக இருப்பதாகவும் வேண்டுமென்றால் இராணுவத்தையும் தூய்மைப்படுத்தும் பணிகளில் ஈடுபடுத்தலாம் என வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே யாழ்.மாநகர சபை முதல்வர் இம்மானுவேல் ஆனோல்டிடம் தெரிவித்துள்ளார்.

சுண்டுக்குழியில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஆளுநரை யாழ். மாநகரமுதல்வர் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இதன் போதே அவர மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

யாழ்.மாநகரம் தூய்மையாக இருக்க வேண்டுமென்றால் கழிவகற்றல் தான் .எமக்கு சவாலாக இருக்கின்றது. அதற்குரிய பொருத்தமான பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும்.அதற்குரிய சகல உதவிகளையும் வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

யாழ்.நகரில் நான் இருப்பதால் எனக்கும் நகரை சுத்தமாக வைத்திருக்க வேண்டிய பொறுப்பு உண்டு. நகரத்தை சுத்தமாக்குவதற்கு இராணுவத்தினரையும் பயன்படுத்த முடியும். இராணுவத்தினர் மக்கள் சேவையில் தான் இருக்கின்றார்கள். அவர்களை பயன்படுத்த முடியும்.

அடுத்து வாய்க்கால் சீரமைப்பும் யாழ்.மாநகரத்துக்கு அவசியமாகவுள்ளது. இதனை திட்டமிட்டு செய்தால் நிலத்தடிநீரை பாதுகாக்க முடியும் என ஆளுநர்



இதன்போது வலியுறுத்தியிருந்தார்.

இதன்பின்னர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருடனான சந்திப்பின் போது, யாழ். நகரை தூய்மையாக வைத்திருத்தல்,சிறந்த கழிவகற்றல் முகாமைத்துவத்துவம் போன்றன பற்றி கலந்துரையாடப்பட்டதோடு, உலக வங்கியால் யாழ்.மாநகரத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டிருந்தன.

இதேவேளை யாழ்.மாநகரத்தை தூய்மைப்படுத்தும் பணியில் இராணுவத்தை ஈடுபடுத்துவது இராணுவமயமாக்கலுக்கு நாம் உடந்தையாக இருப்பது போன்று அமைந்து விடும். ஆகையால் யாழ். மாநகர முதல்வர் துப்புரவு பணிகளில் இராணுவத்தை ஈடுபடுத்துவதை தவிர்க்க வேண்டுமென யாழ்.மாநகர சபையின் உறுப்பினர்கள் சிலர் வலம்புரியிடம் தெரிவித்தனர். (இ-4-60)

# மாகாண சபைத் தேர்தல் பழைய முறையில் இல்லை!

## பைஸர் உடும்புப்பிடி

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலை, பழைய முறையிலோ அல்லது அதிக விமர்சனத்துக்குள்ளான விருப்பு வாக்கு முறையிலோ அரசாங்கம் நடத்தாது எனத் தெரிவித்துள்ள, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றாங்கள் அமைச்சர் பைஸர் முஸ்தபா, எனினும், 1988ஆம் ஆண்டின் மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

மாகாண சபைத்தேர்தலை, பழைய முறையில் நடத்துவதற்கு, அமைச்சர் சம்மதித்துள்ளார் என வெளியாகிய ஊடக அறிக்கைகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அவர், தானோ அல்லது ஜனாதிபதியோ, அவ்வாறான முன்மொழிவுக்குச் சம்மதிக்கவில்லை என்று தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது, பழைய முறையிலான தேர்தல் திட்டத்தை ஒழிப்பதாக, அப்போதைய பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவால் வழங்கப்பட்ட உறுதிமொழியை ஞாபகப்படுத்திய அமைச்சர் முஸ்தபா, அதனால், பழைய முறைக்குச் செல்வதற்குத் தயாராக இல்லை என்று குறிப்பிட்டார்.

"சப்ரகமுவ, வடமத்திய, கிழக்கு மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவது தொடர்பாக ஆராய்வதற்காக, புத்தாண்டுக்கு முன்னர், கட்சித் தலைவர்களைச் சந்தித்தேன். பழைய முறையில் தேர்தல்களை நடத்துமாறு, அங்கு ஆலோசனைகள் வழங்கப்பட்



டன. ஆனால், கருத்தொருமைப்பாடு ஏதும் ஏற்படவில்லை"

சிறுபான்மையினக் கட்சிகள் சிலவும் மக்கள் விடுதலை முன்னணியும், அச்சந்திப்பில் கலந்துகொண்டிருக்கவில்லை எனத் தெரிவித்த அமைச்சர், எனினும் அச்சந்திப்பில் கலந்து கொண்டோர், 1988ஆம் ஆண்டின் மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளச் சம்மதித்தனர் என்று குறிப்பிட்டார்.

அதன்படி, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட, வட்டார முறையும் விகிதார முறையும் கலந்த முறையிலேயே, மாகாண சபைத் தேர்தல்கள் இடம்பெறுமென, அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

இதேவேளை, ஆளுநர்களின் ஆட்சியில் காணப்படும் இந்த 3 சபைகளுக்குமான தேர்தல்களை நடத்துவதற்கு, நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எல்லை மீளாய்வு தொடர்பான அறிக்கை, விவாதத்துக்கு உட்படுத்தப்பட வேண்டுமெனவும், அது தொடர்பான விவாதத்துக்கான திகதியைக் குறிப்பதில், இன்னமும் கருத்தொற்றுமை ஏற்படவில்லை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)



பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் குருதி சுத்திகரிப்பு நிலையம் நேற்று புதன்கிழமை காலை 9மணியளவில் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன் கலந்து கொண்டு நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். வடமாகாண சபை உறுப்பினர்கள் ச.சுகிர்தன், வே.சிவயோகன் மற்றும் க.நர்மலிங்கம், வைத்திய அதிகாரிகள், வைத்திய சாலை உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-மகாலிங்கம்)



வடமராட்சி வியாபாரிமூலை விக்னேஸ்வரா படிப்பகம் கலைமணி சனசமூகநிலையத்தில் நடைபெற்ற கலைமணியின் கல்வி கௌரவிப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் கலந்து கொண்டார். (படங்கள்:-மகாலிங்கம்)

# எனது பாதுகாப்பு கேள்விக்குறி பதுளை அதிபர் பவானி அச்சம்

(பதுளை)

"என்னை முழந்தாளிட நிர்ப்பந்தித்தமை தொடர்பிலான விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை. இந்நிலையில், ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவுக்கு கல்வியமைச்சர் பதவியை மீண்டும் வழங்கியமையானது எனது பாதுகாப்பைக் கேள்வி குறியாக்கியுள்ளது" என பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஆர்.பவானி தெரிவித்தார்.

ஊவா மாகாண முதலமைச்சருக்கு, ஊவா மாகாண கல்வியமைச்சர் பதவி, மீண்டும் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஊவா மாகாண கல்வியமைச்சர் பதவியை, ஊவா மாகாண முதலமைச்சருக்கே மீண்டும் வழங்கியமை, நீதி கிடைக்குமென இத்தனை நாட்கள் காத்திருந்த எனக்கும், எனக்காகக் குரல் கொடுத்திருந்த அனைத்துத் தரப்பினருக்கும் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது" என்றார்.



"எனக்கு கடந்த காலங்களில், கடிதங்கள் ஊடாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதுடன், உயிர் அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டிருந்தன. இந்நிலையில், மீண்டும் கல்வியமைச்சு பதவியை வழங்கியமையால் எனது பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளது" என்றார்.

இந்த விவகாரம் தொடர்பில், ஜனாதிபதி மற்றும் பிரதமர் கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட அவர், "எனக்கு ஏற்பட்டிருந்த அநீதி வேறு எந்தப் பெண்ணுக்கும் ஏற்படக் கூடாது என்பதை உறுதி செய்ய வேண்டும்" என்றும் கோரிக்கை விடுத்தார். (இ-7)

# முதலமைச்சரிடம் கல்வி அமைச்சு
## திலகர் எம்.பி.கண்டனம்



விஞ்ஞான அடிப்படையில் ஏதோ மாற்றத்தை ஏற்படுத்தப் போவதாக தெரிவித்திருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இப்போது ஊவா மாகாண சபைக்கு மீண்டும் கல்வி அமைச்சராக சாமர சம்பத் தசநாயக்கவை, என்ன விஞ்ஞானத்தின் அடிப்படையில் தெரிவு செய்துள்ளது? எனக் கேள்வி எழுப்பியுள்ள திலகராஜ் எம்.பி. சாமர சம்பத்தினால் பாதிப்புற்ற பெண் அதிபருக்கு அநீதி ஏற்படக்கூடாது என்பதை சுயாதீன மனித உரிமைகள் ஆணைக்குழு உறுதி செய்ய வேண்டுமெனவும்தெரிவித்தார்.

ஊவா மாகாண முதலமைச்சர், சாமர சம்பத் தசநாயக்கவுக்கு மீண்டும் கல்வி அமைச்சுப்பதவிவழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் அமெரிக்காவில் இருந்து கருத்துத் தெரிவிக்கும் போதே நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில்அவர்மேலும் தெரிவிக்கையில்,

"உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் பின்னர் நடைபெற்ற, நடைபெறவுள்ள பல மாற்றங்களில் இந்த அமைச்சரவை மாற்றங்கள் முக்கியமானவை. இது நாடாளுமன்றத்தைக் கடந்து மாகாண சபைகளிலும் நிகழ்ந்து வருகிறது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்குப் பின்னர் அமைச்சரவையில் மாற்றத்தை எதிர்பார்த்தபோது ஐக்கிய தேசிய கட்சி ஒரு சில மாற்றங்களையேனும் செய்தது.

ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியோ விஞ்ஞான அடிப்படையில் ஏதோ செய்யப்போவதாக அறிவித்தது. அது என்ன விஞ்ஞானம்? என தெரிந்து கொள்வதற்கு முன்பதாக அரசியல் விஞ்ஞானத்தின்படி அவர்கள் இருந்த அமைச்சுப் பதவிகளையும் இழந்தார்கள்.

இப்போது ஊவா மாகாண சபைக்கு மீண்டும் கல்வி அமைச்சராக சாமர சம்பத் என்ன விஞ்ஞானத்தின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பது புரியவில்லை. அவரால் பாதிக்கப்பட்ட பெண் அதிபருக்கு அநீதி ஏற்படக்கூடாது. அதனை சுயாதீன மனித உரிமைகள் ஆணைக்குழு உறுதி செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### முதலமைச்சர் முழந்தாளிட வைத்த அதிபருக்கு
# நீதி கிடைக்கும் வரையில் போராட்டம் தொடரும்
## வடிவேல் சுரேஷ் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

பெண் என்றும்கூட பார்க்காது பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஆர்.பவானியை முழந்தாளிட நிர்ப்பந்தித்த ஊவா மாகாண முதல்வர் சாமர சம்பத் தசநாயக்கவுக்கு மீண்டும் கல்வி அமைச்சு வழங்கப்பட்டிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என தெரிவித்த வடிவேல் சுரேஷ், வெளிநாடு சென்றிருக்கும் ஜனாதிபதி எதிர்வரும் 22 ஆம் திகதி நாடு திரும்பியதும் அவரை நேரில் சந்தித்து இது தொடர்பில் எடுத்துரைப்பேன் எனவும் தெரிவித்தார்.

சாமர சம்பத் தசநாயக்கவுக்கு மீண்டும் ஊவா மாகாண கல்வி அமைச்சுப் பதவி வழங்கப்பட்டிருப்பது தொடர்பில் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசிய கட்சியின் பசறை தொகுதி அமைப்பாளருமான வடிவேல் சுரேஷ் கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் கூறினார்.

"ஊவா மாகாண ஆளுநரிடமே கடந்த மூன்று மாதங்களாக ஊவா மாகாண கல்வி அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது. அவர் தென் மாகாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதால், கல்வி அமைச்சு தற்காலிகமாக ஊவா மாகாண முதலமைச்சர், சாமர சம்பத் தசநாயக்கவுக்கு வழங்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்திருக்கின்றது.

அதிபரை முழந்தாளிட வைத்த சம்பவம் நடைபெற்று அது தொடர்பிலான விசாரணைகள் நீதிமன்றில் நடைபெற்று வருகின்ற நிலையில், கடந்த மூன்று மாதங்களுக்குள் அதிபர் ஆர்.பவானிக்கு பல்வேறு வழிகளில் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கின்றது.

இவற்றை எல்லாம் கருத்தில் கொள்ளாது மீண்டும் கல்வி அமைச்சு பதவி வழங்கப்பட்டிருப்பதானது மிகவும் வன்மையாகக் கண்டிக்கதக்கது.

நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் இவ்வாறு கல்வி அமைச்சை அவர் பொறுப்பேற்றுள்ளது ஏற்றுக்கொள்ளவே முடியாது. இது தொடர்பில் ஜனாதிபதி நாடு திரும்பியதும் நேரடியாகச் சந்தித்து எடுத்துரைப்பேன். அதிபர் ஆர்.பவானிக்கு நீதி கிடைக்கும் வரையில் எனது போராட்டம் தொடரும்" எனத் தெரிவித்தார். (இ-7)

# கயிலாச யாத்திரை
## ஓர் அனுபவப் பகிர்வு 25
### பரமசாமி பஞ்சாட்சரம்

சில் என்று குளிர் காற்று வீசிக்கொண்டு இருந்தது. மற்றைய மலைகள் கறுப்பாகத் தோற்றமளிக்கக் கயிலைமலை மட்டும் வெண்மையாகக் காட்சி தந்தது.

ஏரி நீரின் வெப்பநிலை கிட்டத்தட்ட ஐந்து பாகை செல்சியஸ் இருக்கும் (5°C) என்று சொன்னார்கள். நாங்களும் சிவனை நினைத்தபடி தண்ணீரில் மெதுவாகச் சிறிது தூரம் நடந்து சென்றபின் தலை வரை மூழ்கி நீராடும் பாக்கியம் இறையருளால் கைகூடியது. அன்று பிற்பகல் 2.30 மணியளவில் மானசரோவர் ஏரியின் வட பகுதியில் நீராடிய பின் நீரைவிட்டுக் கரைக்கு வந்த போது பெரும் ஆரவாரத்துடன் எல்லோரும் கும்பிடுவதைப் பார்த்தோம். கயிலை நாதனின் தோற்றம் அண்மையில் இருப்பது போலத் தெளிவாகக் காணப்பட்டது.

நாங்கள் நீராடச் சென்ற போது இப்படி



இருக்கவில்லை எனப் பேசிக்கொண்டோம். வானமும் மிகவும் தெளிவாக இருந்தது. அத்துடன் மானசரோவர் ஏரியும் நீல வண்ணமாகத் தெரிந்தது.

நீராடியபின் வெளியே வரும்போது கயிலை மலை வெண்மையாகக் காட்சியளித்தது. இது தான் எங்கள் முதற் தரிசனமாகும். அங்கிருந்து தெரியும் கயிலை நாதனின் கம்பீரத் தோற்றத்தைக் கைகூப்பி வணங்கினோம். எமது கூப்பிய கரத்தைப் பிரிக்க முடியாமல் அதையே பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல இருந்தது. இந்தப் பிரகாசமான பிம்பம் தட்சணாமூர்த்தியாக அமர்ந்திருக்கும் கயிலை நாதனின் அம்சமாகும். அழகிய வெண்பனி போர்த்த முகம் போலவும் ஜடாமுடி பரந்து இருப்பது போலவும் காட்சி தருவது அற்புதம். சிலர் சிவமும் சக்தியும் சேர்ந்து அர்த்தநாரீஸ்வரர் வடிவம் என்று சொல்லி வணங்கினார்கள். இந்த அலங்காரம் மாறாமல் மறையாமல் காலம் காலமாக இருப்பது எப்படி என்பது தான் தெய்வீக இரகசியமாகும். சிலர் பக்தியுடன் தேவாரம் பாடினார்கள். நாங்களும் திருநாவுக்கரசு நாயனார் அருளிய தேவாரங்களைப் பாடி வணங்கினோம். பின்னர் மானசரோவர் ஏரி நீரைத் தலையில் தெளித்த பின் சிறிதளவு நீரைப் பருகிக் கொண்டு பேருந்திற்குச் சென்றோம்.

எல்லோரும் தங்கள் பிரார்த்தனைகளை நிறைவு செய்த பின்பு மானசரோவர் ஏரியை வலம்வரும் பாதையில் தொடர்ந்து சென்றோம். இங்கு தங்கநிற அன்னங்களையும் அபூர்வமான பறவைகளையும் பார்க்கலாம் என அறிந்தோம்.

இந்த ஏரியிலே தான் பாலையும் நீரையும் பிரித்துப் பாலை மட்டும் உண்ணும் அன்னப் பறவைகள் இருப்பதாகச் சீன வழிகாட்டுபவர் கூறினார். முக்கியமான இடங்களிலே பேருந்தை நிறுத்தியதோடு வழிதோறும் காணப்படும் சிறந்த காட்சிகளைப் பற்றியும் கூறினார். ஏரிக்கரையில் சிலர் அபூர்வ கற்களை எடுப்பதைப் பார்த்து நாமும் இரு கற்களை எடுத்தோம். அவற்றிலே ஒன்று சுயம்பு விநாயகர் போலவும் மற்றையது சிவனைப் போலவும் தோற்றங் கொண்டிருந்ததை அவதானித்து அவற்றை பாதுகாப்பாக வைத்துக் கொண்டோம்.

கிரிவலம் வரும் பாதையில் பல புத்த கோயில்களும் தங்கு மடங்களும் புதிதாக காணப்பட்டுள்ளன எனச் சொன்னார்கள். "சியு கோம்ப மொனாஸ்றி" (Chiu Gompa Monaster) என்னும் ஒரு பழைய கோவிலையும் காணக் கூடியதாக இருந்தது.

(தொடரும்)

# 25 ஆம் திகதி வரை விஷேட பஸ் சேவை தொடரும்-இ.போ.ச

(கொழும்பு)

தமிழ்- சிங்கள புத்தாண்டை முன்னிட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட விஷேட பஸ் போக்குவரத்து சேவை இம் மாதம் 25ஆம் திகதி வரை யில் முன்னெடுக்கப்படும் என்று இலங்கை போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

மாகாண மற்றும் பிரதேச மட்டங்களில் மக்களுக்கு வெற்றி கரமாக போக்குவரத்து வசதிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டி ருப்பதாக அந்த சபையின் போக்கு வரத்து பிரதிப் பொது முகாமை யாளர் சந்திரசிறி தெரிவித்தார்.

இதன்மூலம் அதிக வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கும் இலங்கை போக்குவரத்துச் சபை க்கு முடிந்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

# வடக்கில் தமிழ் இந்துக் கலை பண்பாட்டு பல்கலைக்கழகம் திறக்கப்பட வேண்டும்

## இந்தியாவிடம் கோரிக்கை முன்வைப்பு

தமிழர்களின் தாயகமாகிய வடக்கு மாகாணத்தில் இந்துக் கலைப் பண்பாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றைத் திறப்பதற்கு இந்தியா தங்கள் பங்களிப்பை செய்ய வேண்டும் என யாழ். இந்தியத் துணைத் தூதுவரிடம் யாழ். வணிகர் கழகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ். வணிகர் கழகத்தினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

மூன்றுதசாப்தங்களுக்குமேலாக நடைபெற்ற போரில் வடக்கு, கிழக்கு மாகாணங்களே அதிகமாக பாதிக்கப்பட்டன. அதிலும் குறிப்பாக வட மாகாணம் மிக பாரியளவில் உயிர்ச் சேதம், பொருள் சேதம் மட்டுமன்றி பொருளாதார ரீதியில் முற்று முழுதாக பாதிக்கப்பட்ட பகுதியாகும். இவ்வாறு போரால் பாதிக்கப்பட்ட வட பகுதியை மீளக் கட்டியெழுப்ப இந்தியா பல வகையில் உதவி செய்து வருகின்றது. அந்த வகையில் நாங்கள் பொருளாதார ரீதியில் மீள எம்மைக் கட்டியெழுப்புவதற்கு இந்தியாவின் உதவி மிக முக்கியமானது.

வட மாகாணத்தைச் சேர்ந்த அதிகளவிலான வர்த்தகர்கள் இந்தியாவில் இருந்து பல பொருட்களை கொழும்புத் துறைமுகமூடாக இறக்குமதி செய்து வருகின்றார்கள். அந்த வகையில் வட மாகாணத்தில் உள்ள காங்கேசன்துறை துறைமுகத்தை வர்த்தகநடவடிக்கைக்காகவும்ஏனைய தேவைகளையும் வட மாகாணத்திற்கு பொருட்களை இறக்கு மதி செய்யக் கூடியதாக இருக்கும். அத்தோடு இத்துறைமுகமூடாக ஏற்றுமதி இறக்குமதி இடம் பெறுமாயின் வடக்கு மாகாணம் பொருளாதார ரீதியாக முன்னேற முடியும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான விமானப் போக்குவரத்தை ஏற்படுத்த பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக அபிவிருத்தி செய்யுமிடத்து வடக்கு- கிழக்கு மக்கள் சுலபமாக குறுகிய நேரத்தில் குறைந்த செலவில் இந்தியாவிற்கு சென்று வர முடியும். தற்போது எமது மக்கள் இந்தியாவிற்கான சுற்றுலா, யாத்திரை, உயர்கல்வி, மருத்துவத் தேவை போன்ற பல வகைத் தேவைகளுக்காகவும் இந்தியா சென்று வருகின்றார்கள். இந்த விமான நிலையம் இயங்கும் பட்சத்தில் இலகுவாக இந்தியா செல்ல முடியும். இந்திய மக்களும் இங்கே சுற்றுலாவுக்காக வர முடியும். ஆகையால் இது சம்பந்தமாக இந்திய மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு தாங்கள் இத்திட்டங்களை நிறைவேற்ற உதவ வேண்டும். தமிழர்களின் தாயகமாகிய வட மாகாணத்தில் தமிழ் இந்துக் கலை பண்பாட்டுப் பல்கலைக் கழகம் ஒன்றைத் திறப் பதற்கு இந்தியா தங்கள் பங்களிப்பை செய்ய வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். இலங்கைத் தமிழ் மக்கள் கடந்த 70 வருடங் களாக தங்களுக்குரிய நிரந்தர அர சியல் தீர்விற்காக எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். இதற்கு எமது அயல் நாடான இந்தியா மனிதாபிமான ரீதியில் தங்கள் பங்களிப்பை செய்ய வேண்டும் என இலங்கைத் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். புதிதாக பதவி ஏற்றுள்ள தங்களை வரவேற்பதுடன் எமது ஆக்கபூர்வமான கோரிக்கைகளை நிறைவேற்ற தாங்கள் முயற்சி எடுப்பீர்கள் என நாம் நம்புகின்றோம் என யாழ். வணிகர் கழகத்தினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்ப ட்டுள்ளது.

கடந்த 16 ஆம் திகதி திங்கட் கிழமை பிற்பகல் 3.30 மணி முதல் 5.30 மணிவரை யாழ். இந் திய துணைத் தூதரகத்தில் புதிதாக பதவியேற்ற உதவித் தூதுவர் பாலச்சந்திரன்- யாழ். வணிகர் கழக உறுப்பினர்களுக்குமிடையில் சந்திப்பு இடம் பெற்றது. இச் சந்திப்பில் வணிகர் கழக தலைவர் இ. ஜனக்குமார், உப தலைவரும் வட மாகாண சபை உறுப்பினருமான இ. ஜெயசேகரன், வணிகர் கழகச் செயலாளர் ச. சிவகுமாரன் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களான எஸ். கஜன், எஸ். சிவலோகேசன் மற்றும் எஸ். சுதர்சன் ஆகியோர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# மஹா கும்பாபிஷேகம் சிறப்பு மலர் வெளியீடும் இறுவெட்டு வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

கொற்றாவத்தை செட்டிதறை சித்தி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீடும் கொற்றை பி. கிருஸ்ணானந்த னின் வரிகளிலான சித்தி விநா யகன் புகழ் பாடுவோம் இறுவெட்டு வெளியீடும் ஆலய புதிய உருவாக் கத்திற்கு பங்களித்தோருக்குமான கௌரவிப்பு நிகழ்வும் நாளை வெள் ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் சித்தி விநாயகர் ஆலய முன்றலில் செட்டி தறை சித்தி விநாயகர் திருமண மண்டப தலைவர் அ. அருளானந்த சோதி தலைமையில் இடம் பெறும்.

இதில் ரூபவாஹினியின் தமிழ் சேவை முன்னாள் பணிப்பாளர் சீ. வன்னியகுலம், மலரை வெளியிட பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார உத்தி யோகத்தர் பண்டிதர் பொன். சுகந்தன் இறுவெட்டினை வெளியிடுவார். முதற் பிரதியினை சாவகச்சேரி விமலா இரும்பகத் தொழிலதிபர் த. ஜெயந்தன் பெற்றுக் கொள்வார். (இ)

# நாடக நடிகை நீரில் மூழ்கி பலி!



(கொழும்பு

கினிகத்தேனை- பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கினிகத்தேனையடி பேரிய பிரதேசத்தில் களனி கங்கையில் நீராடச் சென்ற யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணி யள வில் இடம்பெற்றுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர். இவ் வாறு உயிரிழந்தவர் 27 வயதுடையஒரு பிள்ளையின் தாயான கண்டி புப்புரஸ்ஸ பகுதியை சேர்ந்த துஷானி த சில்வா தொலைக் காட்சி ஒன்றின் நாடக நடிகை என தெரியவந்துள்ளது. (இ-7)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1388

Search for people, places and things

Nagendram Home

### சக்தி

தங்கள் இருப்பிடம் தொலைத்து அகதியாய் அலையும் பறவைகளுக்குத்தான் தெரியும் மரத்தின் அருமை



### தாமு

நம் ரியாக்ஷன்



வெயிலில் சுற்றிவிட்டு ஏசி ரூமில் நுழையும் போது

### பாலன்

42 இஞ்ச் டிவி பார்த்து சாப்பிட்டா திட்டமாட்டேங்கிறாங்க



ஆன 5 இஞ்ச் போனைப் பார்த்து சாப்பிட்டா மட்டும் ஏன் திட்டுறாங்க?


### சாமினி

குடம் நசுங்கி இருக்கிறது, தலை கலைந்து இருக்கிறது, ஆடை அழுக்காக இருக்கிறது...




ஆனால் உலக அழகிக்கு நிகரான நளினமான நடை

### தாமிரா



அன்பும் ஒருநாள் தோற்றுப் போகிறது அதன் மதிப்பு தெரியாத வரிடம் காட்டும் போது...

### பாஸ்கரன்



வாழ்க்கையில் கற்றுக் கொள்வதில் குழந்தை போல் இரு... அதற்கு அவமானம் தெரியாது, விழுந்தவுடன் அழுது முடித்து திரும்பவும் எழுந்து நடக்கும்...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சில மாதங்களில் 20 வீதமான பாதாளத் தலைவர்கள் கைது

## அமைச்சர் மத்தும பண்டார தகவல்



(கொழும்பு)
இலங்கையை சேர்ந்த சில பாதாள உலகத் தலைவர்கள் வெளிநாடுகளில் இருந்து செயற்படுகின்றனர் என சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களில் 20 வீதமான பாதாள உலக புள்ளிகளை கைது செய்துள்ளோம் எனத் தெரிவித்துள்ள அமைச்சர் ஏனையவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை கடந்த சில மாதங்களில் பாதாள உலகத்தவர்களின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர் இலங்கையை சேர்ந்த சில பாதாள உலக தலைவர்கள் வெளிநாடுகளில் இருந்து செயற்படுகின்றனர் எனவும் தெரிவித்தார்.

இந்த குற்றவாளிகளை கைதுசெய்வது தொடர்பில் இவர்கள் மறைந்துள்ள நாடுகளின் உதவி அரசாங்கத்திற்கு தேவையாகவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# நம்பிக்கை நிதிய உறுப்பினர்கள் பத்து பேருக்கு கௌரவம்

(யாழ்ப்பாணம்)
நல்லூர் பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை சங்கத்தின் 2018ஆம் ஆண்டுக்கான பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் க.ம. இராஜேந்திரன் தலைமையில் நல்லூர் பிரதேச செயலக மகாநாட்டுமண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத் தலைவர் பொ.கமலநாதன், திருநெல்வேலி வர்த்தக வங்கிப் பிரதிநிதி, "டயலொக்" நிறுவனப் பிரதிநிதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

வங்கியாளர் ஓய்வூதியர்களுக்கு கடன் வழங்கும் நடவடிக்கை பற்றியும் "டயலொக்" நிறுவனத்தின் பிரதிநிதி ஓய்வூதியர்களுக்கு சலுகை அடிப்படையில் கைத்தொலைபேசி வழங்குவது தொடர்பாகவும் விளக்கமளித்தனர்.

இக் கூட்டத்தில் ஓய்வூதியர் சங்கத்தின் மூத்த உறுப்பினர்கள் பத்துப் பேர் கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை 2018ஆம் ஆண்டுக்கான நிர்வாகிகளாக தலைவர்-செ.சந்திரசேகரம், உப தலைவர்-கு.அம்பிகைபாகன், செயலாளர்-கா.தில்லையம்பலம், உப செயலாளர்-க.கணேசவேல், பொருளாளர்-சு.சுந்தரேசன், நிர்வாக உறுப்பினர்கள் க.நவரத்தினராசா, த.கந்தையா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ

# கல்வீச்சுக்கு இலக்கானவர் பலி!

## இருவர் படுகாயம்

(கொழும்பு)
வட்டவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வட்டவளை தோட்டத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இரு குழுக்களுக்கிடையிலான மோதலில் ஒருவர் பலியானதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

பலியான நபர் கல்வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் எனவும், அதே பகுதியைச் சேர்ந்த 70 வயதுடைய கே. பொன்னுசாமி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும்வட்டவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரு குழுக்களுக்கு இடையில் மோதல் இடம்பெற்ற நிலையில், அதனை விலக்கச் சென்ற குறித்த நபர் மோதலில் ஈடுபட்டவர்களின் கல்வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

படுகாயமடைந்த நிலையில் அவர் வட்டவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தாக்குதலில் ஈடுபட்ட குழுவில் மேலும் இருவர் காயமுற்ற நிலையில் வட்டவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மோதல் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணையை ஆரம்பித்துள்ளதாக வட்டவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை


## கல்வியமைச்சர் காரியவசம் தெரிவிப்பு

(கொழும்பு)
பிரத்தியேக வகுப்புகளுக்கு வருமாறு மாணவர்களைப் பலவந்தமாக அழைக்கும் ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

விசேடமாக 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை நோக்காகக் கொண்டு நடத்தப்படும் பிரத்தியேக வகுப்புகளுக்கு மாணவர்களை வரவைப்பதற்காக பல ஆசிரியர்கள் அழுத்தங்களை விடுப்பது தொடர்பில் முறைபாடு கிடைத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

எனவே கல்வி அமைச்சில் அமைக்கப்பட்டுள்ள 1988 என்ற அலைபேசி இலக்கம் ஊடாகத் தொடர்பு கொண்டு இதுதொடர்பான முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாமெனவும், கிடைக்கபெறும் முறைப்பாடுகளுக்கு அமைய உடனடி ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு கல்வி அமைச்சர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார். (இ-7)

# அமெரிக்காவின் பாரிய மிதக்கும் வைத்தியசாலை இலங்கை வருகிறது



(கொழும்பு)
அமெரிக்காவின் பசுபிக் ஒத்துழைப்பு ஒத்திகைத் திட்டத்தின் ஒரு கட்டமாக, அமெரிக்க கடற்படையின் பாரிய மிதக்கும் வைத்தியசாலை இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

சான்டியேகோவை தளமாக கொண்ட USNS Mercy என்ற வைத்தியசாலைக் கப்பல் தற்போது மலேசியாவில் தரித்துள்ளது. அங்கிருந்து இந்தக் கப்பல் இலங்கை வரவுள்ளது.

2018ஆம் ஆண்டு அமெரிக்கா மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த நிவாரண தயார்படுத்தல்களை மேற்கொள்வதற்காக ஆசிய-பசுபிக் ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் இரண்டு கப்பல்களை ஈடுபடுத்தியுள்ளது.

இதற்கமைய பெப்ரவரி தொடக்கம் ஜூன் வரையான காலப்பகுதியில், USNS Mercy என்ற வைத்தியசாலைக் கப்பல் இந்தோனேசியா, மலேசியா, இலங்கை, வியட்நாம் ஆகிய நாடுகளுக்கும், USNS Fall River என்ற கப்பல், மலேசியா, தாய்லாந்து, மைக்ரோனேசியாவில் உள்ள யாப் ஆகிய இடங்களுக்கும் பயணங்களை மேற்கொள்ளவுள்ளன.

தற்போது, USNS Mercy என்ற அமெரிக்க கடற்படையின் பாரிய மிதக்கும் வைத்தியசாலை அடுத்து இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# "தத்துவ போதம்" விரிவுரை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தாவால் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 5 மணி முதல் 6 மணி வரை, அனைவருக்குமான வாசகர் வட்டம் வகுப்பில், ஆதி சங்கரர் அருளிய, "தத்துவபோதம்" விரிவுரை ஆரம்பமாகவுள்ளது. (இ-7)

# சித்திராப்பூரணை விரதம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சித்திராப் பூரணை விரதத்தை முன்னிட்டு எதிர்வரும் 29.04. 2018ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு விஷேட பூஜை நடைபெறும். (இ

# வெலிக்கடை சிறைக்குள்

## கைக்கடிகார வடிவில் தயாரிக்கப்பட்ட கையடக்க தொலைபேசி கண்டுபிடிப்பு

(கொழும்பு)
வெலிக்கடை சிறைச்சாலைக்குள் மாறுபட்ட வகையில் தயாரிக்கப்பட்ட தொலைபேசி ஒன்றை சிறைச்சாலை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். கைதி ஒருவருக்காக கொண்டு வந்த உணவு பொதியில்கையடக்கதொலைபேசிஒளித்துகொண்டுசெல்லப்பட்டுள்ளது.


கைக்கடிகார வடிவில் வடிவமைக்கப்பட்ட கையடக்க தொலைபேசியை சிறைச்சாலை அதிகாரி கண்டுபிடித்துள்ளார்.

இவ்வாறான தொலைபேசி ஒன்றை கண்டுபிடித்த முதல் சந்தர்ப்பம் இதுவென சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். வெளிநாடு ஒன்றில் இந்த தொலைபேசி தயாரிக்கப்பட்டிருக்கலாம் என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.


எனினும் இலங்கை ரூபாயில் கிட்டத்தட்ட 50 ஆயிரம் ரூபாயை விடவும் அதிகம் என நம்பப்படுகின்றது. (இ-7)

# ஸ்ரீலங்கன் விமானசேவை நிறுவனத்தின் கடந்த வருட வருமானம் 12,690 கோடி

(கொழும்பு)
கடந்த 2017-2018 ஆம் நிதியாண்டில் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் வருமானம் 12690 கோடி ரூபா (126.9பில்லியன் ரூபா) எனவும் இந்த தொகை நிறுவனத்துக்கு வரலாற்றுச் சாதனை எனவும் குறித்த விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது. (இ-7)



வடக்கு மாகாண ஆளுநராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ள றெஜினோல்ட் கூரே நல்லூர் கந்தன் ஆலயத்திற்கு சென்று பூசை வழிபாடுகளில் ஈடுபட்டார். அதன் பின்னர் யாழ்.பச்சைப்பள்ளிவாசலுக்கும் யாழ்.ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள நாகவிகாரைக்கும் சென்று ஆசிபெற்றுக் கொண்டார். பின்னர் யாழ்.ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்து கலந்துரையாடி ஆசிகளைப் பெற்றுக்கொண்டார். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)



யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் செருக்கன் கிணற்றடி ஞானவைரவர் ஆலயத்தில் நேற்று முன்தினம் சித்திரை பரணியினை முன்னிட்டு விசேட பூசை இடம்பெற்றது.

# 2019இல் பொதுநலவாய உள்ளூராட்சி உறுப்பினர்களின் மாநாடு இலங்கையில்

(கொழும்பு)


பொதுநலவாய மாநாட்டுக்கு உரித்தான நாடுகளின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் அடுத்த மாநாட்டை 2019ஆம் ஆண்டு இலங்கையில் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது. இது தொடர்பாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பொதுநலவாய மாநாட்டுக்கு உரித்தான நாடுகளின் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களின் அடுத்த வருடத்துக்கான மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பொதுநலவாய மாநாட்டின் உள்ளூராட்சி மன்றங்களின் ஒன்றியத்தின் செயற்குழு கூட்டத்திலே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய மாநாட்டின் உள்ளூராட்சி மன்றங்களின் ஒன்றியத்தின் செயற்குழுக்கூட்டம் கடந்த 13ஆம் திகதி இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபாவிடம், அடுத்த வருட மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு ஒன்றியத்தின் இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டு மோல்ட்டா நாட்டில் இடம்பெற்ற பொதுநலவாய மாநாட்டுக்கு உரித்தான நாடுகளின் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களின் மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சர் பைஸர் முஸ்தபா, 2019 ஆம் ஆண்டில் இடம்பெறக்கூடிய மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு அனுமதி வழங்குமாறு கோரியிருந்தார்.

அமைச்சரின் வேண்டுகோளை பரிசீலனை செய்த குறித்த ஒன்றியம் அதற்கான அனுமதியை தற்போது வழங்கியுள்ளது. பொதுநலவாய மாநாட்டு நாடுகளின் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களின் மாநாடு ஆசிய நாடொன்றில் இடம்பெற இருப்பது இதுவே முதல் தடவையாகும். உலகில் 10 வலயங்களை மத்திய நிலையங்களாகக்கொண்டு இந்த மாநாடு இடம்பெறவுள்ளது. (இ-7)

# இலங்கையில் தமிழ் மக்கள் நல்ல நிலையில் உள்ளனர்

## இராதாகிருஷ்ணன் இந்தியாவில் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் தமிழ் மக்கள் தற்போது நல்ல நிலையில் இருப்பதாக கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர், ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்து தெரிவித்த போது இவ்வாறு தெரிவித்தார்.

"இலங்கையில் தமிழர்களை பொறுத்தவரையில் தற்போது நல்ல முறையில் இருக்கின்றனர். கடந்த 30 ஆண்டுகளாக போரின் காரணமாக பல்வேறு சிரமங்களுக்கு ஆளானார்கள்.

ஆனால், தற்போது அவர்களின் கஷ்டங்கள் பெருமளவு குறைக்கப்பட்டு வருகிறது. தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகள் அவர்களுக்கே அரசு திரும்ப கையளித்து வருகிறது. அரசியல் ரீதியாகவும் அவர்களின் உரிமையை மீட்டெடுக்கும் முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

எதிர்க்கட்சி தலைவராக ஒரு தமிழரே இருக்கின்றார். வடக்கு மாகாணத்தில் தமிழர் முதலமைச்சராக உள்ளார். எனவே முனனெப்போதும் இல்லாத அளவிற்கு தமிழர்கள் நல்ல முறையில் உள்ளனர்.

இலங்கைக்கு சீனா, இந்தியா ஆகிய இரண்டு நாடுகளும் நிதியுதவி அளித்து வருகின்றன. இதில் சீனா கடனாகவே அளிக்கிறது. ஆனால் இந்தியா நன்கொடையாக பண உதவிகளை அளித்து வருகிறது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தமிழ்த் தலைமைகளுக்கு அமைச்சர் சம்பிக்க ஆதரவு

## அமைச்சர் மனோ தகவல்



(கொழும்பு)

சிறுபான்மையினத் தலைமைகளுக்கு ஆதரவாக அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தார் என, அமைச்சர் மனோ கணேசன் வெளிப்படுத்தியுள்ளார்.

தனது டுவிட்டர் கணக்கில், நேற்று முன்தினம் கருத்துத்தெரிவிக்கும் போதே, இவ்விடயத்தை அமைச்சர் தெரிவித்தார்.

"மிதவாத சிறுபான்மையினத் தலைவர்களுக்கான தனித்த ஆதரவுக் குரல், அமைச்சர் சம்பிக்க ரணவக்கவிடமிருந்தே, அமைச்சரவையில் கிடைத்தது. அவர், ஒழுங்காகச் செவிமடுக்கப்படவில்லை. ஆனால் அவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும், "ஜனநாயக தமிழ்த் தலைமைகளைப் பலப்படுத்தத் தவறாதீர்கள். அவர்களைப் பலவீனப்படுத்தாதீர்கள் என்று கூறினார்" என, அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சர் சம்பிக்கவின் இக்கருத்து டுவிட்டரில், பெரும்பான்மையினத் தலைவர்கள் மீது அமைச்சர் மனோ கணேசன் வெளியிட்ட கருத்தோடும் ஒத்துப் போயிருந்தது.

"பச்சை+நீல கட்சி சிங்களத் தலைவர்கள், ஜனநாயக தமிழ்த் தலைவர்களையும் கட்சிகளையும், பலப்படுத்த விரும்புவதில்லை. தம் இருப்புக்காக, தமிழ்த் தீவிரவாதத்தை வளர்த்துவிடவே, இவர்கள் விரும்புகிறார்கள்" என, அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஊட்டச்சத்துக் குறைபாடு; இலங்கைக்கு இரண்டாமிடம்

(கொழும்பு)

சனத்தொகைக்கு நிகராக, ஊட்டச்சத்து குறைபாட்டில் தென்னாசியாவில், இலங்கை இரண்டாம் இடத்தில் உள்ளதாக, ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு தாபனம் தெரிவித்துள்ளது.

உலக உணவு தாபனத்தின், உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பிலான 2017 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 2014 -2016 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.


இதற்கமைய, இலங்கையில் உள்ள சனத்தொகைக்கமைய, 22.1 சதவீதமானோர் ஊட்டச்சத்து குறைபாடுடையவர்களாக காணப்படுவதாக, குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# அதிபர் பவானிக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம்

ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவுக்கு மீண்டும் கல்விஅமைச்சர் பதவி வழங்கப்பட்டமைக்கு எதிராக எதிர்வரும் 23ஆம் திகதிக்குப் பின்னர் மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மகிந்த ஜெயசிங்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலய அதிபர் ஆர். பவானி முழந்தாளிட வைத்த சம்பவம் தொடர்பில் ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவுக்கு பதவி பறிக்கப்பட்டு மீண்டும் வழங்கப்பட்டமை தொடர்பிலேயே அந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வான்கள் விபத்து; ஒருவர் பலி, 16 பேர் காயம்



(கொழும்பு)

வெலிமடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெப்பட்டிபொல பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் வான்கள் இரண்டு நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் 17 பேர் படுகாயங்களுக்குள்ளாகி வெலிமடை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், இதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிமடை - நுவரெலியா பிரதான வீதியில் கதிர்காமம் பகுதியிலிருந்து கொழும்புபகுதியை நோக்கிச் சென்ற வான் ஒன்றும் நுவரெலியாவிலிருந்து கதிர்காமம் பகுதியை நோக்கி சென்றுகொண்டிருந்த மற்றுமொரு வானும் கெப்பட்டிபொல சந்தியில் இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் இரு வான்களிலும் பயணித்த 17 பேர் படுகாயங்களுக்குள்ளாகி வெலிமடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அதில் 10 பேர் மேலதிக சிகிச்சைக்காக பதுளை மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதிக வேகம் மற்றும் கட்டுப்பாடு இல்லாத தன் காரணமாகவே இவ்விபத்து இடம் பெற்றுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)



# சிறுவர் அரங்கம்

## பொறாமை வேண்டாமே!



பண்ணையார்வாசு ரொம்ப நல்லவர். அவரிடம் கடன் கேட்டு வந்தவர்களுக்குக் கூட வட்டியில்லாமல் கொடுத்து உதவி வந்தார். அவருடைய நிலங்கள் நன்றாக விளைந்தன.

செல்வமும் முறையாகப் பெருகி வளர்ந்து கொண்டிருந்தது. ஆனால், அவரது தம்பியும், தம்பி மனைவியும் அருகில் வசித்து வந்தாலும் பண்ணை யாரின் ஆதரவில்தான் வாழ்ந்து வந்தனர். பண்ணை யார் பிறருக்குக் கொடுத்து உதவுகின்ற செயலை வெறுத்தார். அதனால் சில தில்லு முல்லு வேலைகளையும் செய்து வந்தார்.

பண்ணையாரின் மகன் சுந்தரம் எட்டாம் வகுப்புப் படித்து வந்தான்: ரொம்ப நன்றாகப் படிப்பான்.

அன்று மாலை!

சுந்தரம் பள்ளியிலிருந்து வந்து தன் தந்தையின் முன் தன் அரையாண்டு மதிப் பெண்பட்டியலை நீட்டினான்:

அதில், எல்லாப் பாடங்களிலும் எண்பதிற்கும் மேலாக மதிப்பெண்கள் வாங்கியிருந்தான். அத்தோடு கணக்கில் நூறு மதிப்பெண்கள் பெற்றிருந்தான். வகுப்பில் முதல் மாணவன் என்றும் குறிப்பிடப்பட்டுப் பாராட்டப்பட்டிருந்தான். அதைப் பார்த்த பண்ணையார் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

"அப்பா! நான் நிறைய மதிப்பெண்கள் வாங்கியதற்குக் கண்ணன் சார் தான் காரணம். ஆனால், அவரது மகள் உடல்நிலை சரியில்லாமல் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்.

என் வகுப்பாசிரியர் கண்ணன் மிகவும் பணத்துக்கு கஷ்டப்படுகிறார் என்றான்" உடனே ஆசிரியருக்கு தேவையான பண உதவிகள் செய்ய சென்றார் பண்ணையார்.

இதனால் ஆத்திரம் கொண்ட தம்பி, "அண்ணா நான் ஊர் சுற்றிப் பார்க்கச் செல்லணும். எனக்கு பத்தாயிரம் ரூபாய் பணம் வேணும்!" என்றான்.

உடனே கொடுக்கும்படி கணக்குப் பிள்ளைக்கு கட்டளையிட்டார் பண்ணையார்.

ஒருவாரம் கழித்து ஊர் சுற்றித் திரும்பிய தம்பியும், தம்பி மனைவியும் குய்யோ முறையோ என வாயில் அடித்துக் கொண்டு ஓடி வந்தனர். அவர்களது வீட்டில் திருடன் புகுந்து எல்லா பொருட்களையும் திருடிச் சென்றிருந்தான்.

"தம்பி! பிறரை பார்த்து பொறாமைப் படக்கூடாது. பொறாமை எலும்புறுக்கி நோய் போன்றது. நீ பொறாமைப் பட்டு ஊருக்கு போனாய் என்ன நடந்தது பார்த்தியா? இனிமேல் இப்படிச் செய்யாதே!" என்றார். மனம் திருந்தினர் தம்பியும், தம்பி மனைவியும்.

## 19.04.2018 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1587- ஸ்பானிய போர்க் கப்பலை சேர் பிரான்சிஸ் டிரேக் மூழ்கடித்தார்.
- 1775-அமெரிக்கப் புரட்சிப் போர் ஆரம்பித்தது.
- 1810-வெனிசுவேலாவில் இராணுவ ஆட்சி நிறுவப்பட்டது.
- 1892-ஐக்கிய அமெரிக்காவில் முதன் முதலில் தானுந்து ஒன்றை சார்ல்ஸ் டூரியா என்பவர் மசாசுசெட்சில் ஸ்ப்றிங்ஃபீல்ட் என்ற இடத்தில் செலுத்தினார்.
- 1902-குவாத்தமாலாவில் 7.5 ரிக்டர் நிலநடுக்கம் தாக்கியதில் 2,000 பேர் இறந்தனர்.
- 1904-கனடாவின் டொரோண்டோ நகரத்தின் பெரும் பகுதிகள் தீயினால் அழிந்தது.
- 1928-ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியின் 125 ஆவதும் கடைசியுமான தொகுதி வெளிவந்தது.
- 1936-பாலஸ்தீனர்களின் ஆங்கிலேயர்களுக்கெதிரான முதலாவது கிளர்ச்சி தொடங்கப்பட்டது.
- 1954- உருது, மற்றும் வங்காள மொழி ஆகியன பாகிஸ்தானின் தேசிய மொழிகளாக அறிவிக்கப்பட்டன.
- 1971- முதலாவது விண்வெளி ஆய்வு கூடமான சோவியத் ஒன்றியத்தின் சல்யூட் 1 விண்ணுக்கு அனுப்பப்பட்டது.
- 1975-இந்தியாவின் முதலாவது செய்மதி ஆரியபட்டா விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1988-அன்னை பூபதி மட்டக்களப்பில் ஆக்கிரமிப்பாளருக்கெதிராக உண்ணா நோன்பிருந்து இறந்தார்.
- 1995-அமெரிக்காவின் ஓக்லகாமா நகரத்தில் நடுவண் அரசக் கட்டிடம் ஒன்று தீவிரவாதிகளின் குண்டுத்தாக்குதலுக்கு இலக்கானதில் 168 பேர் கொல்லப்பட்டனர்.
- 1995-சந்திரிகா-விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை முறிவடைந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்தனர். அதனை அடுத்து திருகோணமலைத் துறைமுகத்தில் இரண்டு பீரங்கிக் கப்பல்கள் புலிகளால் மூழ்கடிக்கப்பட்டன.
- 1999- ஜேர்மனியின் நாடாளுமன்றம் பெர்லின் நகருக்கு மாற்றப்பட்டது.
- 2006-நேபாளத்தில் மன்னராட்சியை எதிர்த்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### பிறப்புகள்

- 1929-குமாரி ருக்மணி, தென்னிந்தியத் திரைப்பட நடிகை (இ. 2007)
- 1937-ஜோசப் எஸ்திராடா, பிலிப்பீன்சின் 13 ஆவது அரசுத்தலைவர்
- 1945-மார் கீவர்கீஸ் ஆலஞ்சேரி, கேரளக் கத்தோலிக்கப் பேராயர்
- 1948-லெக்சிய் சுதாரோவின் சுகி, உருசிய சோவியத் வானியலாளர்
- 1957-முகேஷ் அம்பானி, இந்தியத் தொழிலதிபர்
- 1987-மரியா சரப்போவா, உருசிய டென்னிச வீராங்கனை

### இறப்புகள்

- 1881-பெஞ்சமின் டிஸ்ரேலி, ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் (பி. 1804)
- 1882-சார்லஸ் டார்வின், ஆங்கிலேய உயிரியலாளர் (பி. 1809)
- 1988-அன்னை பூபதி, ஈழத்தில் உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்தவர் (பி. 1932)
- 2013-செ. குப்புசாமி, தமிழக அரசியல்வாதி, தொழிற்சங்கத் தலைவர், (பி. 1926)

### சிறப்பு நாள்

- நாட்டுப்பற்றாளர் நாள் (தமிழீழம்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனாமடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 50 | 40 | 40 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 90 | 80 | 75 | 100 | 70 |
| பச்சைமிளகாய் | 30 | 30 | 40 | 50 | 15 | 60 | 30 |
| தக்காளி | 30 | 30 | 20 | 40 | 20 | 50 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 50 | 30 | 40 | 40 |
| கோவா | 20 | 40 | 40 | 50 | 80 | 60 | 70 |
| கரட் | 80 | 100 | 100 | 100 | 80 | 130 | 70 |
| பூசணி | 40 | 20 | 50 | 50 | 15 | 40 | 50 |
| புடோல் | 80 | 60 | 80 | 60 | 20 | 80 | 70 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 40 | 35 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 150 | 200 | 160 | 180 | 150 | 200 | 100 |
| பெரிய வெங்காயம் | 70 | 60 | 70 | 60 | 55 | 80 | 100 |
| பாகற்காய் | 100 | 160 | 100 | 100 | 35 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 60 | 30 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 50 | 100 | 60 | 50 | — | 80 | 60 |
| பயற்றங்காய் | 80 | 100 | 60 | 40 | 30 | 80 | 100 |
| லீக்ஸ் | 160 | 200 | 200 | 180 | 110 | 200 | 120 |
| பீற்றூட் | 30 | 20 | 40 | 40 | 10 | 60 | 40 |
| கறிமிளகாய் | 80 | 100 | 80 | 60 | 20 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 300 | 200 | 180 | 240 | 400 |
| போஞ்சி | 100 | 200 | 130 | 120 | — | 160 | 100 |
| [illegible] | 50 | 20 | 40 | — | — | 50 | 60 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 30 | 30 | 20 | 30 | 40 |
| தேசிக்காய் | 240 | 200 | 250 | 240 | 200 | 200 | 140 |
| தேங்காய்(ஒன்று) | 90 | 100 | 90 | 90 | [illegible]-60 | 60-75 | 80 |
| இராசவள்ளி | 180 | 150 | — | 140 | — | 160 | 140 |
| [illegible] | — | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 40 | — | 60 | — | 15 | 80 | 30 |
| பொன்னாங்காணி | 40 | — | 30 | 40 | 10 | 30 | 35 |
| வல்லாரை | 15 | — | 20 | 20 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | — | — | — | — | — | 80 | — |

நெஞ்சில் உரமின்றி நேர்மைத் திறனுமின்றி
வஞ்சனை செய்வாரடி – கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி. – மகாகவி பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மக்களுக்கு சேவை செய்வதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும்

## நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் வலியுறுத்து

(நல்லூர்)

நாம் அனைவரும் மக்களால் தெரிவு செய்யப்பட்டு இப்பெறுமதியான சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளோம்.

மக்களுக்கானசேவையை ஆற்ற அனைத்து உறுப்பினர்களும் ஒன்றுபட்டு நிற்போம். இனி இது ஒரு மக்கள் சேவை குடும்பம். இங்கு கட்சிச் சாயங்கள் தேவையில்லை. இங்கு அரசியல் செய்யத் தேவையில்லை. இங்கு மக்கள் சேவையே மகத்தானது. அச்சேவையாலேயே இச்சபை மேலும் கௌரவம் பெறும்.

அதனோடு நாமும் கௌரவம் பெறுவோம் என நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கு.மதுசுதன் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபையின் முதலாவது அமர்வு நேற்று இடம்பெற்றது. இதில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

திண்மக் கழிவகற்றலில் அதி நவீன தொழில்நுட்பங்களைக் கையாண்டு கழிவுகளை முகாமை செய்வதோடு அதன்மூலம் வருமானம் ஈட்டவும் வழிவகைகளை முனைவைப்பேன்.(கழிவு முகாமைத்துவத்தில் மேற் பட்டப் படிப்பு மேற்கொண்டவன் என்ற ரீதியில்)

மக்களுக்கு பயன்பாடுடைய குறுகிய கால, நீண்டகால திட்டமிடல்களை செயறபடுத்தி நாட்டில் சிறந்த சபையாக நல்லூர்பிரதேசசபையை மாற்ற நாம் அனைவரும் ஒன்றுபட்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம்.

எமது பிரதேசத்தின் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சிக்காக நாம் என்ன மகத்தான தியாகங்களை/ சேவைகளை செய்யமுடியுமோ அவற்றை நாம் ஒன்றுபட்டு ஒரே குடையில் செய்வோம்.

நம் இனத்தின் மீளெழுச்சிக்கு கல்வி மிக முக்கியமானது. கல்விக்காகவும் மேலும் பிரதேசத்தின் அபிவிருத்திக்காகவும் அனைத்து விதத்திலும் எனது தூய்மையான பங்களிப்பு அமையுமென உறுதிப்படுத்திக் கூற விரும்புகிறேன்.

கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும்முகமாக எனது முதலாவது சம்பளத் தொகையை என் வட்டாரத்தின் கல்வி உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு அளிக்கவுள்ளேன் என இந்த சபையில் கூறிக்கொள்ள விரும்புகிறேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# தமிழினம் வாழ வேண்டும் என நினைத்தால்...

ஒரு மாவீரன் சொல்லுகிறான் என்னைத் தூக்கிலிட்டு மரண தண்டனை தராதீர்கள். துப்பாக்கியால் சுட்டு எனக்கு மரணத்தைத் தாருங்கள் என்று.

இரண்டுமே மரணத்தைத் தரக்கூடியவை. அவ்வாறாயின் தூக்குத் தண்டனை வேண்டாம். துப்பாக்கியால் சுட்டு இறப்பை ஏற்படுத்துங்கள் என்று எதற்காக கூறுகிறாய் என எதிரிகள் கேட்கின்றனர்.

அதற்கு அந்த மாவீரன் சொல்லுகிறான். தூக்குத் தண்டனை என்றால் என் தாய் மண்ணை சில நிமிடங்களேனும் தொட முடியாது பிரிந்து தொங்க வேண்டியிருக்கும்.

ஆனால் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றால் என் தாய் மண்ணில் நின்றபடி சரிந்து விழுந்து அவள் மடியில் என் உயிரைத் துறப்பேன். அந்த சுகம் ஒன்றே போதும் எனக்கு எனப் பதில் தருகிறான் அவன்.

இறப்பின் நேரம் நிச்சயிக்கப்பட்டு மரணம் விதிக்கப்படுகின்ற அந்தக் கணத்திலும் தாய் மண்ணை நேசிப்பதென்பது சாதாரணமான தல்ல. இதுதான் தாய் மண் மீது கொண்ட பற்றும் பாசமும் ஆகும்.

எனினும் நம்மில் பலர் பேச்சளவில் தமிழ்ப் பற்றைக் காட்டுகின்றனர்.

ஆம், இதைத்தான் *உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்* என இறைவனிடம் வருந்திக் கேட்கிறார் இராமலிங்க வள்ளலார்.

அன்புக்குரிய தமிழ் அரசியல்வாதிகளே! உங்கள் ஒவ்வொருவரினதும் சிந்தனையும் நோக்கமும் ஆசாடத்தனமாக தமிழ் மக்களிடம் செல்வாக்குப் பெறுவது எப்படி என்பதுதான்.

அதற்காக உங்களில் பலர் செய்கின்ற திருகுதாளங்களும் பித்தலாட்ட அண்டல்களும் கோள்முட்டல்களும் கொஞ்சமல்ல.

விடுதலைப் புலிகளைப் புகழ்ந்து பேசிவிட்டால், அவர்களின் தியாகத்தை இடையிடையே சொல்லிவிட்டால் அதுவே உங்களுக்கான அரசியல் நிலைபேறு என நினைத்து விடுகின்றீர்கள். இது மகாதப்பு.

விடுதலைப் புலிகளைப் புகழ்ந்து பேசாதீர்கள். அவர்களின் தியாகத்தைக் கூறி வியாபாரம் செய்யாதீர்கள்.

மாறாக விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து மண் மீட்புக்காகத் தம் இன்னுயிரைத் தியாகம் செய்த அந்தத் தியாகிகளின் கனவை, இலக்கை அடைய வேண்டும் என மனப்பூர்வமாக நினைத்து அதற்காக நீங்கள் உழைத்தால் அதுபோதும்.

இதைவிட்டு தேர்தல் காலத்திலும் சபைகளின் கன்னி அமர்வுகளிலும் கடாநோக்கில் தமிழ் மக்களை ஏமாற்றும் விதத்தில் நீங்கள் ஆற்றுகின்ற உரைகளைத் தவிர்த்துக் கொள்வது நல்லது.

ஏனெனில் நீங்கள் ஆற்றுகின்ற உரைகள் எத்தன்மையது என்பதை தமிழ் மக்கள் மிகத் தெளிவாக அறிந்து வைத்துள்ளனர்.

ஆகையால் நெஞ்சுக்கு நீதியாக நடவுங்கள். துன்பப்படும் மக்களைத் தேடிச் சென்று அவர்களைச் சந்தியுங்கள். உங்களால் இயன்ற உதவிகளைச் செய்யுங்கள். மக்கள் மனங்களில் நிச்சயம் நீங்கள் நீங்கா இடத்தைப் பிடித்துக் கொள்வீர்கள். இது நம் சத்திய வாக்கு.

# ஜனாதிபதி நாடு திரும்பியதும் பிரதமர் விசேட சந்திப்பு

(கொழும்பு)

லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி நாடு திரும்பியவுடன் அவரைச் சந்தித்து விசேட பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டிக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட பிரதமர் அஸ்கிரிய மற்றும் மல்வத்துப்பீட மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்றதோடு அரசியல் நிலைவரம் தொடர்பாகவும் பேச்சு நடத்தினார்.

இதன்பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது,

"தலதா மாளிகைக்கு வந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டேன். அதேபோன்று மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்று கலந்துரையாடலையும் நடத்தினேன்.

சில வேலைத் திட்டங்கள் நிறைவு செய்யப்படவுள்ளதோடு மேலும் சில திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இது தொடர்பில் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி நாடு திரும்பியவுடன் புதிய திட்டத்தின் ஊடாக முன் செல்ல எதிர்பார்க்கின்றோம். கடந்த வருடத்தில் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்தோம். எனினும் மக்களுக்கு தொடர்ந்தும் நன்மைகளை செய்வோம்" எனத் தெரிவித்தார். (இ-7)

# தென்கிழக்குப் பல்கலைக்கழகக் கல்வி நடவடிக்கைகள் திங்கட்கிழமை ஆரம்பம்

(கொழும்பு)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களுக்குமான கல்வி நடவடிக்கைகள், எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன என பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம்.நாஜிம் நேற்று தெரிவித்தார்.

கடந்த 44 நாட்களாக பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பால், பல்கலைக்கழக அனைத்துச் செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன என்பதோடு, கல்வி நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு முடிவுக்கு கொண்டுவரப்பட்டதையடுத்து, கல்வி சாரா ஊழியர்கள் நேற்று முன்தினம் முதல் பல்கலைக் கழகத்தில் தமது கடமைகளில் ஈடுபட்டுள்ளனர் என அவர் கூறினார்.

இதேவேளை பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் 5 கோரிக்கைகளை முன்வைத்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர். கல்விசாரா ஊழியர்களின் கொடுப்பனவுகளை 10 சத வீதத்தால் அதிகரிப்பது தொடர்பான சுற்றுநிருபத்தை வெளியிட எடுத்த தீர்மானத்துக்கு அமையவே, பணிப்புறக்கணிப்பு தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதென பல்கலைக்கழக ஊழியர்கள் சங்கத்தின் செயலாளர் எம். வை. முபாறக் தெரிவித்தார்.

எமது கோரிக்கைகளுக்கு 3 மாதங்களுக்குள் உயர் கல்வியமைச்சும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் தீர்வு வழங்காவிடின், மீண்டும் 3 மாதங்களுக்குப் பின்னர், தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம் என அவர் தெரிவித்தார். (இ-7)


# நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.முகாமையாளர் சம்மேளனம் ஒழுங்கு செய்துள்ள "ஓர் இனப்பிரச்சினையும ஓர் ஒப்பந்தமும்" நூல் அறிமுக விழா எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் வடமாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, பொறியியல் கலாநிதி க.விக்னேஸ்வரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், வட மாகாண சபை எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா ஆகியோர் நூலை ஆய்வுரை செய்ய கருத்துரையினை வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், வடகிழக்கு மாகாண சபை முன்னாள் துணைச் செயலாளர் சி.கிருஸ்ணாநந்தன் ஆகியோர் வழங்குவர். ஆர்வலர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஒருங்கிணைப்பாளர் வி.நிருஜன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ)

# சத்திய தரிசனம்



## மூச்சுக்கு மூச்சு இறை சிந்தனை

❖ நல்லதையே கேள், நல்லதையே பார், நல்லதையே செய், நல்லதையே நினை, அப்போது கடவுளின் அருள் கிடைக்கும். அனைத்து கெட்ட எண்ணங்களும் மறைந்து விடும்.

❖ எள்ளில் எண்ணெய் போலவும், பாலில் வெண்ணெய் போலவும் இறைவன் அனைத்துப் பொருள்களிலும் கலந்துள்ளான்.

❖ தாய் தனது குழந்தையை விடாமல் கண்காணிக்கிறாள். இறைவனுக்கு நாம் தளிர்நடை பயிலும் குழந்தைகள் தான்.

❖ தாய்ப்பால் உண்ண குழந்தைக்கு நேரம் காலம் தேவையில்லை. அதேபோல் இறைவனை வணங்கவும் நேரம் காலம் தேவையில்லை.

❖ ஒவ்வொரு முறை மூச்சு விடும்போதும் இறைவனை நினைக்கப் பழகினால், இறுதி மூச்சு விடும் போதும் நினைத்துக் கொண்டே விட முடியும்.

❖ உடலில் வலி ஏற்பட்டால் "ஐயோ!" என்று பிதற்றிக் கொண்டு ஆறுதல் அடைகிறோம். அதுபோல் வாழ்வில் துன்பம் ஏற்பட்டால் இறைவன் பெயரைக் கூறினால் ஆறுதல் கிடைக்கும்.

❖ அடுத்தவர் இன்பத்தில் நாம் மகிழ்ந்து, மற்றவர் துன்பத்தில் நாம் நெகிழ்ந்து ஏகமாக விளங்குவதே இறைவன் அருளைப் பெறும் வழி.

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா பிரதேசத்தில பட்டாணி சூரிலிருந்து நெளுக்குளம் ஊடாக இராயேந்திர குளம வரை, ஓமேகாலைன், அரசன் அரிசி ஆலை, சியாம் அரிசி ஆலை, ஸ்ரீரங்கம் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, சுயன் அரிசி ஆலை, அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் முருங்கனிலிருந்து நானாட்டான் வரை, அறுக்குன்று, முருங்கனிலிருந்து முள்ளிக்குளம் வரை, சிலாவத்துறை கடற்படைமுகாம், முள்ளிக்குளம் கடற்படைமுகாம், செம்மணித்வு நெற்களஞ்சியம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணம்-2018 ஸ்ரான்லி அணி 2வது சுற்றுக்கு தகுதி



கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்திற்கான வெள்ளி விழா தொடரின் 7வது போட்டி கடந்த வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் ஸ்ரான்லி அணி, யாழ். சென்றல் அணியை ஒரு இலக்கினால் வெற்றி பெற்று 2 வது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் அணி 28.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 168 ஓட்டங்களை பெற்றது. றஜீவ்குமார்-80, சலிஸ்ரன்-25, மதூஸன்-19, சுபாதீஸ்-11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரான்லி அணி சார்பாக விதூஸன்-4 விஷ்ணுகரன்-3, ஆர். விதுஸன்-2, கம்ஸிகன்-1 இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 9 இலக்குகளை இழந்து 173 ஓட்டங்களை பெற்றது. சுவிகரன்-67, பிரசாத் -45, கம்ஸிகன்-12, துஸ்யந்தன் ஆட்டமிழக்காது 11 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் கிருசாந்தன்-02, தீபன்-2, சுபாதீஸ்-1, வதூஸன்-3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளை யாட்டுக் கழகம் நடத்தும் தர வரிசைப் பட்டியலுக்கு ஸ்ரான்லி அணி 5.83 புள்ளி களையும், யாழ். சென்றல் அணி 2.58 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (கு)

# கரப்பந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 99 ஆவ்து ஆண்டு நினைவு விழாவை முன்னிட்டு அமரர் நவரத்தினம் சிவம் ஞாபகார்த்த மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி (ஓவர் கேம்) நடத்துவதற்கு தீர்மானித்துள்ளனர். பங்குபற்ற விரும்பும் அணியினர் 077 309 5745, 077 209 0814 எனும் இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற் கொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (கு)

## உலககிண்ண கால்பந்து

# அணிகளை அதிகரிக்க கிளம்பும் எதிர்ப்புகள்




கட்டாரில் நடைபெற உள்ள உலகக் கிண்ண கால்பந்து தொடரில் 48 அணிகளை பங்கேற்க வைக்கும் பீஃபாவின் திட்டத்திற்கு, ஐரோப்பிய லீக்குகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

வருகிற ஜூன் மாதம் 32 அணிகள் பங்கேற்கும், உலகக் கிண்ண கால்பந்து தொடர் ரஷ்யாவில் நடைபெற உள்ளது. இதனைத் தொடர்ந்து, 2022ஆம் ஆண்டு கட்டார் நாட்டில் உலகக் கிண்ண தொடர் நடைபெற உள்ளது.

ஆனால், இந்த தொடரில் 48 அணிகளை விளையாட வைக்க பீஃபா திட்ட மிட்டுள்ளது. கூடுதலாக 16 அணிகள் பங்கேற்பதில் ஐரோப்பாவுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அதாவது, கட்டார் நாட்டில் கடும் வெயில் இருக்கும் என்பதால், உலகக் கிண்ண தொடர் போட்டிகள் நவம்பர் மாதம் 21ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 18ஆம் திகதி வரை நடத்தப்பட உள்ளது.

இந்நிலையில், கூடுதலாக 16 அணிகள் சேர்க்கப்பட்டால் போட்டிகள் அதிகரிக்கும். அத்துடன் நான்கு நாட்கள் கூடுதலாக விளையாட வேண்டிய நிலை ஏற்படும்.

இதனால், ஐரோப்பிய நாடுகளில் நடைபெறும் லீக் போட்டிகளுக்கு மிகப்பெரிய அளவில் பாதிப்பு ஏற்படும். ஏனெனில், இந்த லீக் தொடர் தற்போது பாதிநிலையை எட்டியுள்ளது.

எனவே, உலகக் கிண்ண தொடரால் லீக் தொடர்களை தள்ளிப் போட முடியாது என்று ஐரோப்பிய லீக் குழுக்கள் தெரிவிந்துள்ளன. கட்டாரில் உலகக் கிண்ண தொடருக்காக பிரமாண்ட மைதானங்கள் உருவாக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (க)

# சாதனை வீரர்களுக்கு வாழ்வாதார உதவிகள்

மாகாணமட்ட மரதன் ஓட்டப்போட்டியில் முதல் நான்கு இடங்களைப் பெற்ற சிவனுகேமா (குரவயல்), சிவசோதிநாதன் விதுசா (கோடமடு), சிவனேஷ்வரன் டிலக்சனா (புதுக்குடியிருப்பு), யோகேஷ்வரன் புவேந்தினி (முன்னா கண்டல்)

மாகாண கரப்பந்தாட்டத்தில் யெகதீஷ்வரன் நிதர்சனா (முள்ளியவளை).

மாகாண எல்லே போட்டியில் பாக்கியரான நிலுக்சா (குமுழமுனை). ஆகியோருக்கு பொருளாதார நிலையை அடிப்படையாகக்கொண்டு முல்லைத்தீவு மாவட்டச்செயலகத்தின் விளையாட்டுப்பிரிவின் வேண்டுகோளுக்கிணங்க விளையாட்டுத்துறையை மேம்படுத்தும் முகமாக நல்லூர் கிளை றொட்டரிக் கழகத்தினால் யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த லண்டன்வாழ் இலங்கைத்தமிழரின் நிதிப்பங்களிப்பில் றொட்டரிக்கழக மாவட்ட துணை ஆளுனர், நல்லூர் கிளை றொட்டரிக் கழகத்தின் உறுப்பினாரி. ரவினதாஷ் ஒழுங்குபடுத்தலில் நான்கு பேருக்கு ரூபா.45,000.00 தொடக்கம் 50,000.00 வரையான கறவைப்பசுக்கள், இரண்டு பேருக்கு துவிச்சக்கர வண்டிகளும் அண்மையில் புதுக்குடியிருப்பில் வைத்து விளையாட்டு வீரர்களிடமும் அவர்களின் பெற்றோரிடமும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் றொட்டரிக் கழக உறுப்பினர்கள், கிராம சேவையாளார் திரு. லக்கி தரன், அபிவிருத்தி உத்தி யோகத்தார், பிரதேச விளை யாட்டு உத்தியோகத்தர்கள், விளையாட்டுப் பயிற்றுனர்கள் பெற்றார்கள் கலந்து கொண்டனர். (கு)

# நூலிழையில் தப்பியது கண் மைதானத்தில் பரபரப்பு



பெங்களூர் அணிக் கெதிரான போட்டியின் போது ஹர்திக் பாண்ட்யாவின் த்ரோவில், விக்கெட் கீப்பரான இஷான் கிஷான் மைதானத்தில் வலியால் சிறிது நேரம் துடித்தார்.

பெங்களூர்- மும்பை அணிகளுக்கிடையேயான போட்டியில் பரபரப்பான சம்பவங்கள் பல நடந்தன.

ஓட்டமே எடுக்காமல் இரண்டு விக்கெட்டுகளை இழந்த மும்பை அணி 200-ஓட்டங்களுக்கு மேல் குவித்தது. அதன் பின்னர் பாண்ட்யா விவகாரத்தில் நடுவரிடம் கோலி வாக்கு வாதத்தில் ஈடுபட்டது போன்றவை நிகழ்ந்தன. அந்த வகையில் போட்டி யின் இளம் வீரரான இஷான் கிஷானின் கண் நூலிழை யில் தப்பியது.

ஆட்டத்தின் 13 ஆவது ஓவரில் பெங்களூர் அணி வீரர் லெக் திசையில் பந்தை அடித்து விட்டு, ஓட்டங்கள் எடுத்தார்.

அப்போது இரண்டாவது ஓட்டத்திற்கு அவர்கள் ஓட முயற்சித்ததால், வேகமாக ஓடி வந்து பீல்டிங் செய்த பாண்ட்யா, பந்தை அதே வேகத்தில் கீப்பரான இஷான் கிஷானுக்கு வீசினார்.

ஆனால் பந்தானது எதிர்பாராதவிதமாக கீழே பட்டவுடன், அவரின் முகத்தை பதம் பார்த்தது. பந்தானது வந்த வேகத்தில் பட்டதால், இஷான் மைதானத்தில் வலி தாங்க முடியாமல் கீழே விழுந்து துடித்தார். (க)

# சென்னையை மிஸ்பண்ணாதீங்க டோனியிடம் வேண்டிய ரசிகர்கள்




சென்னையை மிஸ் பண்ணாதீங்க டோனி என்று புனே ரசிகர்கள் வெளியிட்ட புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது.

தமிழகத்தில் காவிரி வாரியம் அமைக்காத நிலையில் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் ஐ.பி.எல். போட்டிகள் நடத்தக்கூடாது என எதிர்ப்புகள் எழுந்தன. இதனை தொடர்ந்து சென்னை சுப்பர் கிங்ஸின் உள்ளூர் போட்டிகள் புனேவுக்கு மாற்றப்பட்டன. இது சென்னை அணி ரசிகர்களுக்கு ஏமாற்றத்தை அளித்தது. இந்நிலையில் பஞ்சாப் உடனான போட்டிக்கு பிறகு புனேவுக்கு சென்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு ரசிகர்கள் பலத்த ஆதரவை அளித்துள்ளனர்.

மேலும் புனேவில் சென்னை சுப்பர் கிங்ஸ் ரசிகர்கள் இருவர் இருசக்கர வாகனத்தில், சென்னையை மிஸ் பண்ணாதீங்க டோனி, சின்ன தல ரெய்னா லவ் யூ என்று எழுதப்பட்டிருந்த புகைப்படத்தை வெளியிட்டுள்ளனர். இப் புகைப்படத்தை சென்னை சுப்பர் கிங்ஸின் அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கம் பதிவிட்டுள்ளது. (க)

# ஒரேஞ் தொப்பியை அணிய விரும்பவில்லை

## விரக்தியில் விராட்



ஐ.பி.எல். கிரிக்கெட்டில் பெங்களூர் அணியை 46 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய மும்பை இந்தியன்ஸ் அணி முதல் வெற்றியை பதிவு செய்தது.

பெங்களூர் அணியில் அணித்தலைவர் கோலி மட்டும் நிலைத்து நின்றி ஆடி அரைச் சதம் கடந்தார். கோலி சிறப்பாக விளையாடி 92 ஓட்டங்கள் எடுத்தார்.

இதனால் இவருக்கு ஒரேஞ் தொப்பி வழங்கப்பட்டது. இந்தத் தோல்வி நிலையில் இந்த ஒரேஞ் தொப்பியை நான் அணிய விரும்பவில்லை. நாங்கள் தூக்கித்தான் எறிந்தோம். எங்கள் விக்கெட்டுகளை நாங்கள் பறிகொடுத்த விதங்களை மீண்டும் ஒருமுறை மனதில் அசைபோட்டு பார்த்துக் கொள்ள வேண்டி யுள்ளது.

ஓரிரண்டு நல்ல கூட்டணிகள் எங்களுக்கு வெற்றி தேடித் தந்திருக்கும். மும்பை அணியினர் நன்றாகப் பந்து வீசினர். நன்றாக விளையாடினர். அவர்கள் அச்சமற்ற கிரிக்கெட் ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

நாங்கள் இயன்ற வரை போராடினோம். ஆனால் அவர்கள் விக்கெட்டுகளை தேவைப்படும் போது வீழ்த்த முடியவில்லை என்று கூறியுள்ளார். இதனிடையே கோலி மொத்தமாக ஐ.பி.எல். கிரிக்கெட்டில் 4619 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

இதன் மூலம் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர் என்ற பெருமையை பெற்றுள்ள கோலி 4558 ஓட்டங்கள் எடுத்த சுரேஷ் ரெய்னாவின் சாதனையை முறியடித்துள்ளார்.

இந்த பட்டியலில் ரெய்னா இரண்டாமிடத்திலும், ரோகித் சர்மா மூன்றாமிடத்திலும், கவுதம் கம்பீர் நான்காம் இடத்திலும், டேவிட் வோர்னர் ஐந்தாமிடத்திலும் உள்ளனர். (க)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## நல்லிணக்கத்தை...

பொதுநலவாய மாநாட்டிற்காக லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி அங்கு வசிக்கும் இலங்கையர்களுடனான சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அங்கு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் அரச தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வருகைதந்த இந்த சந்தர்ப்பத்தில் ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் இலங்கையர்களான உங்கள் அனைவரையும் சந்திக்க கிடைத்ததில் மகிழ்ச்சியடைகின்றேன். பதில் உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டதைப் போன்று இங்குள்ள சுமார் நான்கு இலட்சம் இலங்கையர்களின் பிரதிநிதிகளாகவே நான் உங்களை காண்கின்றேன். அனைவரையும் ஒரே இடத்தில் சந்தித்து உரையாட முடியாவிட்டாலும் அவர்கள் சார்பாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஐக்கிய இராச்சியத்தில் பல்வேறு துறைகளில் சேவையாற்றும் இலங்கையர்கள் வசிக்கின்றனர். இதனால் ஐக்கிய இராச்சியத்திற்கு நீங்கள் சேவையாற்றுவதைப் போலவே தாய் நாட்டிற்கும் பெருமை சேர்க்கின்றீர்கள். வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் எந்த நாட்டில் எத்தகைய தொழிலில் ஈடுபட்டிருப்பினும் அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையின் வெற்றி. அவர்கள் சேவையாற்றும் நாட்டின் வெற்றி. அதேபோல் அவர்களது தாய் நாடான இலங்கையின் கௌரவத்தினை பேணுவதில் அவர்கள் தமது சேவையில் வெளிக்காட்டும் ஆற்றல்கள், திறமைகள் என்பவையே காரணமாக அமைகின்றன. இலங்கையர்கள் இன்று உலகளாவிய ரீதியில் கல்விமான்கள் புத்திஜீவிகள், விஞ்ஞானிகள், விசேட நிபுணர்கள் என பல துறைகளில் கடமை புரிகின்றனர். அதன் மூலமாக அவர்கள் தமது தாய் நாட்டிற்கு பெருமை சேர்க்கின்றனர் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிட முடியாது. உலகின் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு இனங்களுக்கிடையிலும் இலங்கையர்கள் விசேட ஆற்றல்களையும் திறமைகளையும் வெளிக்காட்டுகின்றனர். அவர்களுக்கு நாம் எமது அரசின் சார்பில் மதிப்பளிக்கின்றோம்.

நீங்கள் இந்த நாட்டில் வாழ்ந்த போதிலும் எமது தாய் நாட்டைப் பற்றிய தகவல்களை நீங்கள் அறிவீர்கள். ஆனால் அவை எந்தளவுக்கு உண்மையானவை என தெரியாது. இன்றும் என்னை சந்திக்க வந்த சில இலங்கையர்களுடன் நான் கலந்துரையாடினேன். தனிப்பட்ட ரீதியிலும் நிறுவன ரீதியிலும் அவை அமைந்திருந்தன. அதனூடாக எவ்வளவு தவறான, உண்மைக்கு புறம்பான தகவல்களை நீங்கள் அறிய முடிகின்றது என்பதை நான் புரிந்துகொண்டேன். இணையத்தினூடாக பெற்றுக்கொள்ளும் பிரகடனங்கள், செய்திகள் என்பவற்றுள் 75% இற்கும் அதிகமானவை உண்மையானவையல்ல. நானும் நிமல் சிறிபால டி சில்வா அமைச்சரும் இன்று பல கலந்துரையாடல்களில் ஒன்றாக பங்குபற்றினோம். அவரும் என்னுடன் இருந்ததால் சில விடயங்களுக்கு என்னால் உறுதியான ஆதாரங்களை கூட முன்வைக்க கூடியதாக இருந்தது.

அண்மையில் எமது நாட்டில் கண்டி பிரதேசத்தில் ஏற்பட்ட சிங்கள-முஸ்லிம் இனங்களுக்கிடையிலான முறுகல் நிலையின் போது இடம்பெற்ற சில சம்பவங்களும் அதற்கான பின்னணி பற்றிய விடயங்களும் எந்தளவிற்கு பொய்யாக பரப்பப்பட்டுள்ளன. அதேபோல அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் தொடர்பில் உண்மையான தகவல்கள் எவ்வளவு குறைவாக தெரிவிக்கப்பட்டுள்ளன. பொய்யான தகவல்கள் எவ்வளவு வேகமாக வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு அறியக் கிடைக்கின்றது என்பதை என்னால் உணர முடிந்தது.

நீங்கள் சிலவேளைகளில் தினமும் உங்கள் பெற்றோர், உறவினர்கள், நண்பர்களுடன் தொலைபேசியில் உரையாடுபவராக இருக்கலாம். ஆனால் உண்மையான விடயங்கள் மூடி மறைக்கப்பட்டு பொய்யான தகவல்கள் வேகமாக சமூகத்தை சென்றடைகின்றது என்பதாகவே நான் கருதுகின்றேன். நாட்டில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பில் சரியான தகவல்கள் அறியக் கிடைக்காமை அரசாங்கத்தின் செயற்பாடுகள் பற்றிய சரியான புரிந்துணர்வு இல்லாமை போன்ற பல விடயங்கள் உள்ளன. புதிய தொழில்நுட்ப உபகரணங்களை வடிவமைத்த விசேட நிபுணர்களும் விஞ்ஞானிகளும் சமூகத்தின் நலவுகை, நீடித்து நிலைத்திருக்கும் தன்மை மற்றும் அவற்றின் எதிர்காலத்திற்காகவே அவற்றை உருவாக்கினார்கள். ஆயினும் அவை எந்தளவிற்கு முறையற்ற விதத்தில் உபயோகிக்கப்படுகின்றன என்பதை இன்று எமது நாடு மட்டுமன்றி முழு உலகுமே காண்கின்றது. சமூக வலைத்தளங்கள் ஐக்கிய அமெரிக்காவிற்கு பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது. பல உலக நாடுகளுக்கும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

கண்டியில் ஏற்பட்ட சம்பவத்தின்போது ஒரு சில மணித்தியாலத்திற்குள் நாம் அரசாங்கம் என்ற வகையில் அவசரகால நிலையை பிரகடனப்படுத்தினோம். ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தினோம். முப்படைகளை சேவையில் ஈடுபடுத்தினோம். சமூக வலைத்தளங்களை முற்றாக முடக்கினோம். பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் இவற்றை நாம் மேற்கொண்டபோதும் பல வெளிநாட்டு இராஜதந்திரிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். பலர் என்மீது குற்றம் சாட்டினர். சில வெளிநாட்டு இராஜதந்திரிகள் தமது எல்லையை மீறி கருத்துக்களை வெளியிடத் தொடங்கினர். இவை எதற்கும் நாம் சளைத்து விடவில்லை. அச்சப்படவில்லை. எமது தீர்மானங்களை உரிய முறையில் மேற்கொண்டோம். ஒரு நாடு என்ற வகையில் ஏற்படவிருந்த பாரிய அழிவினை எம்மால் தவிர்த்துக்கொள்ள முடிந்தது.

சர்வதேச அமைப்புக்கள் எமது செயற்பாட்டை ஏற்றுக்கொண்டன. எமது நாட்டிலும் பெற்றோர் அதனை மிகவும் வரவேற்றனர். முடியுமாயின் நிரந்தரமாகவே அவற்றை தடை செய்யுமாறு அவர்கள் என்னிடம் கேட்டுக்கொண்டார்கள். க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர் தரம் என்பவற்றில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர் என்னோடு உரையாடினார்கள். தந்திகளை அனுப்பினார்கள், கடிதங்களை அனுப்பினார்கள், எனது அந்த செயற்பாட்டை பாராட்டினார்கள். நாம் சிறந்த ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதற்காக ஜனநாயகம், மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் போன்ற அம்சங்கள் அவசியமாகுமென்பதை அறிவோம். அவ்வனைத்து விடயங்களிலும் கிடைத்துள்ள சுதந்திரத்தை நற்பண்புகளையுடைய மக்கள் முறையாக பயன்படுத்துகின்ற போதிலும் தீய குணங்களை உடையோர் அவற்றை முறையற்ற விதத்தில் பயன்படுத்துகின்றனர் என சகலரும் அறிந்துள்ளோம்.

புத்த பெருமான் முக்தி பெறும்போது பாரத நாட்டில் அன்றைய சமூகத்தில் காணப்பட்ட சிக்கலான நிலையை நீங்கள் அறிந்திருப்பீர்களென நான் அறிந்திருக்கிறேன். அதுபோலவே நபி அவர்கள், யேசு பிரான் ஆகியோர் உதித்த சமுதாய பின்னணி தொடர்பிலும் உங்களுக்கு புரிந்துணர்வு உண்டு. அநகாரிக தர்மபால, ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் ஆகியோர் பௌத்த மதத்தை பாதுகாக்க அளப்பரிய சேவைகளை ஆற்றினார்கள். இறுதியில் நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்கள் அமெரிக்காவுக்கு சென்றார். அநகாரிக்க தர்மபால அவர்களும் நாட்டை விட்டு இந்தியாவிற்கு சென்று மீண்டும் இலங்கையர்கள் வாழும் நாட்டின் பக்கமே செல்லப்போவதில்லை எனத் தெரிவித்தார். அன்று அந்த சமூகத்தின் மீது காணப்பட்ட வெறுப்பே அதற்கு காரணமாகும். சிலர் அரசியல் முறுகல் நிலை எமது நாட்டில் மட்டுமே காணப்படுகின்றதென நினைக்கின்றனர். பிரித்தானிய பிரதமர் தெரேசா மே அம்மையார் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ள வந்த அரச தலைவர்களை சந்திப்பதாக இருந்தது. ஆயினும் பாராளுமன்றத்தில் ஏற்பட்ட நிலைமை காரணமாக அவசரமாக அந்த சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டது.

கடந்த மாதம் நிமல் சிறிபால டி சில்வா அமைச்சருடன் இணைந்து நான் ஜப்பானுக்கு சென்றபோது ஜப்பான் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் நாம் பங்குபற்றினோம். அப்போது சுமார் 2000 பேர் அளவில் ஜப்பான் பிரதமர் அலுவலகத்திற்கு முன்னாள் ஜப்பான் பிரதமரை பதவி விலகுமாறு கோரி கொடி பிடித்து கொண்டு இருந்தார்கள். நான் இலங்கையர்கள் குழுவொன்று தவறுதலாக அங்கு வந்திருக்கின்றனவா என்று பார்த்தேன். அந்த உத்தியோகபூர்வ சந்திப்பு முடிவடைந்து திரும்பி வருகையில் சுமார் 5000 பேர் அளவில் கொடி பிடித்துக்கொண்டிருந்தார்கள். தற்போது சகல நாடுகளிலும் இது போன்ற அரசியல் பிரச்சினைகளும் பொருளாதார நெருக்கடிகளும் காணப்படுகின்றன. அரசாங்கம் என்ற வகையில் நாட்டிற்கான எமது பொறுப்பை நாம் தவறாது நிறைவேற்றுகின்றோம்.

சகல இனங்களுக்கிடையிலும் சமாதானத்தை கட்டியெழுப்ப சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வன்முறைகளற்ற சமூகத்தை கட்டியெழுப்ப மீண்டும் யுத்தம் ஏற்படாத வகையில் செயற்பட நாம் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். கடந்த மூன்றரை வருடங்களில் எமது அரசாங்கம் பாரிய செயற்பாடுகளை ஆற்றியுள்ளது. அதற்கான பெறுபேறுகள் தற்போது கிடைத்துள்ளன. அந்த தகவல்கள் சரியான முறையில் மக்களை சென்றடைவதில்லை. பொய்யான விடயங்களே விரைவில் பரவுகின்றன. இலங்கையர் என்ற வகையில் ஐக்கிய இராச்சியத்தில் பல்வேறு துறைகளில் பணிபுரிகின்றவர்களின் ஒத்துழைப்பினை நாம் எப்போதும் எதிர்பார்க்கின்றோம். எமது நாட்டிற்கான உங்களது உண்மையான உணர்வுகளை நாம் அறிவோம் என்றார். (ம)

## ஈரான் சபாநாயகர்...

வியட்நாம் நாட்டிற்கான சுற்றுப் பயணத்தை தொடர்ந்து அவர் ஈரானுக்கு சொந்தமான விமானத்தில் இலங்கை வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவரை வரவேற்பதற்காக அமைச்சர் ஏ.எச்.எம் பௌசி உள்ளிட்ட குழுவினர் கட்டுநாயக்கவிற்கு சென்றிருந்தனர்.

இந்த விஜயத்தின் போது இலங்கை நாடாளுமன்றின் சபாநாயகர் கருஜயசூரிய மற்றும் பிரதமர் உள்ளிட்ட அரச தலைவர்களை ஈரான் சபாநாயகர் சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இலங்கைக்கு சலுகை...

வதாகவும் சர்வதேச வர்த்தக விவகாரங்களுக்கான பிரித்தானிய இராஜாங்க செயலாளர் லியாம் பொக்ஸ் தெரிவித்தார்.

பொதுநலவாய நாடுகளின் அரச் தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக லண்டனுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று பிற்பகல் லண்டன் நகரில் சந்தித்த லியம் பொக்ஸ் இதனை குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கிடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்தி புதிய வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புக்களை விரிவுபடுத்துதல் தொடர்பாக இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த லியம் பொக்ஸ், இலங்கையில் காணப்படும் புதிய முதலீட்டு வாய்ப்புக்கள் பற்றிய தகவல்களை பிரித்தானிய சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சின் இணையத்தளத்திலும் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தற்போது இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகளில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளதுடன் சுற்றுலாத் துறையிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், சகல நாடுகளுடனும் நட்புறவினை கட்டியெழுப்பிய வண்ணம் இலங்கை அரசாங்கம் பின்பற்றிவரும் நட்புறவான வெளிநாட்டு கொள்கையினூடாக தாய்நாட்டிற்கு பல வெற்றிகளை பெற்றுக்கொள்ள முடிந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையில் காணப்படும் புதிய முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, மின் உற்பத்தி துறையில் புதிய முதலீடுகள் தொடர்பாக அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளதுடன் விவசாய மற்றும் கால்நடை வளங்கள் தொடர்பாகவும் முன்னுரிமையளித்து செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

பிரித்தானிய அரசாங்கத்தினால் இலங்கையின் அபிவிருத்திக்கு தொடர்ச்சியாக வழங்கப்பட்டுவரும் உதவிகளுக்கும் ஜனாதிபதி இதன்போது நன்றியை தெரிவித்தார்.

இதனிடையே இலங்கையுடன் நெருக்கமாக செயற்படும் பிரித்தானிய பழமைவாதக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பிரித்தானிய பிரபுக்கள் சபையின் உறுப்பினருமான பரோன் நெஸ்பி லண்டன் நகரில் ஜனாதிபதியை சந்தித்தார்.

இலங்கை அரசாங்கத்தினால் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி செயற்திட்டங்களை பாராட்டிய பரோன் நெஸ்பி, இலங்கையின் உண்மையான ஆதரவாளர் என்ற வகையில் அதற்கான ஒத்துழைப்புக்களையும் பெற்றுத்தருவதாக குறிப்பிட்டார்.

அத்துடன் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க செயற்திட்டங்களையும் பாராட்டிய பரோன நெஸ்பி, யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும செயற்பணிகள் உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் சிறந்த மட்டத்தில் காணப்படுவதாக தெரிவித்தார்.

இத்தகைய செயற்பாடுகள் பற்றிய சரியான, போதிய தகவல்கள் ஐரோப்பிய நாடுகளுக்கும் ஜெனிவாவுக்கும் உரியவாறு கிடைக்கப்பெறாமை வருந்தத்தக்கதாகும் என தெரிவித்த பரோன் நெஸ்பி, அந்த உண்மை நிலை தொடர்பாக அவர்களை தெளிவுபடுத்த தாம் தமது பூரண உதவியை வழங்குவதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையின் உண்மையான நிலைமை தொடர்பாக போதிய புரிந்துணர்வுடன், நாட்டின் அபிவிருத்தி மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளுக்காக பரோன் நெஸ்பி வழங்கும் தனிப்பட்ட உதவிகளுக்கும் இதன்போது ஜனாதிபதி நன்றி தெரிவித்தார். (ம)

## 7 பிள்ளைகளின்...

தாயான சோதிலிங்கம் சாந்தகுமாரி (வயது 57) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் கடந்த 17ஆம் திகதி அவரது வீட்டில் வைத்து தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றி எரிந்துள்ளார். கடுமையான தீக்காயங்களுக்கு உள்ளான இவரை மீட்ட இவரது குடும்பத்தினர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். எனினும் இவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## அரசை உடனடியாக...

உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை இரத்துச் செய்ய வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணி கொண்டு வரும் திருத்தச் சட்டம் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார். (ம)

## அபிவிருத்திக்கு பொது...

வித்துள்ளதுடன், அந்த எதிர்பார்ப்புகளுடன் கூடிய திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி அதற்கு வலுச்சேர்க்க பொதுநலவாய அமைப்பின் சகல நாடுகளும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பொதுநலவாய அமைப்பின் அரச தலைவர்கள் மாநாட்டிற்கு சமகாலத்தில் நேற்று லண்டன் நகரில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் வர்த்தக மாநாட்டில் முதன்மை உரையினை ஆற்றியபோதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கம், வர்த்தக சமூகம் மற்றும் சிவில் சமூகத்தை சேர்ந்த பிரதிநிதிகள் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் முதன்மை உரையை ஆற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பேண்தகு அபிவிருத்தியை அடையத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு அரச மற்றும் தனியார் துறைகளுக்கிடையே காணப்படும் தொடர்புகளை விருத்தி செய்ய வேண்டும் என தெரிவித்தார். (ம)

## முள்ளிவாய்க்கால்...

தமிழ்த் தேசிய நினைவெழுச்சி நிகழ்வை அதன் அடையாளங்களிலிருந்தும் வேறுபடுத்துகின்ற பிரத்தியேக நிகழ்வாக ஒருபோதும் கடைப்பிடிக்க முடியாது எனவும், ஒன்றாக ஓரிடத்தில் அந்தந்த நாடுகள் தழுவி தமிழர்களின் ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய மக்கள் பேரெழுச்சியாக எழுச்சிகொள்ள வேண்டும் எனும் தமிழ்மக்களின் பார்வையும், அவர்களது வேணவாவையும் புறக்கணிக்க முடியாத சூழ்மைவாக மிகவும் வலுப்பெற்றுள்ளது.

இந்த விடயத்தைப் பெரிதும் கருத்திற் கொண்டு இதுபற்றிய நேரடியான, நேர்மையான, ஆக்கபூர்வமான கலந்தாலோசனைகளோடு இதனைச் செயற்படுத்த முனையுமாறு தமிழர்களின் விடுதலை நோக்கிய பயணத்தில் தம்மை ஈடுபடுத்தியிருக்கும் அனைத்து அரசியல் மற்றும் பொது அமைப்புக்களிடமும், எம்மினத்தின் எதிர்காலத் தூண்களான இளைய மாணவ சமுதாயம் அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றது.

இதில் அனைத்துத் தமிழ்மக்களினதும், தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற தமிழர் அமைப்புக்களினதும் முழுமையான ஒத்துழைப்பை தமிழ் மாணவர்களான நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம். தமிழ்த்தேசியத்தின் எதிர்காலத்தை இன்றைய இருள்சூழ்ந்த நிலையிலிருந்து விடிவை நோக்கி மாற்றியமைக்கும் தொடக்கப் புள்ளியாக முள்ளிவாய்க்கால் மண் மீது உறுதியெடுப்போம்.

தமிழ்த்தேசிய மாணவர்கள் தமிழ்த் தேசத்தின் காவலர்கள் என்று அந்த அறிக்கையில் உள்ளது. (ம)

# மன்னார் விடத்தல் தீவு பகுதி...

பட்டதுடன் தொலைபேசி கம்பங்களும் முறிந்து வீழ்ந்த அனர்த்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று புதன் கிழமை மாலை 4.00 மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவது, விடத்தல்தீவு பகுதியில் திடீரென ஏற்பட்ட மழையுடன் கூடிய மினி சூறாவளி காரணமாக விடத்தல்தீவு கிராம அலுவலர் அலுவலகத்தின் கூரைப் பகுதி தூக்கி வீசப்பட்டதுடன், கிராம மக்கள் சிலரது வீட்டுக் கூரைகளும் தூக்கி வீசப்பட்டு சேதமடைந்தன.

இதன் போது, வீட்டில் இருந்த இலத்திரனியல் பொருட்களும் இடி மின்னல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில், சம்பவ இடத்திற்கு சென்ற விடத்தல்தீவு கிராம அலுவலர் பாதிக்கப்பட்ட மக்களிற்கு தேவையான ஆரம்ப உதவிகளை செய்து கொடுத்துள்ளார். (ம-15)


## விரைவு பொதிகள் சேவை

### விசேட விலை குறைப்பு



UK – 550*/=Kg

கனடா – 1050*/=Kg

DELIVERY IN 3-5 DAYS

தொடர்புகளுக்கு 0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS (C-1982)


# நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படாத...

இடம்பெறவுள்ள ஆசிரியர் நியமனத்திற்கு உள்வாங்குவதற்கான நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படவில்லை.

இதில் பல ஆசிரியர்கள் ஏற்கெனவே இடம்பெற்ற நேர்முகத் தேர்வுகளுக்கு சென்று வந்தவர்கள்.

இருந்தும் இந்த நேர்முகத் தேர்வுக்கு இவர்களுக்கான கடிதங்கள் அனுப்பப்படாததன் காரணமாக தங்களுக்கு நீதிகேட்டு மத்திய கல்வி அமைச்சின் அலுவலகத்திற்கு சென்றுள்ளனர். இவர்களில் பலர் குழந்தைகளுடன் சென்றுள்ளமை வேதனைக்குரியது.

வடக்கு மாகாண சபை செய்ய வேண்டிய பணிகளை அவர்கள் தாங்கள் செய்ய முடியாது என தங்களுக்கு அறிவித்தமையினால் மத்திய கல்வி அமைச்சினால் நேர்முகத் தேர்வுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும், உண்மையிலேயே இந்தப் பணிகளை வடக்கு மாகாண கல்வி அமைச்சே பார்க்க வேண்டும் என்றும் மத்திய கல்வி அமைச்சின் அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இவர்கள் அங்கு சென்றுள்ளதனை அறிந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் பத்தரமுல்ல கல்வி அமைச்சின் அலுவலகத்திற்கு சென்று இராஜாங்க கல்வி அமைச்சர் வே.இராதாகிருஸ்ணனை சந்தித்து இது குறித்து உரையாடியதோடு நீதி கோரி சென்றுள்ள தொண்டராசிரியர்களையும் சந்தித்துள்ளார்.

இதன் போது கருத்து தெரிவித்த அமைச்சரும் அமைச்சின் செயலாளரும் தாங்கள் விடுபட்ட ஆசிரியர்களின் விபரங்களை திரட்டி அதன் உண்மைத்தன்மையினை அறிந்து உரிய நடவடிக்கையினை எடுப்பதாக தெரிவித்துள்ளனர்.

மாகாண சபைகளுக்கான அதிகார பரவலாக்கல் பற்றி தொடர்ந்தும் பேசி வருகின்ற வடக்கு மாகாண சபையினர் கல்வி விடயம் தொடர்பில் தங்களுக்கு உள்ள அதிகாரத்தையும் மத்திக்கு வழங்கிவிட்டு தங்களை மத்திய அரசின் அலுவலகத்திற்கு அனுப்பிவிட்டுள்ளனர்.

தங்களின் தொண்டராசிரியர்கள் தெரிவுகள் நேர்முகத் தேர்வுகள் எல்லாம் மாகாண சபையின் அதிகாரத்திற்கு உட்பட்டது என்றும் பத்தரமுல்லைக்கு சென்றுள்ள தொண்டராசிரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ம)


## பதவி வெற்றிடம்

நீங்கள் O/L பயின்றவரா? இவ்விலக்கங்களுக்கு அழைத்து உங்கள் பதிவுகளை உடன் பதிவு செய்க! நாடு முழுவதும் 40 பேருக்கு முன்னுரிமை. அனுபவம் அவசியமில்லை. தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

வயதெல்லை : 18 - 30 077 157 1699,

ஆரம்பம் : 17,500/= 077 408 3273

(3676)


# ஒரு கோடிரூபாய்க்கு...

பொருள், புகைப்பொருட்கள் மற்றும் மது உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மதுவரி திணைக்களத்தால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதன்போது 3 ஆயிரத்து 213 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், பொது இடங்களில் புகைத்தலில் ஈடுபட்ட 114 பேரும் மற்றும் சிறார்களுக்கு சிகரட் விற்பனை செய்த 24 பேரும் இதில் அடங்குவதாக பொலிஸார் அறிவித்துள்ளனர். (ம)

# இறக்குமதியாகும்...

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த வரி விதிக்கப்பட்டிருப்பதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது. (ம)

# அரசாங்க அதி...

நடைபெறவுள்ளது.

இந்த சந்திப்பில் உலக வங்கியால் முன்னெடுக்கப்படவுள்ள யாழ்.மாநகர அபிவிருத்தி தொடர்பிலேயே கலந்துரையாடப்படவுள்ளது.

நேற்றையதினம் யாழ். மாநகர சபையின் முதல்வர் இம்மானுவேல் ஆனோல்ட் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே மற்றும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் ஆகியோரை சந்தித்து எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடியிருந்தார்.

இதன் போதே மேற்படி சந்திப்பு தொடர்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் ஆயிரக்கணக்கான மில்லியன் நிதியுதவியுடன் யாழ்.மாநகரம் அபிவிருத்தி செய்வதற்கான திட்டமிடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த திட்டத்துக்கான முன்னாயத்த திட்டங்கள் ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில்,

இது தொடர்பில் அனைத்து தரப்பிடமிருந்தும் ஆலோசனைகளை பெற்று அதனை நடைமுறைப்படுத்துவதற்காகவே திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே மேற்படி கூட்டம் ஏற்பாடாகியுள்ளது. இந்த கூட்டத்தில் மாநகர சபையின் உறுப்பினர்கள், அரசியல் பிரதிநிதிகள், அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-4)


## காணவில்லை

3 1/2 வயது நிரம்பிய (பொக்கற் Dog) வெள்ளை நிறம் உடைய நாய்க்குட்டியை No. 2, மருதடி வீதி, யாழ் எனும் முகவரியில் இருந்து நேற்று முதல் காணவில்லை. கண்டவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

உரிய சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : 076 603 6489

(3666)



## 100% புலமைப் பரிசில்

முற்றிலும் வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பயிற்சிநெறி!

மென்பொருள் கம்பனியில் இணைந்து மென்பொருள் அபிவிருத்தியாளர் ஆகவேண்டுமா?

அல்லது

ஒரு தொழில்நுட்பம் சார்ந்த கம்பனியை ஆரம்பிக்கவேண்டுமா?

Apply Now For Batch 3

| | | |
|---|---|---|
| தகமை | : | க. பொ. த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிப் பெறுபேறுகளைப் பெற்றிருத்தல் ( வயது எல்லை 23 வருடத்திற்கு கீழ் ) |
| பயிற்சி நிலையம் | : | யாழ்ப்பாணம் |
| பயிற்சிக் காலம் | : | 6 மாதங்கள் ( மே 2018 – நவம்பர் 2018) |
| விண்ணப்பிக்கும் முறை | : | www.uki.life/apply |
| விண்ணப்ப இறுதித்திகதி | : | 27 April 2018 |

உள்ளடக்கம்

Software Development — Business English

Business Management — Personal Coaching

UKi

மேலதிக தகவல்களுக்கு

www.uki.life 0775694587 info@uki.life

(3619)



நூற்றுக்கணக்கான நாடுகளில் கிளைகளைக் கொண்ட அமெரிக்க நிறுவனங்களான

McDonald's Marriott. HOTELS & RESORTS

ஆகியவற்றில் வேலைவாய்ப்பு ஏற்பாடு!

அல்லது

ஜேர்மன் உல்லாசப் பயணக் கப்பல் வேலைவாய்ப்பு

அல்லது

சுவிஸ், அவுஸ்ரேலியா, சிங்கப்பூர் நியூசிலாந்து, கனடா விசா ஏற்பாடு என்பவற்றுடன்

O/L உடன் விரும்பிய நாடு சென்று 50,000 – பல இல. சம்பாதிக்க

10ம் அணி

TOURISM & Hotel Management

Entry Level with FREE ENGLISH COURSE

4 MONTHS DURATION

புதிய பிரிவு ஆரம்பம் ஏப்ரல் 23 திங்கள்

பதிவுகளுக்கு 0777 324 004

வெற்றி ஆண்டில் 9th Year

SIKARAM ACADEMY

Business - Hospitality - English

FAST TRACK to CAREERS

Sri Lankan Entrepreneur of the Year 2017

இல. 221-1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

021 221 9 221 www.sikaram.lk

(C-2320)


# வலிகாமம் வடக்கு பகுதி...

டார் குண்டுகள் மீட்கப்பட்டன.

கடந்த 28 வருடகாலமாக இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த வலி.வடக்கில் 683 ஏக்கர் நிலப்பரப்பு கடந்த 13ஆம் திகதி விடுவிக்கப்பட்டன. அவை காணி உரிமையாளர்களிடம் மீளக் கையளிக்கப்பட்டன.

இவ்வாறு கையளிக்கப்பட்ட கட்டுவன் சந்திக்கு அருகில் உள்ள வீடொன்றின் கிணற்றடியில் உள்ள தண்ணீர் தொட்டிக்குள் மோட்டார் குண்டுகள் காணப்பட்டன. அவை தொடர்பில் அருகில் இருந்த இராணுவ முகாமுக்கு வீட்டின் உரிமையாளர் அறிவித்தார்.

அதனையடுத்து அந்த இடத்துக்குச் சென்ற இராணுவத்தினர் அவற்றை பார்வையிட்டனர்.

பின்னர் மோட்டார் குண்டுகள் தொடர்பில் வெடிபொருள்கள் அகற்றும் சிறப்பு அதிரடிப் படையினருக்கு அறிவித்துள்ளனர். (ம)

# முள்ளிவாய்க்...

அமைப்புக்களுடம் முன்வர வேண்டும் என எம்மினத்தின் எதிர்காலத்தூண்களான இளைய மாணவ சமுதாயம் அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றது.

இவ்வாறு முள்ளிவாய்க்கால் மண்ணிலிருந்து யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலுக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் நேற்று சென்றனர். அங்கிருந்து இந்த அழைப்பை அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளிடமும் பொது அமைப்புக்களிடமும் அவர்கள் முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பில் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அன்பிற்கும், பெருமதிப்பிற்குமுரிய

தமிழ் மக்களே!

மானுடத்தின் மதிப்பைப் பேணிக்காப்பதில் அக்கறை கொண்டவர்களாக, நாகரிகமாகத் தம்மை அடையாளப்படுத்திக்கொள்ளும் உலக சமூகங்களின் மனச்சாட்சிக் கதவுகளை இறுக்கி மூடி வைத்தபடி, அவசர அவசரமாக இருபத்தோராம் நூற்றாண்டில் எல்லோர் முன்னிலையிலும் நடந்தேறிய மறைக்கவும் மறக்கவும் முடியாத, மிகவும் கோரமாக நடத்தி முடிக்கப்பட்ட தமிழர்களுக்கு எதிரான மாபெரும் மனிதப் பேரவலம்தான் மே18 முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை!

இந்தப் பேரவலத்தை நாம் எல்லோரும் தமிழர்களாக, வரலாற்று வழித்தடத்தில் சுமந்துவந்த அத்தனை அறவழி முறைகளிலுருந்தும் வழித்தடம் மாறாமல், உலகின் முன்னால் நிமிர்ந்து நின்று நீதி கேட்கும் அத்தனை உரிமைகளும் தமிழர்களாகிய எமக்குண்டு.

நாங்கள் நாங்களாக, தமிழர்களாக இருக்கும் வரையில்தான் எமது இனவிடுதலையின் பயணம் வீறுகொண்டெழும், வியாபகம் பெறும். இல்லையேல் கால ஓட்டத்தில் வழித்தடம் மாறி, யார் யாரெல்லாம் எம்மை அழிக்க நினைத்தார்களோ அவர்களின் பாதையில் பங்காளிகளாகவும் கூட மாறநேரிடும்.

மே18 முள்ளிவாய்க்கால் நினைவு நாள் என்பது தமிழர்களின் ஒட்டுமொத்த துயரங்களாலும், தோல்விகளாலும் துவண்டுபோகும் நிகழ்வல்ல.

மாறாக தமிழர்களின் மீளெழுச்சியைக் கட்டியங்கூறி நிற்கும் தார்மீக வடிவமாக, காலம் காலமாய்த் தொடர்ந்து வரும் அத்தனை வரலாற்றின் அடையாளங்களோடும் தமிழ்த்தேசியம் புத்துயிர் பெறுகின்ற பேரெழுச்சி நிகழ்வாக அமைய வேண்டும்.

எம் தாய் நிலத்திலாயினும், புலம்பெயர்ந்த தேசங்களிலாயினும், தமிழ்த்தேசியம் நோக்கிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் தமிழர் அமைப்புக்கள் தங்களது செயற்பாடுகளுக்கேற்ப முள்ளிவாய்க்கால் நினைவு நாள் போன்ற

23


HARI REAL ESTATE

A TRADITION OF TRUST

## வீடு / காணி விற்பனைக்கு



திருநெல்வேலி கலாசாலை வீதியிலிருந்து 200Mtr உட்புறமாக இரண்டு புதிய வீடுகள் குடியிருப்பதற்கு தயார் நிலையில் விற்பனைக்குண்டு ...

- கொக்குவில் கிழக்கு உடையார் வீதியில் 1¼ பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு.
- யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, வேம்படி சந்திக்கு மிக அருகில் வணிகத் தேவைக்கேற்ற 2 ¼ பரப்பு வெற்றுக்காணி சுற்றுமதிலுடன் விற்பனைக்குண்டு
- தட்டாதெரு சந்தியிலிருந்து 200Mtr உட்புறமாக 1½ பரப்பு வெற்றுக் காணி சுற்றுமதிலுடன் விற்பனைக்குண்டு.
- மண்டைதீவு 08ம் வட்டாரத்தில் 50 பரப்பு வெற்றுக்காணி, நன்னீர் வளத்துடன் விற்பனைக்குண்டு.

"ஹரி றியல் எஸ்டேட்"

இல. 10A, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி +94 (021 221 4422

மொபைல் + 94 70 300 4000

முகநூல் harirealestate.lk

POWERED BY HARI

(C-2313)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.